## கவிஞர் குலோத்துங்கனின்

# மானுட யாத்திரை

## காவிய வானில் புதிய தாரகை

முனைவர் சு.கு. பன்னீர்செல்வம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
International Institute of Tamil Studies

# கவிஞர் குலோத்துங்கனின் 'மானுட யாத்திரை' : காவிய வானில் புதிய தாரகை

முனைவர் சு.கு.பன்னீர்செல்வம்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை – 600 113

முனைவர் வா.செ. குழந்தைசாமி அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர் : முனைவர் வா.செ. குழந்தைசாமி)

வரிசை எண். 4

## BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title of the Book | : | Kavin̄ar Kulōttuṅkaṉiṉ māṉuṭa yāttirai Kāviya vāṉil putiya tārakai |
| Author | : | Dr. S.K. Panneer Selvam<br>Assistant Professor<br>Dept. of Education<br>Bharathidasan University<br>Tiruchirappalli - 620 024 |
| General Editor | : | Dr. K.A. Gunasekaran<br>Director<br>International Institute of Tamil Studies<br>Tharamani, Chennai-600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus<br>Chennai - 600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 687 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2010 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | xiv+96 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs.50/- (Rupees Fifty Only) |
| Printed by | : | Powerman Printers<br>6/15, Dr. Radhakrishnan Nagar<br>3rd Street, Korukkupet<br>Chennai - 600 021 |
| Subject | : | A study of the epic of poet Kulothungan |



அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று

**பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்**
**இயக்குநர்**
**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**சென்னை - 600 113**

## அணிந்துரை

**கவிஞர் குலோத்துங்கனின் 'மானுட யாத்திரை': காவிய வானில் புதிய தாரகை** எனும் இந்நூலை எழுதியுள்ள முனைவர் சு.கு. பன்னீர்செல்வம் 'புனிதரைப் போற்றுவோம்', 'கனவும் துணிவும்', 'ஈழமா ஈமப் பூமியா', 'வையத்தின் மையம்', 'அறம்பாடும் புறநடையாளன்', 'கை தவமோ செய்தவமோ', 'ஏகத்தின் இரு செம்பாதிகள்' என இயல்கள் பிரித்துக் குலோத்துங்கனின் கவிதைகளை அணுகியுள்ளார்.

**புனிதரைப் போற்றுவோம்** எனும் முதல் இயலில் சீனா, இந்தியா, எகிப்து, அரேபியா, கிரேக்கம், மெசபடோமியா எனும் நாடுகளில் உதயமான கருத்தியல்களை உள்வாங்கிய நிலையில் அறிஞர்களைப் போற்றுகிறார். அத்தகையோர் தரத்தில் மானுட வளர்ச்சிக்குப் பாடுபட்டு வரும் கவிஞரின் அறிவியல் கருத்துருக் களைத் திரட்டித் தொகுத்துத் தந்துள்ளார்.

**விளைவினில் நன்மை இன்றேல்**
**வெற்றியில் பயனொன்றில்லை**

எனும் முத்திரை பதிக்கத் தக்கதும் சிந்தனை பயக்கத் தக்கவையும் ஆன கவிதைகளைப் படைத்துள்ள கவிஞரைப் புனிதர் எனப் போற்றுவது பொருத்தமாகவே அமைகிறது.

**கனவும் துணிவும்** என்பதில்

**புதுமையின் படையெடுப்பைப்**
**பழக்கங்கள் எதிர்த்துப் போரில்**
**இதுவரை வென்றதாக**
**எங்குமே சரிதையில்லை**

எனப் பாடும் கவிதை வரிகளுக்குப் பொருத்தமான தலைப்பாகவே அமைகிறது.

ஈழத்தில் மனிதப் படுகொலைகள் தொடர்ந்து நடந்து வந்த நிகழ்வுகளைக் கண்டு பலரும் மனம் பதைத்தனர்

**கற்றவர் தடுக்கவில்லை**
**கலைஞர்கள் எதிர்க்கவில்லை**

எனத் தொடங்கி, சமயவாதிகள், மனித நேயர்கள், தத்துவவாதிகள், எழுத்தாளர்கள் யாரும் தடுக்கத் தோள் கொடுக்கவில்லையே எனச் சொல்லும்போது உலகை இயக்கும் இயக்கவாதிகள் ஈழத்தில் நடந்த படுகொலைகளைத் தடுக்காது போயினர் என மனம் குமுறுகிறார்.

வையத்தின் மையக் கருத்தியல் குறித்துப் பேசும் கவிஞர் வையகக் காட்சிகளின் கோடி இன்பத்தைக் காணவே இப்பிறப்பு எப்போதும் வேண்டும் எனும் குரலில் சமயச் சிந்தனாவாதிகளின் இயல்பான குரல்களிலிருந்து வேறுபடுவதைக் காணமுடிகிறது.

**அறம்பாடும் புறநடையாளன்** என்பதில் முன்னவர் அனைவரும் முனிவரல்லர், முனிவரென நின்றோரும் கடவுளல்லர் என்று சிந்திக்கவைக்கும் கவிஞர் **சிந்தையும் தோளும் சேர்ந்தது மனிதம்** என்று இரத்தினச் சுருக்கமாகக் கூறும் சொல்வளம், சிந்தனைவளம் பிற கவிஞர்களிடமிருந்து குன்றென உயர்ந்து நிற்க வழி செய்துள்ளது.

கைதவமோ செய்தவமோ எனும் இயலில் கல்வி கண்டவனைக் கண்டு கடவுளும் வெட்கி விடுவான் எனக் கூறும் கவிஞர் 'மாற்ற மொன்றில்லா வாழ்வை மானுடம் ஏற்பதில்லை' எனும் கருத்தியல் போன்ற அறிவியல் சிந்தனைகளைக் கொட்டிக் கொட்டிக் கவிதைகள் மிளிரும் கவிஞரின் கைவண்ணத்தையும் கருத்தியல் வண்ணத்தையும் அவரது கவிதைகளைப் பயில்வோர் மறக்கமாட்டார்கள்.

புதையலாய் இயற்கை அறிவியல் தமை ஆட்கொண்ட அடியவர் போன்ற பல தொடர்கள் தொடர்ந்து வியக்க வைத்துச் சுவைக்கத் தக்க கவிதைகள் ஆகும்.

**ஏகத்தில் இரு செம்பாதிகள்** எனும் இயலில் பெண்ணியத்தைப் போற்றும் சிந்தனைகள் பதிவு செய்யப் படுகின்றன.

**ஈண்டுனக் குவமை தேடின்**
**இறைவனும் 'எளியனம்மா'**

என இறைவனை உவகை கொள்ளும் கவிஞரின் சிந்தனைகளைத் தனித்துக் கவனிப்போமெனில் பாரதிதாசன், பெரியார் போன்றோரின் சிந்தனைகளுடன் ஒட்டிச் சிந்திக்க வைக்கும் தன்மையனவாக அமைகின்றன. பெண்மையைக் காவியமாகப்

பார்க்கும் கவிஞர் புவி போற்றும் பெட்டகம் என்கிறார். பெண்மையின் வலியது வேறொன்றுமில்லை எனத் தொடர்ந்து எழுதும் கவிஞரின் பெண்மை போற்றும் திறன் பெண்களே தங்களை அறிந்து கொள்ள இடமளிப்பவையாகக் குலோத்துங்கனின் கவிதைகள் குறித்த 'இந்தநூல்' அமைகிறது.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **இந்து சமய அறநிலையம் மற்றும் தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு சுப. சண்முகநாதன்** அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் **தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு. து. நா. இராமநாதன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவினை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர் மற்றும் கணிப்பொறியாளர் திருமதி பா. கௌசல்யா ஆகியோருக்கும் என் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த பவர்மேன் அச்சகத்தாருக்கு என் பாராட்டுகள்.

**இயக்குநர்**

# முன்னுரை

கவிதை என்பது, உளநிலைப்பட்ட (A Matter of mind and heart) ஒன்று. அது கற்பனைக்கு இடம் தருவது. கற்பனைகளும் உணர்வுகள் (Feelings), உணர்ச்சிகளுடன் (Emotions) பின்னிப்பிணைந்து கிடப்பன. மனித உணர்வுகள் கவிதைக்குப் பொருளாக அமைகின்றன. புராதன கிரேக்கக் கவிதை முதல், மறுமலர்ச்சிக்குப் பின்னர் (16-ஆம் நூற்றாண்டு) இருபதாம் நூற்றாண்டின் மூன்றாம் நான்காம் பத்துகளில் (Decades) வரை, இலக்கியத்தைப் பொறுத்தவரை லீவிஸ் (Leavis), ரிச்சாட்ஸ் (Richarcls) ஆகியோர் கவிதை பற்றிய இந்தக் கொள்நெறிகளை (Principles) 1930-40களில் விரித்துரைத்தனர். அந்த வழியாகவே தமிழில் இக்கருத்துக்கள் முதனிலைப்படுத்தப்பட்டன. அதனால் இந்த 'உணர்வுப் புனைவுக்' கொள்கை முதனிலைப்பட்டது. தொழிற்புரட்சியின் பின்னர் ஏற்பட்ட சமூக நகர்வுகளின் பின்னர்க் காவிய மரபு (Epic Tradition) ஒதுங்கிப் போய், சூழல் பற்றிய கவிஞர்களின் தனிநிலைப் பதிற்குறிகளே (Responses) கவித்துவத்தின் உயர்நிலை என்பது வலியுறுத்தப்பட்டன (Poetry Largely constitutes the individual response of poets to their environments). அறிவியலும் கவிதையும் ஒன்றுக்கொன்று வேறாயின; அறிவியல் உண்மையின் பாற்பட்டது; கவிதை உணர்ச்சியின் பாற்பட்டது. இரண்டும் ஒன்றோடொன்று இணைவது அரிது; ஆனால் வேறாவது எளிது. ஒரு கவிஞர் அறிவியல் அறிஞராக மாறுவது இயல்பானது அன்று. நாளும் தன்நோக்குக்கொண்டு கவிதை எழுதுவது கடினமானது மட்டுமன்று இயற்கைக்கு மாறானது ஆகும். ஆண்டு முதிர முதிர ஒருவருக்கு அழகு குறைவது போன்று அறிவு பெருகப் பெருக உணர்வு குன்றுவது உண்மையெனில் ஓர் அறிவியல் அறிஞர் ஒரு கவிஞராக மாறி மானுடம் பாடியது விந்தையிலும் விந்தையாகும்.

சிந்தனையை வளப்படுத்தி, அறிவின் தரத்தை உயர்த்தி வாழ்க்கையை உயர்த்துவதே கவிதையின் நோக்கமாக இருக்க வேண்டும். அறியாமையை நீக்குவதும் அறிவை வளர்ப்பதும் ஒரே செயல்தான். மனிதன் சாகாவரம் பெற்றவன் அல்லன். ஆனால் அவன்தான் உலகில் சாகாத பொருள்களைப் படைக்கும் ஆற்றல் பெற்றவன் (Man is not immortal, but he alone can create things that become immortal). அப்படிப்பட்ட அவனது படைப்பு நீண்ட ஆயுள் பெற்று நிற்கும். கருத்துகளுக்கு இருக்கும் ஆயுள் கல்லாலும், மண்ணாலும் ஆன பொருள்களுக்கு இல்லை. அரசியல் அமைப்புகள் மாறலாம்; ஆட்சி முறைகள் மாறலாம்; பொருளாதாரத் தத்துவங்கள் மாறலாம்; சமுதாயப் பழக்க வழக்கங்கள் மாறலாம். அம்மாற்றங்கள் காலத்திலும் இடத்தாலும் நிகழலாம். மேலெழுந்தவாரியான இத்தோற்றங்களைக் கடந்து மனித

சமுதாயத்தின் வாழ்வின் ஆழத்தில் நிலைத்து நிற்கும் அடிப்படைகள் (Unshifling Foundations) சில உள்ளன. அதில் மானுடமும் அடங்கும். மானுடம் இவரது இலட்சியமாகின்றது. குலோத்துங்கன் கவிதைகள் பற்றி நடந்த ஆய்வரங்கொன்றில் கருத்துரை வழங்கிய இலக்கிய அறிஞர்கள் ஒருமித்த குரலில், இவரது பிரதான கவிதை உந்துதலுக்கான அடிப்படைச் சமர்ப்பண வரிப்பாகக் (Commitment) கொள்வது மானுடமே என்று எடுத்துக் கூறியுள்ளனர்.

'புலமைத்துவம்' என்பது Intellectualism என்பதற்கான தமிழ் வடிவமாகிறது. குலோத்துங்கன் கவிதைகள் அடிப்படையில் புலமைத்துவப் படைப்புகளே. அதாவது உலகை அவர் பார்க்கின்ற முறைமை தன் பயில்வுப் புலம் சார்ந்த ஒரு கற்றிவாளனுக்கு இயல்பாக வரும் நோக்கில் பார்க்கின்றார். புலமைத்துவக் கவிதைகள் எண்வகை இரசங்களின் நிலைப்பட்டதல்லதான். ஆனால் அந்தப் புலமைத்துவத்துக்கு ஓர் உணர்வு முனைப்பு, உத்வேகம் (Fervour) உண்டு. குலோத்துங்கன் என்ற கவிஞனுக்கும் அந்தக் கவிஞனுள் உறையும் மனிதனுக்குமிடையே ஒரு மெல்லிய பிரிகோடு (Dividing Line) உண்டு. எந்த ஒரு மனிதனும், அந்த மானுட உணர்ச்சிகளுக்குக் கட்டுப்பட்டவன் ஆகின்றான். இதனை இன்னொரு வகையாக எடுத்துக் கூறலாம். புலமையாளனும் உணர்ச்சி நிலைப்படுபவனே. ஆனால் அந்த நிலைப்பாடு தன் ஆளுமையை உடைப்பதாக அமையவிடான். கால்நடை மனிதன் யுகத்தில் தொடங்கி, கணினி யுகம் வரை பல நூறாயிரம் ஆண்டுகள் பயணித்து, இன்னும் தொடரும் மானுடப் பயணத்தின் இன்ப துன்பங்கள், உயர்வு தாழ்வுகள், வெற்றி தோல்விகள், எதிர்பார்ப்புகள், ஏமாற்றங்கள், காடெனின் கடந்து மலையெனின் ஏறி, ஆறெனின் நீந்தித் தளராது தனது முடிவை நோக்கிச் செல்லும் முயற்சிகள் அனைத்தையும் ஒரு காவியத்தின் கருப்பொருளாக்கி, கவிதை வடிவில் இலக்கிய உலகிற்கு அளிக்க வேண்டும் என்ற கனவும் அதைச் செயலாக்கும் துணிவும் வேறெந்தக் கவிஞனுக்காவது, வேறெந்த மொழியிலாவது உண்டா என்ற வினாவுடன் உலக இலக்கியப் பரப்பைத் தேடிப்பார்த்தால் ஏமாற்றமே மிஞ்சும். மானுட முன்னேற்றம் என்பது ஒரு கதை போல் நடப்பதன்று. அது கல்லும் முள்ளும் நிறைந்த வரலாறு. கற்பனை வரலாற்றுக்குத் துணை நிற்காது; அணி செய்யாது. வரலாற்றைக் களங்கப்படுத்தவும் கூடும். எனினும் மானுட யாத்திரையைத் தேர்ந்தெடுத்துத் தம் முயற்சியில் பலரும் பாராட்டும் வண்ணம் வெற்றியும் பெற்றுள்ளார்.

கேரளத்தின் மகாத்மா காந்தி பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் V.R.ஆனந்தமூர்த்தி சிறந்த கன்னட எழுத்தாளர். சாகித்ய அகாதமியின் தலைவராக இருந்தவர். பத்மபூஷன், ஞானபீட விருதுகள் பெற்றவர். விருப்பு வெறுப்பின்றி இலக்கியப் படைப்புகளை மதிப்பிட வல்லவர். அவர் கூறுகிறார்:

> குலோத்துங்கன் கவிதைகள் அறிவியல் கருத்துகளுக்கும் அழகான ஆக்கப்பூர்வமான கற்பனைகளுக்கும் பாலம் அமைக்கின்றன. அறிவுக்குப் புறம்பானவைகளைக் கண்டித்து மேலானவற்றில் கவனம் செலுத்துகிறார். Black மற்றும் Yeats போன்ற மேனாட்டுக் கவிஞர் வரிசையில் இடம்பெறத் தக்கவர். புனிதமானது, புதிரானது, வெளிப்படையாக விவரிக்க முடியாதவை என்பனவெல்லாம் இவர் கவிதைகளில் இடம்பெறவில்லை. வாழ்க்கைப் பயணத்தில் ஏற்படும் எல்லா வாழ்க்கைக் கூறுகளையும் கணக்கில் கொண்டு நடைமுறைக்கு உகந்தவைகளை மட்டுமே பாடுகிறார். மனிதனே அவருடைய பாடுபொருள். மனித இனம் குறிப்பாகத் தமிழினம் உலகில், உயர்ந்த நிலையில் தலை நிமிர்ந்து வாழக் கடைப்பிடிக்க வேண்டியவற்றைப் பாடுகிறார். இயற்கையை அடிமை கொள்ளுதல் அவரிடமில்லை. வாழ்வியல், நாகரிகம் உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பதே அவரது குறிக்கோளாக இருக்கிறது.

என்று கூறுகிறார். இந்த மானுட யாத்திரை இருளிலிருந்து ஒளியை நோக்கி, அறியாமையிலிருந்து அறிவுவளர்ச்சியை நோக்கிச் செல்லும் யாத்திரை. இதில் இதுவரை எத்தனையோ மெய்ஞ்ஞானிகளும் விஞ்ஞானிகளும் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் கண்டறிந்த கருத்துகளாலும் கண்டுபிடித்த கருவிகளாலும் இந்த யாத்திரை நடந்து கொண்டு வருகிறது.

இதுவரை பாடியவர்களெல்லாம் பெரும்பாலும் தெய்வங்களையும் மன்னர்களையும் பாடினார்கள். மானுட சமுதாயத்தைப் பாடுபொருளாகக் கொண்டு பாடினோர் சிலர். ஒவ்வொரு திறத்தை எடுத்துக் கொண்டு பாடினோர் இருக்கலாம். ஆனால் ஒட்டுமொத்தமாக உலக மானுட இனம் முழுவதையும் எடுத்துக்கொண்டு தோற்றம் முதல் இன்று வரை அதன் யாத்திரையை அது வளர்த்து வரும் வரலாற்றை வரன் முறையாகப் பாடினோர் இலர். கவிஞர் குலோத்துங்கன் மட்டுமே அவ்வாறு பாடியுள்ளார். இம்மானுட யாத்திரை அருமையான முழுமையான பணி. அனுபவம் கனிந்த நாளில் தமிழ் இனத்திற்கு மட்டுமின்றி மனித இனம் முழுமைக்கும் வழங்கிய இலக்கியப் படையல் ஆகும். இப்படையல் ஓர் அறிவு யாத்திரையாகும் எனின் மிகையாகாது. மானுடயாத்திரை என்னும் இத்தமிழ்க் காப்பியம் உலக இலக்கிய வரிசையில் உன்னத இடத்திற்கு உரியதாகும். வித்தகக் கவிஞர் குலோத்துங்கன் பற்பல கவிதை நூல்களைப் படைத்துப் பெருமைப் படுத்தியுள்ளார். எனினும் இக்காப்பியம் ஒன்றே அவருடைய புலமைக்கும், மேதைமைக்கும், கவிவன்மைக்கும் பெருஞ்சான்றாக நெடிது நிற்கும் என்பதில் யாதொரு ஐயத்திற்கும் இடமில்லை. இக்காப்பியம் பாடுபொருளால் பாடிய உத்தியில் இதற்கு இணையான காப்பியம் அல்லது இலக்கியப்படைப்பு யாதேனும் தற்போது தமிழ் இலக்கிய உலகில் தென்படுகிறதா என்ற வினாவிற்கு விடைகூற இயலவில்லை.

கவிஞர் குலோத்துங்கன் இளமையில் 'பாரதிதாசன்' பரம்பரை என்னும் முத்திரையோடு அறிமுகமானார். அவரிடம் 'பாரதி பரம்பரை'

எனக் குறிக்கத்தக்க இயல்புகளும் நிரம்பவே காணப்படுகின்றன. ஆயினும் அவர்கள் இருவரிலும் மேற்படி வளர்ந்துவிட்ட இன்றயை காலப்பகுதியை அவர் எதிரொலிப்பதால் அவர்களின் மறுபதிப்பாக மாறிவிடாமல் வளர்ச்சி நிலை காட்டுகிறார். இவர் ஓர் அறிவியல் அறிஞர்; பொறியியல் வல்லுநர்; சிறந்த துணைவேந்தர்; உலகளாவிய மதிப்பிற்குரியவர் மானுடம் பாடும் மாபெரும் கவிஞர் எனும் மாண்பு தமிழ் உலகில் இன்னும் உரிய அளவுக்கு உணரப்படாதிருக்கிறது. சிறந்த கவிதைக்கு இலக்கணம் படைத்து முடித்தபிறகும் நம் நினைவில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கும் கருத்து, சொல், தொடர்கள் மூலம் திரும்பத் திரும்ப உணரப்படும் தன்மையாகும். குலோத்துங்கன் கவிதைகளில் சொற்கள், தொடர்கள், பாடலடிகள் எனப் பற்பலவற்றை நினைவில் நிறுத்தலாம். நினைவில் நிறுத்த வேண்டும் என்னும் ஆர்வத்தைத் தூண்ட வல்லன என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும் என்கிறார் தமிழறிஞர் வெள்ளக்கோவில் மீனாட்சி சுந்தரனார். இன்றும் நாளையும் இலக்கியப் படைப்பாளிகள் இலக்கியக் கர்த்தர்கள் விஞ்ஞானத்தைப் புறக்கணிக்க இயலாது. குலோத்துங்கன் விஞ்ஞானத்தைக் கவிதையாக்கவில்லை. விஞ்ஞானத்தைப் பல ஆண்டுகள் பயின்று அதிலே ஊறித் திளைத்தமையினால், விஞ்ஞானத்தின் உயர்வை, பார்வையை இலக்கிய ஆக்கத்திற்குப் பயன்படுத்துகிறார். இவரது படைப்பு இலக்கிய வகைகளில் இதுவரை வேறு எவரும் எட்டாத சிகரம். தமிழிலும் ஆங்கிலத்திலும் சரளமாகப் பேச, எழுத வல்லவர். ஆங்கிலத்தின் அறிவாற்றலால் அறிவுத் துறைகள் அனைத்திலும் ஆர்வம் மிகுந்தவர்; ஆற்றல் மிக்கவர். இந்தியத் திருநாட்டில் பல்வேறு உயர்பதவிகளில் பணிபுரிந்து பழுத்த அனுபவம் பெற்றவர். தன்னை அடையாளம் காட்டித் தலை நிமிர்ந்து நிற்பவர். தனது தத்துவப் பார்வை என ஒன்றைத் தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்தியவர். அவருடைய கவிப்புலமையும் கருத்து வளமும் மானுட யாத்திரையில் பாகத்திற்குப் பாகம் உயரே செல்கின்றன.

அறிதலும், தேடலும், விடாமுயற்சியும் அயராத உழைப்பும் கொண்ட வா.செ.குழந்தைசாமி 1946-இல் கவிதை எழுதத் தொடங்கினார். அப்பொழுது அவருக்கு வயது பதினேழு. அன்று முதல் இன்றுவரை 'குலோத்துங்கன்' என்ற புனைபெயரில் கவிதைகளை எழுதிக் கொண்டிருக்கிறார். வெவ்வேறு காலப்பகுதிகளில் எழுதிய கவிதைகள் 'குலோத்துங்கன் கவிதைகள்', 'வளர்க தமிழ்', 'வாயில் திறக்கட்டும்', 'விண்சமைப்போர் வருக', 'கதவுகள் காப்பதில்லை', 'விதியே விதியே', 'தமிழ்ச்சாதியே', 'அணையாதீபம்' என ஏழு நூல்களாக வெளியிடப் பட்டுள்ளன. மானுடத்தின்மீது குலோத்துங்கன் கொண்டுள்ள ஈடுபாட்டினால் இவ்வாண்டு (2010) 'மானுட யாத்திரை' என்ற நூல் மூன்று தொகுதிகளாக வெளியிடப்பட்டது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு 'மானுட யாத்திரை: காவிய வானில் புதியதாரகை' என்ற இச்சொற்பொழிவு நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலிற்குக் குலோத்துங்கன் கவிதைகள் நூலிலிருந்தும் பொருத்தமான சில கவிதைகள் எடுத்தாளப்பட்டுள்ளன.

**சு.குழந்தைவேல் பன்னீர் செல்வம்**

## ஆசிரியர் குறிப்பு



முனைவர் சு.கு.பன்னீர்செல்வம், சேலம் மாவட்டம், வாழப்பாடி சிங்கபுரத்தில் குழந்தைவேல் - மீனாட்சி தம்பதியருக்குப் பிறந்து, தனது தொடக்கக்கல்வியை விழுப்புரம் மாவட்டம், பெத்தாசமுத்திரம் கிராமத்திலும், உயர்நிலைப் பள்ளிக்கல்வியை நயனார்பாளையத்திலும் கற்றார்.

இளங்கலைப் பட்டத்தைச் சென்னைப் பல்கலைக்கழகமும், முதுகலைப் பட்டம், இளங்கலை மற்றும் முதுகலைக் கல்வியியல் கல்விப் (B.Ed&M.Ed.) பட்டங்களை அண்ணாமலைப் பல்கலைக்கழகமும், ஆய்வியல் நிறைஞர் (M.Phil) பட்டத்தை மதுரை காமராசர் பல்கலைக்கழகமும் முனைவர் பட்டத்தைப் பாரதியார் பல்கலைக்கழகமும் அளித்துள்ளன. தனது பள்ளித் தமிழாசிரியர் **புலவர் கு.அண்டிரன்** அவர்களது வழிகாட்டுதலில் ஆசிரியர் பணியைத் தேர்ந்தெடுத்தார். 1991இல் புதுதில்லி கரோல்பாக் பள்ளியில் ஆசிரியர் பணியைத் தொடங்கினார். பின்னர்ப் பெரம்பலூர் தந்தைரோவர் மேல்நிலைப்பள்ளியில் இடைநிலை ஆசிரியராகப் பணியாற்றி 1995இல் ஆசிரியர் தேர்வுவாரியம் மூலம் விழுப்புரம்மாவட்டம் அத்தியூர்திருக்கை தொடக்கப்பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினார்.

1996இல் சேலம் மாவட்டம் சிங்கபுரம் அரசினர் மேல்நிலைப் பள்ளியில் பணியாற்றியபோது 2000இல் ஆசிரியர் தேர்வுவாரியத்தால் ஈரோடு மாவட்டம், பெருந்துறை அரசினர் ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் (DIET) விரிவுரையாளர் பணியில் சேர்ந்தார். அந்நிறுவனத்தின் முதல்வர் **முனைவர் க.நா.இளங்கோவன்** வழிகாட்டுதலின்படி செயல்பட்டு 50க்கும் மேற்பட்ட தேசிய, சர்வதேசக் கருத்தரங்குகளில் பங்கேற்றுத் தனது ஆய்வுக் கட்டுரைகளை அளித்துள்ளார். புதுதில்லியிலுள்ள தேசியக்கல்வி நிர்வாகத் திட்டமிடல் மற்றும் மேலாண்மைப் பல்கலைக் கழகத்தில் (NUEPA) பட்டயம் பெற்ற தமிழகத்தின் 10வது நபர். 50க்கும் மேற்பட்ட பள்ளி ஆசிரியர்களின் செயலாராய்ச்சிகளுக்கு ஆய்வு நெறியாளராகப் பணியாற்றியுள்ளார். தமிழகஅரசு இவருக்கு 2006ஆம் ஆண்டு சிறந்த கல்வியாளர் விருதினை வழங்கியுள்ளது. 2007 முதல் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் கல்வியியல்துறை உதவிப் பேராசிரியராகப் பணியாற்றுகிறார். கல்வியியல் தொடர்பான கருத்துக்களை வெளியிடவும் நுட்பங்களைப் பெறவும் ஜெர்மனி, இங்கிலாந்து, ஐக்கிய அரபு எமிரேட் உள்ளிட்ட நாடுகளுக்குச் சென்றுள்ளார். பல ஆய்வியல் நிறைஞர் மாணவர்களுக்கு நெறியாளராக இருந்துள்ளார்.

# உள்ளே

| | | பக்கம் |
|---|---|---|
| | அணிந்துரை | |
| | முன்னுரை | |
| | ஆசிரியர் குறிப்பு | |
| 1. | புனிதரைப் போற்றுவோம் | 1 |
| 2. | கனவும் துணிவும் | 13 |
| 3. | ஈழமா? ஈமப்பூமியா? | 18 |
| 4. | வையத்தின் மையம் | 33 |
| 5. | அறம்பாடும் புறநடையாளன் | 42 |
| 6. | கைதவமோ செய்தவமோ | 59 |
| 7. | ஏகத்தின் இரு செம்பாதிகள் | 80 |
| 8. | வா. செ. குழந்தைசாமி அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு | 91 |
| | துணை நூல்கள் | |

# 1. புனிதரைப் போற்றுவோம்

மானுடத்தின் மகத்துவத்தை மனம் திறந்து பாடவேண்டும் என்ற ஆர்வம் நெஞ்சில் குடிகொள்ள, அதனை ஒரு குறுங்காவியமாகப் படைத்துள்ளார் கவிஞர் குலோத்துங்கன் அவர்கள். கவிஞர் குறுங்காவியம் என்று எண்ணி இயற்றிய இக்காப்பியத்தில் இன்று வரை யாரும் பாடத் துணியாத அறிவியலை ஒரு பாகமாகக் கொண்டு பாடியுள்ள திறம், நெஞ்சுரம் எல்லோரையும் வியக்க வைக்கின்றது.

குலோத்துங்கன், ஓர் அறிவியல் அறிஞர்; தொழில்நுட்பம் கற்றவர். அறிவியல் கல்வி தந்த துணிச்சல்தான் இவரை அறிவியலைப் பாட வைத்துள்ளது. அறிவியல் அறிஞர்கள் வையகம் தழைக்க வந்த மானுடர். முனிவர்களும், யோகிகளும் ஆற்றிலும், குளத்து மேட்டிலும், காட்டிலும் தவம் புரிந்து தம் வலிமையைப் பெருக்கிக் கொண்டதாகப் படித்துள்ளோம். இத்தகைய தவசிகளால் பெற்ற பயனை விட இந்த மண்ணுலகம் அறிவியல் அறிஞர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆகியவர்களால் பெரும்பயன் அடைந்துள்ளது. எனவே அவர்களை "ஆய்வுத்தவசிகள்" என்று பாடி மகிழ்கிறார் கவிஞர். 'தரணித்தேவர்' என்று போற்ற வேண்டும் என்கிறார். அறிவியல் களத்தில் இருப்போர் அனைவரும் புனிதர்கள் என்கிறார். இலக்கியக் கவிஞர்கள் இதுவரை யாரும் அறிவியல் அறிஞர் ஒருவரைக்கூடப் போற்றிப் பாடவில்லை. எனவே, நான் இவர்களின் உழைப்பின் மாண்பினை உணர்ந்து இவர்களைப் பாடுகின்றேன் என்று பிரகடனப்படுத்துகிறார். ஏனோதானோ என்று பாடவில்லை. சொல்லும் பொருளும் நடமாடும் கவிதைகளால் பாடியுள்ளார். படிப்போர் நெஞ்சில் எழில் ஓவியம் தீட்டி விடுகிறார். அறிவியல் யாத்திரை பற்றிய கவிதைகளைப் படிக்க விரையும் முன்பு கவிஞர் அவர்கள் இப்பாகத்திற்கு வரைந்துள்ள முன்னுரை அனைவரும் படிக்க வேண்டிய ஒன்றாகும். ஆயிரம் ஆண்டு அறிவியல் வளர்ச்சியைச் சிறுகதை போல் படிப்போர் மனங்கொள்ளுமாறு கூறியிருக்கிறார். அதன் அவசியம் கருதி, அம்முன்னுரையின் பயன்கருதி அவர் கருத்துகள் அப்படியப்படியே இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளன.

அறிவியல் என்ற சொல், அடிப்படையில் அறிதல் என்பதில் இருந்து வந்தது. Science என்ற ஆங்கிலச் சொல் Scienta என்ற இலத்தீன் சொல்லில் இருந்து உருவாக்கப்பட்டது. இரண்டு சொற்களுக்குமே அறிதல், கற்றல் என்பதுதான் பொருள். அறிதல், இங்கு இயற்கையின் விதிகளை அறிதல் என்ற பொருளில் பயன்படுத்தப்படுகிறது. அறிவதற்குப் பயன்படுத்தும் அணுகுமுறையும் அறிவியல் என்ற சொல்லின் ஒரு பகுதியாகும். அறிவியல் அணுகுமுறை என்பது மனிதனிடமிருந்து விலகி நிற்பதோ, மனிதனுக்கு அந்நியமானதோ அன்று. மனிதன் சிந்திக்கத் தொடங்கிய காலத்தில் இருந்து அவன் அறியாமலேயே அவனுடைய வாழ்வில் இடம்பெற்று வருவது. அன்றாட வாழ்வில் நாம் சில முடிவுகளை எடுக்கிறோம். சில நிகழ்வுகளைப் புரிந்து கொள்ள முயல்கின்றோம். இச்செயலில் நாம் எந்த அளவிற்கு நமது பகுத்தறிவைப் பயன்படுத்துகிறோம்; பகுத்தறிவின் வழி முடிவு காண்கிறோம் என்பதைப் பொறுத்ததே அறிவியல் அணுகுமுறை என்பது. அறிவியல் என்ற சொல் இன்று பரவலாக எல்லா அறிவுத்துறைகளிலும் பயன்படுத்தப்படுகிறது. என்றாலும், நாம் இங்கு ஐம்பூத உலகு பற்றிய நிகழ்வுகளையே மனத்திற் கொண்டு பேசுகிறோம்.

## நாற்புற நாடுகளில் அறிவியல்

இன்று நாம் அறிவியல், தொழில்நுட்பம் என அடையாளம் காணும் அறிவுத்துறை மேலைநாடுகளில் தோன்றி வளர்ந்ததுதான் என்றாலும் பண்டைய நாகரிகங்கள் அறிவியலோடு தொடர்புடைய சிலதுறைகளில் வளர்ச்சி கண்டிருந்தன. அவற்றுள் கீழைநாடுகள் ஐரோப்பாவின் மறுமலர்ச்சிக்காலம் வரை மேலைநாடுகளை விடவும் கணிசமான அளவில் முன்னேறியிருந்தன. அறிவியலின் ஆரம்பக் காலத்தில் வானவியலும் சமயமும் (Astronomy and Religion) இரண்டறக் கலந்திருந்தன. நாள்தோறும் இடம்பெறும் இரவு-பகல், ஆண்டுதோறும் நிகழும் பருவமாற்றம், வானத்தில் ஒளிரும் ஞாயிறு, சந்திரன், தாரகைகள் போன்றன மனிதனின் கவனத்தை ஈர்த்ததில் வியப்பில்லை. நீண்ட காலம், சமயநம்பிக்கைகள் இணைந்த வானவியல் கலைகளின் அரசியாக விளங்கியது.

பண்டைய நாகரிகங்களில் அறிவியல் வளர்ச்சியில் சீனத்திற்கு ஒரு தலையாய இடம் உண்டு. இந்தப் பிரபஞ்சம் முழுமையுமாக அதன் ஒவ்வொரு உறுப்பும் ஒன்றோடொன்று தொடர்புடையது. எங்கு, எது நிகழ்ந்தாலும் அதன் தாக்கம் பிரபஞ்சம் முழுவதும் பிரதிபலிக்கும் எனச் சீனர்கள் நம்பினார்கள். எனவே கோள்களின், தாரகைகளின், இடங்களைப் பற்றி அறிவதிலும் கிரகணங்களை, பருவமாற்றங்களைக் கணிப்பதிலும், ஆர்வம் கொண்டிருந்தனர். ஒவ்வோர் ஆண்டிற்கும் நாள்காட்டி (Calendar) தயாரித்துப் பயன்படுத்துவதிலும் திறன் பெற்றிருந்தனர். வனநூல் சிறப்பான வளர்ச்சி கண்டிருந்தது. சீனர்களைப்

பொறுத்தவரை குறிப்பிடப்படவேண்டிய ஒரு செய்தி: அவர்கள் இந்தப் பிரபஞ்சத்தை இயக்குபவர்கள் என்று கூறி வானவெளியைக் கடவுள்களாலும் பூத கணங்களாலும் நிரப்பவில்லை. பிரபஞ்சத்தின் இயக்கம் அதனுள் இயற்கையாக அமைந்துள்ளது. சக்தியினாலேயே நடைபெறுவதாக நம்பினார்கள். இந்தியா வானவியலில், கணிதத்தில், மிகுந்த முன்னேற்றம் கண்டிருந்தது. சோதிடம் எல்லா நாட்டிலும் வானவியலின் ஒரு பகுதியாகவே இருந்து வந்தது. இன்று நாம் பயன்படுத்தும் எண்களும், எண்கள் அமைப்பும் இந்தியாவில் தோன்றி அரேபியா வழியாக மேலை நாடுகட்குச் சென்றவை என்பது நாம் அறிய வேண்டிய முக்கியமான செய்தியாகும். இந்தியாவில் வானவியலோடு வடிவக் கணிதம் (Geometry), சங்கேதக் கணிதம் (Algebra) ஆகியன பெரிய அளவில் வளர்ந்திருந்தன. இயற்கை நிகழ்வுகள் என வரும்பொழுது அதன் காரணங்களை அறிவதில் இந்தியர்கள் அதிக ஆர்வம் காட்டவில்லை. இந்தியரின் எண்ணமெல்லாம் மறு உலகைப் பற்றியே இருந்தது. 'மறு உலக ஆர்வம்' இந்தியாவின் அறிவியல் வளர்ச்சிக்குப் பெரும் முட்டுக்கட்டையாக விளங்கியது.

எகிப்தும், மொசபடோமியாவும் மேலை நாடுகளில் பிற்காலத்தில் ஏற்பட்ட நாகரிகங்களுக்குத் தொட்டில்களாக விளங்கின. நைல் நதி தந்த வளம் எகிப்தியர் பெற்ற வரம். எகிப்தியரும் சீனர்கள் போலவே பிரபஞ்ச ஒழுங்கை நம்பினார்கள். ஆனால் அது கடவுள்களால் உறுதிப்படுத்தப்படுகிறது என்று கருதினார்கள். எகிப்தியர் இறப்பொடு மனிதன் வாழ்வு முடிந்து விடுகிறது என எண்ணவில்லை. வாழ்வு தொடர்வதாகவே நம்பினார்கள். அதன் விளைவுதான் மாபெரும் பிரமிட் கோபுரங்கள். இறந்தபின் உடலைப் பதனம் செய்து பாதுகாத்தல் போன்ற ஏற்பாடுகள். எல்லாக் கேள்விகட்கும் மத நம்பிக்கை வழியாகவே பதில் கண்டார்கள். அதனால் எகிப்தில் அறிவியல் அவ்வளவாக வளரவில்லை. வளரும் சூழ்நிலை நிலவவில்லை. கணிதமும் வளரவில்லை.

மொசபடோமியாவில் டைக்ரிஸ் (Tigirs), யூப்ரட்டீஸ் (Euphrates), ஆகிய நதிகளின் வெள்ளங்கள் பேரழிவுகளை உருவாக்கின. அதனால் அணைகளும், நீர்த்தடுப்புகளும் பெரிய அளவில் தேவைப்பட்டன. புயல்கள், வெள்ளங்கள் எல்லாம் கடவுள்களின் விருப்பத்தால் விளைவன என நம்பினார்கள். இந்தச் சூழ்நிலை கணிதமும், வானநூலும், தொழில் நுட்ப வளர்ச்சியும் ஏற்படுவதற்கான தேவையை உருவாக்கியது. கணிதம் பெரிய அளவில் வளர்ந்தது. அவர்கள்தான் நிமிடம், வினாடி, டிகிரி, போன்றவற்றை அறுபது (60) என்ற அடிப்படையில் கணிக்கும் முறையை உருவாக்கினார்கள். கி.மு.1700-ஆம் ஆண்டு வாக்கில் பாபிலோனியர் கணிதத்தில் வியக்கத்தக்க முன்னேற்றம் கண்டிருந்தனர். பிதகோரஸ் தேற்றம் அவர்கட்குத் தெரிந்திருந்தது. இங்கு இடம்பெற்ற வளர்ச்சியை, பிற்காலத்தில் கிரேக்கர்கள் பயின்று மேலெடுத்துச் சென்றனர்.

ஏற்கெனவே கூறியது போலச் சீனர்கள் அனைத்தும் இயற்கையில் அடைந்துள்ள விதிகட்கு ஏற்ப இயங்குவதாக நம்பினார்கள். கடவுள்களைக் காரணம் காட்டவில்லை. எகிப்து, பாபிலோனியா, மொசப்டோமிய அறிஞர்கள் ஏதாவது ஒரு வகையில் அனைத்தும் கடவுள் செயல் என்றே கருதினார்கள். அவர்கள் கண்ட காரணங்கள் எல்லாம் சமய நம்பிக்கைகள், மாயவித்தை போன்றவற்றின் அடிப்படையில் இருந்தன. முதன்முதலாகப் பகுத்தறிவின் வழிநின்று இயற்கையை, இயற்கை நிகழ்வுகளைப் புரிந்து கொள்ள முயன்றவர்கள் கிரேக்கர்கள்தாம். கீழைநாடுகளின் அறிஞர்கள் சமய அடிப்படையில் ஆழ்ந்த சிந்தனையாளர்களாகவும், தத்துவ விளக்கங்களைக் கண்டவர்களாகவும் இருந்தனர். இந்த வளர்ச்சியே அவர்கள் பகுத்தறிவின் அடிப்படையில் இயற்கை பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளத் தடையாக இருந்தது. கிரேக்கர்கள் மத்தியில் அப்படிப்பட்ட நுட்பமான சிந்தனைகள் அடங்கிய சமய நம்பிக்கைகள் இடம்பெறவில்லை. மேலோட்டமான சில கருத்துக்கள் இருந்தன. சுதந்திரமான சிந்தனைகட்குச் சமயக் கோட்பாடுகள், நம்பிக்கைகள் தடையாக இருக்கவில்லை. சமயம் சார்ந்த சிந்தனைகளில் வளர்ச்சியின்மையே அவர்கட்கு வரமாக அமைந்தது.

கிரேக்க மரபுப்படி, முதல் இயற்கை தத்துவஞானி தேல்ஸ் (Thales), கி.மு. ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். அவர் எல்லாப் பொருள்களும் ஓர் அடிப்படைத் தனிமப் பொருளில் (Basic element) இருந்து உருவானவை என்றும், அந்தத் தனிமம் நீர் என்றும் கூறினார். அவருக்குப் பின் இரண்டு நூற்றாண்டுகள் கழித்து, நீர், நெருப்பு, நிலம், வாயு ஆகிய நான்கும் அடிப்படைத் தனிமங்கள் என்ற சித்தாந்தம் முன் வைக்கப்பட்டது. அரிஸ்டாட்டில் (Aristotle 384-322BC) இயற்கையை, இயற்கை நிகழ்வுகளை அறிந்து கொள்வதற்கு அவற்றை உற்று நோக்கி அறிவதுதான் (Observation) முறை என்று கருதினார். அதனால் கிரேக்கச் சிந்தனை மரபுச் சோதனைகள் தேவை என்று கருதவில்லை. ஆர்க்கிமிடீஸ் (Archimedes 287-212BC) தலைசிறந்த கணித நிபுணர். நெம்புகோல் விதியை முன் வைத்தவர். கால்குலஸ் (Calculus) என்ற கணிதப் பகுதி பிற்காலத்தில் உருவாவதற்கு வழி வகுத்தவர்.

கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த தாலமி (Ptolemy AD 127-151) சிறந்த கிரேக்க அறிஞர்களில் ஒருவர். இவரும் பூமியை மையமாக வைத்துக் கோள்கள் வலம் வருகின்றன என்ற அரிஸ்டாட்டில் கூறியதை உறுதிப்படுத்தினார். இவர்களுடைய கருத்தைக் கிறித்துவ சமயம் ஏற்றுக்கொண்டது. பல நூற்றாண்டுகள் அறிவியல் வளர்ச்சி தடைபட்டது. மத்திய தரைக்கடல் பகுதியில் உரோமானியர்கள் ஆதிக்கம் மிகுந்த உரோமப்பேரரசு ஏற்பட்ட பின் அறிவியல் வளர்ச்சியிலிருந்த தடை முடிவுக்கு வந்தது என்றும் கூறலாம். உரோமானியர் கிரேக்க நாகரிகத்தை, அவர்களுடைய அறிவியலை, தத்துவத்தைப் பெரிதும் மதித்தார்கள். எனினும், தத்துவ விசாரணையில்,

ஆய்வு ஈடுபாட்டில் அவர்கள் வாழ்க்கைமுறை செல்லவில்லை. அவர்களுடைய அக்கறை நடைமுறை வாழ்வின் தேவைகளை நிறைவேற்றும் அணுகுமுறையைக் கொண்டதாகவே இருந்தது. ஐந்தாம் நூற்றாண்டில் உரோமானியப் பேரரசு வீழ்ந்தது.

அரேபியர்கள் ஏழாவது நூற்றாண்டில் ஒரு பெரிய இசுலாமியப் பேரரசுக்கு அடிக்கல் நாட்டினர். அறிவுத்துறையில் பெரிய மறுமலர்ச்சி ஏற்பட்டது. இந்தியக் கணித நிபுணர்களோடு தொடர்பை ஏற்படுத்திக் கிரேக்க நூல்களைப் பெரிய அளவில் மொழிபெயர்த்தனர். புதிய துறைகளையும் உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். கொரான், மருத்துவத்தை இறைவன் ஏற்புக்கு உகந்த கலையாக மதித்தது. வானவியலும், சோதிடமும் முக்கியமான இடத்தைப் பெற்றன. 15-வது நூற்றாண்டு அறிவியலின் மறுமலர்ச்சிக் காலமாகும். இத்தாலியில் அரும்பிய மறுமலர்ச்சி இதழ்விரித்து, ஐரோப்பா முழுவதும் பரவியது. அச்சு இயந்திரம் மறுமலர்ச்சிக் காலத்தில்தான் கண்டுபிடிக்கப்பட்டது. காகிதம் உற்பத்தி செய்யும் உத்தி பிறந்தது. அச்சுக்கலையும் காகிதமும் மறுமலர்ச்சித் தீபத்திற்கு எண்ணெய்யும் திரியுமாக அமைந்தன. இந்தக் காலத்தில்தான் இயற்கையை மனிதன் தனக்கு ஏவல் செய்யுமாறு பணிக்கலாம் என்ற தத்துவம் ஐரோப்பாவில் உருவம் பெற்றது. ஐரோப்பா முன்னடி எடுத்து வைத்துக் கீழை நாடுகளை மிஞ்சி மேலே நடக்கத் தொடங்கியது. அன்று முன்னடி வைத்தவர்கள் திரும்பிப் பார்க்காமல் சென்று கொண்டேயிருக்கின்றனர். அன்று பின்தங்கிய கீழை நாடுகள் அவர்களை எட்டிப்பிடிக்க ஓடுகின்றன. இன்னும் அவர்களை எட்டிப்பிடிக்க முடியவில்லை. பந்தயம் தொடர் கதையாகிறது. மறுமலர்ச்சிக் காலத்தில் கில்பர்ட் (W.Gilbert 1544-1603), கலிலியோ (Galileo Galilei 1564-1642) போன்றவர்கள் சோதனை முறையையும் அனுமான தர்க்க முறையையும் (Inductive Logical Method) அறிமுகப்படுத்தினர். இவர்களுள் கலிலியோவின் பணி மகத்தானதாகும். ஐன்ஸ்ட்டைன் கலிலியோவை "அவர் தற்கால இயற்பியலின் தந்தை, ஏன் தற்கால அறிவியலுக்கே தந்தை" என்று கூறினார்.

## மறையை மறுத்தோர்

இக்காலக் கட்டத்தில் காப்பர்நிகஸ் (Nicoleus Copernicus), கலிலியோ, கெப்ளர் (Johann Kepler 1571-1630) போன்றவர்கள் வானவியலில் சில புதிய உண்மைகளைக் கண்டறிந்து நிறுவினர். காப்பர்நிகஸ் பூமியை மையமாகக் கொண்டு கோள்கள் சுற்றுகின்றன என்பதை மறுத்து, ஞாயிறுதான் மையம் என்பதை நிரூபித்தார். ஆனால் போப் ஆண்டவருக்கு அஞ்சி அவர் தாம் கண்ட விளைவுகளைத் தம் வாழ்நாளில் வெளியிடவில்லை. அவர் இறந்த ஆண்டில்தான் பிரசுரிக்கப்பட்டது. காப்பர்நிகஸ் கொள்கையைப் புருனோ ஆதரித்ததற்காக கம்பத்தில் கட்டப்பட்டு உயிருடன் எரிக்கப்பட்ட போதும் உள்ளம்

தளராது, உண்மையை உயர்த்திப் பிடித்த புருனோவின் திண்மையை, தியாகத்தை உணர்ச்சி பொங்கப் பாடுகிறார் கவிஞர்.

*மறையினை மறுத்தோனுக்கு*
*மரணமே முடிவு, வய்யம்*
*நம்பத் தகாத சொன்ன*
*நாவினைப் பிணித்து இழுத்துக்*
*கம்பத்திற் கயிறு கொண்டு*
*கட்டுக: வெந்து மாள*
*எரிதழல் இடுக என்றார்.*
*ஏறுபோல் நிமிர்ந்து நின்ற*
*பெரியவன் தழலில் மாண்டான்*
*பெருமைக்கோர் சரிதை கண்டான்*
*வெய்ய செந்தழலில் மேனி*
*வேகுநாள் வேகா நெஞ்சன்*
*வய்யகம் உண்மை காண*
*மடிந்தவன் மரணம் வென்றான்*

*(மா.யா.பாகம்-2. பாடல்கள்:155-157மற்றும்167)*

என்று புருனோவின் சோகம் நிறைந்த வீர வரலாற்றைப் பாடிய கவிஞர் ஒரு மகத்தான உண்மையைச் சொல்கிறார்.

*உண்மைக்குத் தம் உடலம் வேக, வேக*
*உளஉறுதி தளரா மல்உயிர் துறந்த*
*திண்மைக்கு நிகர் எனஓர் தேவர் இல்லை*
*சிலுவையிலே மாண்டோனும் எம்மோன் அன்றோ*
*தனிமனிதர் குருதியினிற் வெயர்வு நீரில்*
*தழைக்கின்ற பயிரன்றோ தரணிதன்னில்*

*(மா.யா.பாகம்-2.பாடல்கள்:170-171)*

மனிதகுல முன்னேற்றம், அவ்வப்போது மாமனிதர் தோன்றியதால் மனிதன் வென்றான் என, மனித சமுதாய முன்னேற்றத்திற்கு, வரலாற்றில் அவ்வக் காலங்களில் தனிமனிதர் செய்த பங்களிப்பின் பெருமையைக் காவியப் பொருளாக உயர்த்துகிறார். ஞாயிறு மையம் என்று எடுத்துச் சொன்னதற்காகக் கலிலியோ தனது முதுமைக் காலத்தில் எட்டு ஆண்டுகள் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டார். கெப்ளர், கோள்கள் சுற்றும் பாதை வட்டம் அல்ல, நீள்வட்டம் என நிரூபித்தார். வானவியல் புதுவடிவம் பெற்றது. கணிதம், இயற்பியல், வேதியல் ஆகியவற்றில் ஏற்பட்ட முன்னேற்றம் போல் உயிரியல்துறையில் ஏற்படவில்லை. காரணம் உயிரில்லாத சடப்பொருள்கள் ஆராய்வதற்கு எளியவை. ஆனால் உயிரிகள் ஆய்வதற்கு மிகவும் சிக்கலானவை. உயிரினங்கள் பற்றியும் சோதனை மூலம் பயிலலாம் என்று காட்டியவர் ஹார்வி (Harvey 1578-1657)

உயிரியல் ஆராய்ச்சி தொடர்ந்து பல கருத்து மோதல்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. பொதுவாக உயிர்கள் அனைத்தும் அவை இருக்கும் விதங்களில் ஒரு காலத்தில் கடவுளால் படைக்கப்பட்டவை என்பது ஒரு கருத்து. ஆயின் உயிரியல் அறிஞர் லாமார்க் (Lawmark) இதை மிகவும் உறுதியாக மறுத்தார். உயிரினம் இயற்கையாகத் தோன்றியது என்றும், உயிரிகள் அனைத்தும் அவை வாழ் சூழலில் தோன்றிப் படிப்படியாக மாற்றம் பெற்று வளர்கின்றன என்றும் கருதினார். ஆனால் ஜார்ஜ் கூவியர் என்னும் உயிரியல் அறிஞர் லாமார்க்கின் கருத்தை மறுத்தார். வாதங்கள் தொடர்ந்தன. இந்த வாதங்கட்கு சார்லஸ் டார்வின் (Charles Darwin 1809-1882) தனது பரிணாம வளர்ச்சிக் கொள்கை மூலம் முற்றுப்புள்ளி வைத்தார். சிற்றினங்களின் தோற்றம் (Origin of Species) என்ற அவர் வெளியீடு ஒரு கருத்துப் புரட்சிக்கு வித்திட்டது. கிறித்துவத்தையே அசைத்துப் பார்த்தது.

*ஆண்டவன் ஆறு நாளில்*
*அனைத்துமே படைத்தார் என்று*
*நீண்ட நாள் பரவலாக*
*நிலவிய நம்பகத்தை*
*வேரோடு வீழ்த்தும் என்றும்*
*விவிலியம் பரவி நிற்கும்*
*பாரொடு மோதும் என்றும்*
*பகைமையை வளர்க்கும் என்றும்*
*அஞ்சினன் ..................*

*(மா.யா.பாகம்-2. பாடல்கள்:293-294)*

டார்வின் அஞ்சியவாறே ஆட்சியாளரும் விவிலியத்தினரும் அவரைப் பலவிதமான இன்னல்களுக்கு ஆளாக்கினர்.

அடுத்தடுத்து வந்த பல்வேறு கண்டுபிடிப்புகள் டார்வின் கொள்கைக்கு ஆதரவாக இருந்தன. இருபதாம் நூற்றாண்டில் அறிவியல் வளர்ச்சி இயற்பியல், வேதியியல், உயிரியல், மருத்துவம், நுண்உயிரியல், அணுவியல் என்று மேலும் மேலும் நுட்பமாக வளரத் தொடங்கியது. ஒன்றுக்கு ஒன்று ஆதரவாக விளங்கிச் சமூக வளர்ச்சி மனித குல மேம்பாட்டிற்கு வழிவகுத்து வருகின்றன. மதக் கருத்துகள் பின்வாங்கி விட்டன. புதுமைகளை எதிர்த்து நிற்கும் ஆற்றல் மதத்தில் இல்லை. அறிவியல் வளர்ச்சி பற்றி அழகாகப் புனைந்துள்ள கவிதைகளில் நெஞ்சம் தொடுபவை பல. பிரபஞ்சம் காலமாகவும் வெளியாகவும் உள்ளது என்றால் அதனை ஆட்டிப்படைக்கும் சக்திகளாக ஒலியும் ஒளியும் உள்ளன.

*ஒலி ஒளி இரண்டும் மண்ணில்*
*உயர்பொருள், இவை தவிர்த்த*

*வலிமைவே றில்லை: மாந்தர்*
*வாழ்வில் மற் றுறுதி இல்லை*

*(மா.யா.பாகம்-2. பாடல்:84)*

என்கிறார் கவிஞர். ஒலி இல்லை என்றால் உலகத்து உயிர்கள் எல்லாம் கேட்கும் சக்தி இழந்து செவிடாகி விடும். ஒளி இல்லையெனில் எல்லாம் பார்வையின்றிக் குருடாக இருக்கும். உலக வாழ்வே குருடும் செவிடும் சேர்ந்து கூத்துப் பார்க்கப் போன கதையாகி விடும். ஒலி, ஒளி ஆகிய இரண்டும் உலகை ஆட்டிப் படைக்கும் மாபெரும் சக்திகள். இச்சக்திகளால் தான் உலகம் இயங்குகின்றது. பழங்கால ஞானியர் ஒலி, ஒளியை நாதம், விந்து என்று கூறினர். மருத்துவத்துறையில் எகிப்திய மருத்துவம், இந்திய ஆயுர்வேத மருத்துவம், தமிழ்ச் சித்தர் மருத்துவம், பாரசீக மருத்துவம் முதலியவற்றின் கூறுகளைக் குறிப்பிடுகிறார்.

*மருந்தினில் கீழைநாட்டு*
*வல்லுநர் பெற்றிருந்த*
*அருந்திறன் வளர்தற் கேற்ற*
*ஆய்வுகள் தொடரவில்லை*

*(மா.யா.பாகம்-2. பாடல்:351)*

என்று கவிஞர் வருந்துகிறார். மேலும் இத்துறையில் எளியரை ஏய்ப்போர் எதை எதையெல்லாம் செய்து ஏமாற்றுகின்றனர் என்று தம் கவிதை வரிகளில் கூறி நொந்து போகிறார்.

*ஆண்டவன் பெயரால் இந்தப்*
*பொய்யர்கள் துயரில் வெந்து*
*புழுங்குவார்கள் நம்புவோரை*
*ஏய்த்துயிர் வாழுகின்றார்*
*எத்தர்கள் கூட்டத்திற்கு*
*வாய்ப்புகள் அன்றும் இன்றும்*
*வய்யத்தில் குறையவில்லை.*

*(மா.யா.பாகம்-2. பாடல்கள்:359,360)*

மேலை நாட்டு மருத்துவம் பாடும் போது,

*உடலோடு விந்தை, மாந்தன்*
*உள்ளம் ஊர் புதிரின் உச்சம்*
*இதயத்தின் இணைய தான*
*எந்திரம் எவரே கண்டார்* *(மா.யா.பாகம்-2. பாடல்:379)*

என்று வியக்கிறார். உடம்பை 'மாயா எந்திர தனு' என்று சிவஞான போதம் கூறுவது நினைக்கத் தக்கது. உடல் ஓர் எந்திரம். அதனுள் இதயம் இன்னொரு எந்திரம். இயற்கையில் படைக்கப்பட்ட இந்த

இயந்திரங்களைப் பேணிக்காத்து நீண்ட நாள் வாழவேண்டும் என்ற கருத்தை எண்ண வைக்கிறார்.

**புரைதீர்ந்த அறிவியல் வளரட்டும்**

பேக்டீரியா, வைரஸ் போன்றவற்றின் கண்டுபிடிப்பையும் பாராட்டுகின்றார். இவையனைத்தையும் கூறிவிட்டு, ஆராய்ச்சியாளர் மட்டுமின்றி, ஆன்மீக வாதிகளும் காலம் முழுதும் விடைகாண முடியாத வினாவினை முன் வைத்து முடிக்கின்றார்.

*எண்ணறு கோடி யன்ன*
*இனங்களைப் படைத்து விட்டு*
*நுண்ணுயிர் வடிவில் எங்கும்*
*நுழைந்திடும் உயிர்கள், நாம்*
*கண்ணினில் காண வொண்ணாக்*
*காலனின் தூதுவர்கள்*

*வந்ததேன், வளர்வ தேன்பின்*
*வாழ்வன அனைத்தும் நைந்து*
*நொந்திடச் செய்வதென்ன*
*நோக்கம் இங்கணுவு முண்டோ?*

*(மா.யா.பாகம்-2. பாடல்கள்:391-393)*

அறிவியல் கருவிகளின் அளவற்ற வளர்ச்சியில் ஏராளமான நன்மைகள் உண்டாகியிருக்கின்றன. தப்பினால் ஆபத்திற்கும் அளவில்லை என்கிறார். வரமே சாபமான வரலாற்றைப் புராணங்களில் பற்பல இடங்களில் காணலாம். அழிவு செய்யும் ஆற்றலை அளவிலாது கொண்ட விரைந்து செல்லும் படைக்கலங்களைக் "கடவுளும் பெறுதல் தீது" என்கிறார்.

*அழிவு செய் ஆற்றல் தன்னுள்*
*அளவிலா தென்று கொண்ட*
*கழிபெரும் படைக்க லத்தைக்*
*கடவுளும் பெறுதல் தீது.* *(மா.யா.பாகம்-.பாடல்491)*

இன்றைய அணு ஆயுத உலகம் இதனைச் சிந்தித்துப் பார்க்க மிகவும் கடமைப் பட்டுள்ளது.

*கர்த்தனை அவன்வடித்த*
*கருவியே அழிப்பதாயின்*
*அர்த்தமிங் கென்ன வாழ்வில்*
*ஆக்கத்தின் நோக்கம் என்ன?*

*(மா.யா.பாகம்-2. பாடல்:494)*

என்று வினவுகின்றார். கர்த்தன் கடவுளாயினும் சரி கருவிகளைப் படைத்தவனாயினும் சரி, கருவிகள் தன்னைப் படைத்தவனையே

அழிக்குமாயின் அர்த்தமென்ன? அணு உலகினர்தான் பதில் கூற வேண்டும்.

மாந்தர்கள் மூவுலகினையும் ஆளுகின்ற வலிமையைப் பெற்றுள்ளனர். வரம்பிலா ஆற்றல் உடையவராய்த் திகழ்கின்றனர். அறிவும் ஆராய்ச்சியும் சேர்ந்து விளைவித்தது நன்மை தரவில்லை என்றால் வெற்றி பெற்று விட்டோம் என்ற வீறாப்பில் பயன் ஒன்றுமில்லை. பண்படுத்திப் பயிர்வளர்க்கும் வயலில் களைவளர்ந்து நீர் மிகுந்து கதிர் எல்லாம் மூழ்குமாயின் மழையினால் பயன் என்ன? அறிவியல் வளர்ச்சி வரம் போல் விளங்க வேண்டும். சாபம்போல் இன்னலுக்கு ஆளாக்கக் கூடாது. வெற்றியில் மட்டுமே வரம்பு மீறிய ஆசை இருக்குமானால் பயன்கருதாத வெற்றியும், வீழ்ச்சியாகும்.

*விளைவினில் நன்மை இன்றேல்*
*வெற்றியில் பயனொன்றில்லை*
*களையெல்லாம் வரை, நீரில்*
*கதிரெலாம் மூழ்கு மாயின்*
*மழையினால் பயன்என்? பெற்ற*
*வரமோர் சாப மாமோ?*
*விழைவன வரம்பு மிஞ்சின்*
*வெற்றியும் வீழ்ச்சி யாகும்*

*(மா.யா.பாகம்-2.பாடல்கள்:587,588)*

என்று குலோத்துங்கன் வெற்றியால் பயன் வேண்டும் என்கிறார். கலப்பையில் தொடங்கிய கண்டுபிடிப்பு, கணினிக்கு வந்து அதையும் மிஞ்சி இப்போது இணையத்தில் நிலைகொண்டிருக்கிறது. வடிவில் சிறியது எனினும் ஆற்றலில், பணியில் சர்வ வல்லமையுடையது. இதுவரை அறிவியல் விற்பன்னர் படைத்த அனைத்தின் உச்சி இணையம் எனத் தரும் விந்தையுடையதாயிருக்கிறது.

*....... மானு டத்தர்*
*இணையம் என் றுரைப்பர் அ்.திங்(கு)*
*இறைவனின் மறுபிறப்பென்(று)*
*அனைவரும் புகழ்ந்து போற்றும்*
*ஆற்றலின் வடிவம்* *(மா.யா.பாகம்-2. பாடல் 549)*

என்பார் கவிஞர்.

புருனோ, கலிலியோ, டார்வின் போன்ற அறிஞர்கள் ஆராய்ந்து கூறிய கருத்துக்கள் அன்றைய மதவாதிகளாலும், அவர் சொற்படி நடந்த ஆட்சியாளர்களாலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆட்சியாளர்கள் உண்மைக்கு அஞ்சினர். அறங்களைப் போற்றுவதாகப் பறைசாற்றும் மதங்களும் உண்மையை ஏற்றுக் கொள்ள ஒப்பவில்லை. அறிஞர் பெருமக்கள் கல்லடியும், சொல்லடியும் பட்டனர். சிலர் தீயில்

வெந்தனர். சிலர் பைத்தியக்காரர் என்று பழி சுமத்தப்பட்டனர். இதையெல்லாம் படித்துணர்ந்த அறிவியல் ஆய்ந்த நெஞ்சினரான கவிஞர்

*ஆட்சியர் உண்மைக்கென்றும்*
*அஞ்சினர், அறங்கள் போற்றும்*
*மாட்சிமை கொண்டதென்னும்*
*மதங்களும் இருகை நீட்டி*

*உண்மை ஏற்ற தில்லை*
*உலகினில் இன்றும் கூட*
*உண்மை ஓர் அகதி, தேடி*
*உறவினர் வருவதில்லை*

*(மா.யா.பாகம்-2. பாடல்கள்:296,297)*

என்று வருத்தம் தோய்ந்த குரலில் பாடுகிறார்.

கவிஞர்கள் முற்காலத்தில் கற்பனையாகப் பாடியதெல்லாம் இன்று அறிவியலாலும் தொழில்நுட்ப அறிவின் பயனாலும் நனவாகி வருகின்றன. விண்கலம் சமைத்து வானிலவில் கால்பதித்து மீண்டிருக்கிறான். வேறு வேறான கோள்களுக்கும் மண்வழிப்பாதையில் செல்வது போல் வான்வெளிப் பயணம் சொல்கின்றான். இது எளிய சாதனையன்று. ஆண்டாண்டுக் காலமாக அடுத்தடுத்து வந்த அறிவியல் தலைமுறையினர் உழைத்து உழைத்துக் கிடைத்த சாதனை. வரத்தாலோ, தவத்தாலோ, இம்மென்ற உடனே தோன்றியதன்று. மாதவம் செய்து பெற்றவை இதற்கீடாகா. பாட்டெழுதுவோரும், கதை, காவியம் படைப்போரும் இச்சாதனைகளைப் பாடவேண்டும் என்று எண்ணவில்லை. ஏன் என்று தோன்றவில்லை. இதனை நம் கவிஞர்,

*இலக்கியம் தொழில் நுட்பத்தின்*
*இன்றைய உயர்வு போற்றும்*
*தலத்தின் எட்ட வில்லை*
*தரத்தினில் உயரவில்லை*

*(மா.யா.பாகம்-2. பாடல்:230)*

என்று ஏக்கப் பெருமூச்சுடன் பாடுகிறார். வால்மீகி, வியாசர், இளங்கோ, கம்பர் இந்நால்வரின் ஆற்றல் பெற்ற ஒரு மாபெரும் மானுடக் கவிஞன், மானுட சக்தியின் மகத்துவத்தைப் பாடவேண்டும் என்று விழைகிறார். நால்வரிலும் ஒவ்வொரு கூறு சேர்ந்து குலோத்துங்கனாக வந்தது போன்று, மானுட சக்தியின் மகத்துவத்தை மானுட யாத்திரையாகப் பாடி வெற்றி கண்டிருக்கிறார். இனி,

*நீணிலம் உண்மை காண*
*நிகழ்வதன் இயல்பு சேர*

*மானிடம் உயரத் தங்கள்*
*வாழ்வினை அர்ப்பணித்த*

*சிந்தனையாளர் வானத்*
*தேவரின் உயர்ந்தோர், மண்ணில்*
*தம்திறன் ஒன்றை நம்பிச்*
*சாதனை படைத்தோர் தங்கள்*
*கதையைப் பாட ஏனோ*
*கவிஞர்கள் தோன்றவில்லை*

*(மா.யா.பாகம்-2. பாடல்கள்:206,208)*

என்று கவிஞர் ஏக்கங்கொள்ளத் தேவையில்லை. சாதனையாளர்களின் கதையைப் பரவசத்துடன் பாடிச் சாதனை படைத்த கவிஞர் இவர். அறிவியல் யாத்திரையைப் பாடிய இவருக்கு நிகர் இவரே.

# 2. கனவும் துணிவும்

எல்லா நாடுகளிலும், மக்களில் மதச்சார்புடையவர்கள், மதச் சார்பற்றவர்கள் என்ற பிரிவினர் இருக்கின்றனர். இந்திய நாட்டில் மதச்சார்பின்மை என்பது மாண்புடைய தத்துவமாகும். மாபெரும் முன்னேற்றக் கொள்கை, சமயச்சார்பின்மை என்பது சமயமின்மை அன்று. சமயம் தனிமனிதர் கொள்கை. தனி மனிதர்கள் கொள்கை குழுவின் கொள்கையாகவும் இருக்கலாம். ஆனால் எந்த ஒரு சமயத்தின் கொள்கையும் சமுதாயத்தில் எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டிய பொதுக்கொள்கையாக இருக்கக் கூடாது. அரசின் நடைமுறையாக இடம்பெறக்கூடாது. தனிமனிதன் சமயத்தைத் தேர்ந்தெடுத்துப் பின்பற்றும் வழக்கமில்லை. பிறப்பினால் வந்தது சமயம். மிகப்பெரும்பாலோருடைய சமயம் அவர்களுடைய பெற்றோர் சமயம்தான். பெரும்பாலோருடைய வாழ்வில் ஏதாவது ஒரு வகையில் முக்கியமான பங்கு வகிக்கும் சமயநம்பிக்கை, மனிதனுக்கு மட்டுமே அமைந்துள்ள, திறமை எனக் கருதப்படும் சிந்தனையின் பங்கு இல்லாமலே, பிறப்பால் அமைகிறது என்பது ஒரு மாபெரும் சமுதாயக் குறைபாடுதான். தவிர்க்கவும் வழி தெரியவில்லை. தவிர்ப்பதற்கு நடைமுறைப் படுத்தத்தக்க உத்தி எதுவும் எளிதானதாகத் தோன்றவில்லை. இது கல்வியுகம். மாற்றமும் விரைவும் இந்த யுகத்தின் இயல்புகள். கல்வி வளர்ச்சியால் மதத்தின் ஆதிக்கம் குறைய வாய்ப்புகள் வரும் என்னும் நம்பிக்கையை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

கல்வி நிலையங்களில் சமயம் பற்றிய கல்வி புறக்கணிக்கப்படக் கூடாது. அப்படி புறக்கணிப்பது, அவரவர் பிறப்பில் அமைந்த சமயமே பிற சமயங்களை விடச் சிறந்தது என்ற எண்ணம் மேலோங்கி வலிமை பெறுவதற்கு இடமளிக்கும். மனித வரலாற்றில் சமயங்களின் தோற்றமும் அவற்றின் வளர்ச்சியும் தாக்கமும் முக்கியமானவை. எனவே அறிவு வளர்ச்சியில் ஒரு பகுதியாக, வரலாற்றுச் செய்தியாக மட்டுமே சமயம் இடம்பெறலாம்; பெறவேண்டும். கல்வி நிலையங்களில் இன்றைய காலக்கட்டத்தில் சமயநம்பிக்கைகள் பற்றிய விவாதங்கள் தவிர்க்கப்பட வேண்டும். சமயங்களின் நம்பிக்கை பற்றிய தகவல்களைக் கல்வியின் ஒரு பகுதியாகப் பகிர்ந்து கொள்வதால் ஒரு சமுதாயத்தின்

சகிப்புத்தன்மை வளர வாய்ப்பு ஏற்படும். சமயத் தலைவர்கள் இதற்கு உதவ வேண்டும் என்று வேண்டுகிறார் கவிஞர். யவனம், சீனம், பாரதநாடு, மத்திய ஆசிய நாடுகள் ஆகியவற்றில் நீண்ட கால அளவில் உருவம் பெற்ற சமயம், ஆன்மிகம் அவை விளக்கும் கோட்பாடுகள் யாவும் ஒருபோதும் புதுமையின் படையெடுப்பை, தனிமனிதர் சாதனையின் விளைவுகளை எதிர்த்து நிற்க இயலவில்லை என்பதை மிகவும் வலியுறுத்திப் பாடுகிறார். மானுடயாத்திரை என்பது ஞானத்தின் யாத்திரையாகும். யாத்திரையும் ஞானமும் எப்போதும் முன் செல்லும் இயல்புடையவை. பண்டைய பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள் எவையும் ஞானத்தேரின் யாத்திரைக்கு முட்டுக் கட்டையாக இருக்க முடியாது என்பதை,

*புதுமையின் படையெடுப்பைப்*
*புழக்கங்கள் எதிர்த்துப் போரில்*
*இதுவரை வென்ற தாக*
*எங்குமே சரிதையில்லை (மா.யா.பாகம்-3. பாடல்:979)*

*காலத்தின் தீர்ப்பு நாளும்*
*கழிதல்பின் வருதல் நேரும்*
*ஞாலத்தில் ஞானத் தேரின்*
*யாத்திரை நிற்பதில்லை (மா.யா.பாகம்-3. பாடல்:879)*

என்னும் கவிதை வரிகளில் தீர்ப்பாக அறிவிக்கிறார். மனிதனுக்கு அறிவு, கல்வியால் வருகிறது. ஞானம் அனுபவத்தால் வருகிறது. வேத காலத்தில் இருந்து கணக்கிட்டால்கூடப் பண்டைய நாகரித்திற்குச் சொந்தமான மனித இனத்திற்கு 3500 ஆண்டுகள் பழுத்த அனுபவம் இருக்கிறது. இந்த அளவு நீண்டகால அனுபவம், நாம் மனித சாதியின் எதிர்காலம் பற்றிச் சிந்திப்பதற்குப் போதுமானது.

அறிவியலைப் பயன்படுத்தி மண்ணை வளப்படுத்துவோம். ஆன்மீக வழியில் அறவாழ்வு தேடி வாழ்வை வளமாக்குவோம். சமயத்தைத் தனிப்பட்டவர் நம்பிக்கையாக்குவோம். இந்த வாழ்வு நம் கையில் உள்ளது. நாம் காணுவது, நாம் அனுபவிப்பது இந்த உலகம் நம்முடையது. இங்கு உள்ளவை அனைத்தும் நமக்கும் சொந்தம். நீரும், நிலமும், காற்றும், வானும், கடலும் நமக்கு உரிமையுடையவை. மனித வாழ்வில் இன்று எண்ணப்படுவன இரண்டு கட்டங்கள். முதலாவது பிறப்புக்கும், இறப்புக்கும் இடையில் அமைந்த இவ்வுலக வாழ்வு. இது நாம் ஐம்புலன்களும் அறிய அனுபவிக்கும் ஒன்று. இந்த வாழ்வைத் தாங்குவது இந்த உலகம். இந்த வாழ்விற்குப் பிறகு எழுவதுதான் ஆன்மா, சுவர்க்கம், நரகம், மறுபிறவி போன்ற உறுதி செய்யப்படாத, கருத்து வேற்றுமைகட்குரிய இரண்டாவது கட்டம். இந்தக் கட்டத்தில் ஒருவர் அடையும் பேறு தனித்து நிற்பது அன்று. அது முதல் கட்டத்தோடு தொடர்புடையது. முதல் கட்டத்தில் ஒருவருடைய செயல் முறையே

அடுத்த கட்டத்தில் அவருடைய இடத்தை நிர்ணயிக்கிறது. எனவே இவ்வுலகில் பிறப்பெடுத்த ஓர் உயிருக்கு எல்லா வகையிலும் அடிப்படையானது இவ்வுலக வாழ்வு. இம்மை வாழ்வு ஏற்றமுடையதாயின் மறுமையில் உயர்வு (மறுமை என ஒன்று இருக்குமாயின்) நமக்கு உறுதியாகி விடுகிறது. வள்ளுவரும் இந்த வாழ்வைத்தான் முன் வைக்கிறார்.

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப் படும்* *(குறள்:50)*

மதவாதிகள் காலங்காலமாகக் கூறி வரும் வானுலகை மண்ணில் நிறுவுகிறார். மனிதசாதி தன் சிந்தனைத் திறனின் வீச்சின் விளிம்பு வரை சென்று இதுவரை கண்ட முடிவுகள் அனைத்தையும் தம் திறனுக்கேற்பத் தொகுத்தும் வகுத்தும், துருவியும், பார்க்கும்பொழுது கருத்து வேற்றுமைக்கு இடமின்றி நாம் காணும் உண்மை வையத்து வாழ்வின்றி வானத்துப் பேறில்லை என்பதுதான். மறுமை என ஒன்று இருப்பினும் பொருந்தும். இல்லையெனினும் பொருந்தும். எனவே,

*பண்ணை போல் இவ்வையத்தைப்*
*பதம் செய்வோம் கவிஞர் பாடும்*
*விண்ணையும் விண்ணமைந்த*
*வீட்டையும் மிஞ்சி நிற்கும்*
*துறக்கத்தை இங்கு அமைப்போம்*
*(மா.யா.பாகம்-3. பாடல்.1131)*

என்ற முடிவுடன் மானுட யாத்திரை தொடரட்டும்.

மனிதன் கதை சொல்லத் தொடங்கிய போதே காப்பியம் பிறந்தது எனலாம். மனிதன் கதை சொல்லும் வரையிலும், கவிஞன் பாடும் வரையிலும் காப்பியங்கள் அடுத்தடுத்துத் தோன்றும். ஒரு காப்பியத்தின் உடலும், உயிரும், வடிவும், வண்ணமும், இலக்கும் படைப்பவனின் கற்பனைத் திறனுக்கேற்ப மாற்றம் பெறும். நாளடைவில் மேம்பாடடையும்; வளர்ந்து கொண்டேயிருக்கும். எந்த ஒரு காப்பியமும் காப்பிய இலக்கணம் அனைத்தையும் பின்பற்றி எழுதப்படுவதில்லை. படைப்பவன் விருப்பமும் புலமையும் அறிவாற்றலும் காப்பியத்தை வழிநடத்தும். அறிதலும், தேடலும், விடாமுயற்சியும் அயராத உழைப்பும் கொண்ட குலோத்துங்கன் நம் தமிழ் மொழியில் என்றும் நிலைத்து நிற்கப் படைத்த மானுடயாத்திரை என்னும் இக்காப்பியம் அவருடைய நீண்ட கால இலக்கியப் பங்களிப்பில் ஓர் இலக்கியப் பெரும்படைப்பு (Magnum Opus) என்று கூறலாம்.

இந்த யாத்திரை இருளிலிருந்து ஒளியை நோக்கிச் செல்லும் யாத்திரை. அறியாமையிலிருந்து அறிவுவளர்ச்சியை நோக்கிச் செல்லும் யாத்திரை. இந்த யாத்திரையில் இதுவரை எத்தனையோ

மெய்ஞ்ஞானிகளும் விஞ்ஞானிகளும் தோன்றியிருக்கிறார்கள். அவர்கள் கண்டறிந்த கருத்துகளாலும் கண்டுபிடித்த கருவிகளாலும் இந்த யாத்திரை நடந்து கொண்டு வருகிறது. இதுவரை பாடியவர்களெல்லாம் பெரும்பாலும் தெய்வங்களையும் மன்னர்களையும் பாடினார்கள். மானுட சமுதாயத்தைப் பாடுபொருளாகக் கொண்டு பாடினோர் சிலர். ஒவ்வொரு திறத்தை எடுத்துக் கொண்டு பாடினோர் இருக்கலாம். ஆனால் ஒட்டுமொத்தமாக உலக மானுட இனம் முழுவதையும் எடுத்துக்கொண்டு தோற்றம் முதல் இன்று வரை அதன் யாத்திரையை, அது வளர்த்து வரும் வரலாற்றை வரன் முறையாகப் பாடினோர் இலர். கவிஞர் குலோத்துங்கன் மட்டுமே அவ்வாறு பாடியுள்ளார். இம்மானுட யாத்திரை அருமையான முழுமையான பணி. அனுபவம் கனிந்த நாளில் தமிழ் இனத்திற்கு மட்டுமின்றி மனித இனம் முழுமைக்கும் வழங்கிய இலக்கியப் படையல் ஆகும். இப்படையல் ஓர் அறிவு யாத்திரையாகும் எனின் மிகையாகாது. மானுடயாத்திரை என்னும் இத்தமிழ்க் காப்பியம் உலக இலக்கிய வரிசையில் உன்னத இடத்திற்கு உரியதாகும். உலகம் போற்றும் காப்பியமாகும் தகுதி உடையது. மானுடயாத்திரை மூன்று பாகங்களில் பாடப்பெற்றுள்ளது. கவிதை உணர்வுக்கும் சுவைக்கும் பொருந்தி வராது என்று பலர் எண்ணிக் கொண்டிருக்கும் தலைப்புகளையும், தெளிவுடனும், படிப்போர் உள்ளத்தைப் பிடித்து நிறுத்தும் ஈர்ப்புடனும் கவிநயம் புலப்படப் படைத்துள்ளது மாபெரும் சாதனையாகும்.

வித்தகக் கவிஞர் குலோத்துங்கன் பற்பல கவிதை நூல்களைப் படைத்து நம்தமிழ் அன்னையைப் பெருமைப் படுத்தியுள்ளார். எனினும் இக்காப்பியம் ஒன்றே அவருடைய புலமைக்கும், மேதைமைக்கும், கவிவன்மைக்கும் பெருஞ்சான்றாக நெடிது நிற்கும் என்பதில் யாதொரு ஐயத்திற்கும் இடமில்லை. மானுட முன்னேற்றம் என்பது ஒரு கதை போல் நடப்பதன்று. அது கல்லும் முள்ளும் நிறைந்த வரலாறு. கற்பனை வரலாற்றுக்குத் துணை நிற்காது; அணி செய்யாது. வரலாற்றைக் களங்கப்படுத்தவும் கூடும். எனினும் மானுட யாத்திரையைத் தேர்ந்தெடுத்துத் தம் முயற்சியில் பலரும் பாராட்டும் வண்ணம் வெற்றியும் பெற்றுள்ளார்.

எடுத்துக்கொண்ட யாத்திரையில் காலவளர்ச்சியின் பல்வேறு கட்டங்களை, அவ்வப்போது நிகழ்ந்த சாதனைகளை, துலாக்கோல் போல் நடுநிலை பிறழாது, முன்னுக்குப்பின் முரண்படாமல், உண்மைக்குப் பங்கம் வராமல் காணக்காணத் தெவிட்டாத இரவிவர்மாவின் ஓவியம் போல், படிக்கப் படிக்கத் தெவிட்டாத காவியமாக்கியுள்ளார். சொல்லும் பொருளும் இயைந்து நடமாட, எளிமையும், தெளிவும் பளிச்சிடக் கவிதையில் மரபும் கருத்தில் புதுமையும் புலப்பட இனிமையாக இருக்கிறது இக்காப்பியம். பாடுபொருளால், பாடிய உத்தியால் இதற்கு இணையான காப்பியம் அல்லது இலக்கியப்படைப்பு யாதேனும் தற்போது

தமிழ் இலக்கிய உலகில் தென்படுகிறதா என்ற வினாவிற்கு விடை கூற இயலவில்லை. இவரது படைப்பு இலக்கிய வகைகளில் இது வரை வேறு எவருக்கும் எட்டாத சிகரம் என்று கூறுவதில் எந்தத் தவறும் இல்லை. மீண்டும் ஒரு முறை இக்காப்பியம் கவிஞரின் இலக்கியப் பெரும்படைப்பு (Magnum Opus) என்று கூறினால் தவறாகாது. உலகில் வேறெந்தக் கவிஞனுக்கும் கிடைக்காத கல்விப் பேறுடையவர் நம் கவிஞர். மனிதரிடம் குற்றால அருவிபோலக் கொட்டும் கவிதையாற்றல் சங்கமமாகி இருப்பது அரிதினும் அரிய வரமேயாகும். இத்தகைய அரிய சங்கமம் இன்னொருவரிடம் காணக்கூடும் என்பது முயற்கொம்பாகும்.

பாரதி பரம்பரையில் நூற்றுக் கணக்கான கவிஞர்கள் தோன்றிப் பாடியுள்ளனர். குவலயம் போற்றத் தகுந்த கவிஞர் குலோத்துங்கனும் பாரதி அடியொற்றி வந்தவர்தான். எனினும் அவர்களுக்குள் புதுமையானவர், வேறானவர், தன்னை அடையாளம் காட்டித் தலை நிமிர்ந்து நிற்பவர். தனது தத்துவப் பார்வை என ஒன்றைத் தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்தியவர். அவருடைய கவிப்புலமையும் கருத்து வளமும் மானுட யாத்திரையில் பாகத்திற்குப் பாகம் உயரே செல்கின்றன. படிப்பவர்கள் அண்ணாந்து பார்த்து வியக்கின்றனர். மானுடயாத்திரை என்னும் இக்காவியம் நம்மிடையே வாழும் கவிஞர்களில் தமிழ் மொழியின் தலையாய கவிஞர் குலோத்துங்கன் என்பதை நிலைநாட்டும் வல்லமை உடையதாக இருக்கிறது. எனினும் அவர் மக்கள் பலராலும் அறியப்படாமல் குடத்திலிட்ட விளக்காகவே இருக்கிறார்.

தமிழர்க்குத் தன்னம்பிக்கை வேண்டும். உலகத்தரம் என்பது மேற்கத்திய நாடுகளுக்கு மட்டுமே உரியதன்று. ஏதோ எட்டாத உயரத்தில் இருப்பதன்று. மூவாயிரம் ஆண்டு இலக்கியப் பாரம்பரியம் உள்ள தமிழர்க்கு எட்டாத தொன்றுமில்லை. அதை எட்டக்கூடியவர்கள் நம்மில் இருக்கிறார்கள். நம்மவரை நாம் அடையாளம் காண வேண்டும். அவரைப் போற்றி ஏற்றுக் கொள்ளும் பெருந்தன்மை வேண்டும். உயர்த்திப் பிடிக்கும் ஆர்வமும் திறனும் வேண்டும். உலக இலக்கியத்தின் கருவூலமாக விளங்கும் தகுதியுடைய 'மானுடயாத்திரை' என்னும் காவியத்தைப் படைத்துள்ள கவிஞர் குடத்திலிட்ட விளக்காகி விடக்கூடாது என்பதே ஏக்கமாகும். ப.ஸ்ரீ. இராகவன் I.A.S அவர்கள் ஆங்கிலத்தில் இலக்கியம் படைக்கும் ஆற்றலும் தமிழில் அழகாக எழுதும் வல்லமையும் உடையவர். கவிஞர் மீதும் அவரது கவிதையின் மீதும் அடங்காத ஆர்வம் உடையவர். உலக இலக்கியப் பரப்புகள் அனைத்தையும் பார்வையிட்டவர். சிலவற்றை ஆழமாகப் பயின்றவர். அவர் குலோத்துங்கனுக்கு நோபல் பரிசு கிடைக்க வேண்டும் என்று பெரிதும் விரும்புகிறார். மதிப்பிடத் தகுதியுடைய ஒருவரின் மதிப்பீடு மெய்யாக வேண்டும் என்பதே நமது ஆசையுமாகும்.

## 3. ஈழமா? ஈமப்பூமியா?

புத்தரும், காந்தியும், வள்ளுவப் பெருந்தகையும் கவிஞர் பெருமகன் குலோத்துங்கன் நெஞ்சில் எந்நாளும் குடிகொண்டுள்ளனர். அவர் தாய், தந்தையருடன் கொலுவீற்றிருக்கின்றனர். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று உலகந்தழுவிய உறவு பூண்ட நெஞ்சினர். உலகத்தில் எங்குமே போர் ஏற்படக்கூடாது என்று எண்ணும் விழுமிய உள்ளம் படைத்தவர். இவர் போல் பல அறிஞர்கள் கவிஞர்கள் காலந்தோறும் போரற்ற உலகமே வேண்டும் என்று குரல் எழுப்பியுள்ளனர். எனினும் ஏதாவதொரு காரணம் பற்றிப் போர்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. இதனைத் தடுக்கவியலாமல் பலதரப்பட்டோரும் செயலற்று நிற்பதைக் கண்டு மனம் பதறுகிறார். கையாலாகாத தன்மை கண்டு மனம் நோகிறார். போர்கள் தொடங்கிய போதெல்லாம்,

*கற்றவர் தடுக்க வில்லை*
*கலைஞர்கள் எதிர்க்க வில்லை*
*பற்றறு சமயம் பாரில்*
*பரப்புவோர் திருத்த வில்லை*
*சமத்துவம் மனித நேயத்*
*தத்துவம் பேசுகின்ற*
*அமைப்பினர் சிலபேர் மட்டும்*
*அமைதியின் பக்கம் நின்றார்*
*எழுதுவோர் பேசு வோர்பின்*
*எண்ணிலாத் தத்துவங்கள்*
*பொழுதெலாம் போதிப்போர் அப்*
*போரினை எதிர்க்க வில்லை*

என்று சங்கடப்படுகிறார். உரிமைப் போர் எனினும், உள்நாட்டுப் போர் எனினும் போரின் உடனடி விளைவுகளும் நீண்டகால விளைவுகளும் கொடுமையானவை. குலை நடுங்க வைப்பவை. அது அழிவுக்கு

வழிவகுக்கும் பெருந்தீமை. அறத்தின்பாற்பட்ட அமைதியான வாழ்வே உயர்ந்தது; உன்னதமானது. எனினும் எங்கும்,

*....எதிர்ப்போர் ஏற்போர்*
*என ஒரு பிளவு தோன்றல்*
*எத்துறை எனினும் மெய்யாம்*

என்று கவிஞர் கூறுவதுபோல் ஏற்போர் மிகுந்திருந்தால் அமைதி நிலவுகிறது. கவிஞர் குலோத்துங்கன் தம் வாழ்நாளில் இன்று வரை பலவகைப் போர்களைக் கண்டும் கேட்டுமிருக்கிறார். எந்தப் போரும் தமிழ் ஈழ உரிமைப் போர் போல அவர் உடலையும், உயிரையும் வாட்டியெடுத்ததில்லை. கண்ணீர் மல்கச் செய்ததில்லை. எள்ளளவும் மனிதப் பண்புகளற்ற ஈனரின் ஈனரான சிங்களக் காடையர்களை எதிர்த்துப் போரிட்ட ஈழத் தமிழர் துயர்கண்டு நிலைகுலைந்து,

*கனவெல்லாம் ஈழத்தின் அவலக் காட்சி*
*கண்விழித்தால் உயிர்பற்றி எரிவதே போல்*
*மனமெல்லாம் வேகிறது, கயவர் செய்கை*
*மனிதத்தை எரிக்கிறது, வையம் காணா*
*ஈனத்தின் ஈனத்தின் ஈனம், ஆட்சி*
*ஏற்றவர்தம் கொலை வெறியின் கோரக்கூத்து*
*சாணத்தில் நெளிகின்ற புழுவும் கூடத்*
*தாங்காது துடித்தெழும்பும் கொடுமைச் செய்கை*
*கயமையின் கால் மிதியின் கீழ் மனிதவிதி*
*கதறுவதும் புதிதல்ல எனினும் ஆள்வோர்*
*புயவலியே தம்குடியை ஊர்ஊராப்*
*பொசுக்குவது சரிதமிலாப் புன்மை புன்மை*
*தீயணைக்கும் படைபோல விரைந்து சென்று*
*சிறுமையிதைத் தடுக்காமல் வையம் முற்றும்*
*மனசாட்சி என்பதெல்லாம் மாயைதானோ!*

*(கு.க.பக்கம்: 621)*

என்று செய்வதறியாது மனங்கலங்கி நிற்கின்றார்.

தமிழ் ஈழப்போர் மட்டும் ஏன் கவிஞர் பெருமகனை இங்ஙனம் பாதிக்க வேண்டும். தன்னினம் வேதனைப்பட்டால், தான் ஆடாவிட்டாலும் தன் சதையாடும் அல்லவா? நம்மவர் துயரம் கண்டால், பார்வையில் உள்ளவர் படும் துயரம் கண்டால் வேதனை மிகுவது இயற்கைதானே. கவிஞரின் உணர்வுகளை நன்கு புரிந்து கொள்ள வேண்டுமெனில் ஈழத்தமிழர் போராட்டத்தை முறையாக அறிந்து கொள்ள வேண்டும். அறிந்து கொண்டு துன்பத்தில் ஆழ்ந்து மாய்வோம் வாருங்கள். ஈழத்தை

அந்நியராம் ஆங்கிலேயர் ஆண்ட போது சிங்களரும் தமிழரும் இணைந்து அணிதிரண்டு எதிர்த்தனர். இலங்கை இரண்டு இனத்தவர்க்கும் உரியது என்ற உணர்வோடு இணைந்து வாழ்ந்தனர். இலங்கை விடுதலைப் போரில் முன் நின்று தலை கொடுத்தவர் தமிழரே. ஆங்கிலேயன் சென்றான். விடுதலை வந்தது. தமிழர்க்கு வேதனையும் வந்தது. சிங்கள இனவெறியரின் வஞ்சநெஞ்சமும் கள்ள உள்ளமும் கண்டு ஏமாந்து கலங்கினர். தமிழர் தலைவரும் மக்களும், தோளோடு தோள் நின்று சுதந்திரப் போரிட்ட கதை கனவானது; அந்நட்பு நடிப்பாகிவிட்டது; பட்ட துயரெல்லாம் பாழானது. புத்தர் பெயரில் இரத்த வெறியின் தத்துவம் கலந்து, தன்னல வணிகம் நடத்தும் குண்டர் ஆட்சி வந்தது. ஈழமண்ணில் மதத்தின் பெயரால், மொழியின் பெயரால், மக்களின் பெயரால் வேற்றுமை உணர்வுகளை விதையிட்டு வளர்த்தனர். எதற்கும் வழியற்ற ஏழை எளிய தமிழ்மக்களின் உழைப்பை உறிஞ்சிப் பலவழிகளிலும் ஏய்த்து வாழ்ந்தனர். நொந்த தமிழினம் கொதித்தெழுந்தது. தனிஈழம் பெற நெஞ்சுரம் கொண்டு ஏய்ப்போரை எதிர்த்து நிற்கத் துணிந்தது. எதிர்த்து நின்ற தமிழர் எண்ணற்ற கொடுமைகட்கு ஆளாயினர். தமிழ் ஈழத்தை ஈமப் பூமியாக்கி எக்காளம் கொட்டினர். பகைவர் நாடாயினும் பெண்கள், குழந்தைகள், ஆதரவற்றோர், முடம்பட்டோர், நோயுற்றோர் போன்றோரைக் கொல்வது அறத்திற்குப் புறம்பானது என்ற கொள்கையோடு போரிடுவர். ஆனால், வீரப்போர் புரிந்த மரபில் வந்த ஈழத்தமிழர்களைச் சிங்கள அரசின் படையும் அலுவலர் குழுவும் வீட்டிற்புகுந்தும் வீதியில் வளைத்தும் கொத்துக் கொத்தாய் எரியும் நெருப்பில் அள்ளிப்போட்ட கொடுமையை யாரிடம் சொல்லி ஆற்றிக் கொள்ள முடியும். மனிதன் வேட்டையாடி உண்டுவாழ்ந்த காட்டு மிராண்டிக் காலத்தில்கூட மனிதப் பண்புகள் இவ்வளவு தரம் தாழ்ந்து கெட்டழிந்ததில்லை. இக்கொடுமைகளைக் கேட்க முடியாமல் கவிஞர் குலோத்துங்கன்,

*காலைச் செய்தியைப் பார்க்கவும் கூசினோம்*
*கண்ணின் முன்னுள வானொலி தொட்டுயாம்*
*மாலைச் செய்தியைக் கேட்கிலம்; ஈழவர்*
*மண்ணின் சோகம் மனங்கொள அஞ்சினோம்.*

*எம்மினத்தவர் நாள்தோறும் நாள்தோறும்*
*ஈனர் யாவரின் ஈனர் தம் ஆட்சியில்*
*தம்மு யிர்ப்பிணம் தாங்கும் சவக்குழி*
*தாம் சமைத்தபின் சாய்வதும் மாய்வதும்*
*மானுடத்தின் அரும்பெனும் பாலகர்*
*வாழையீன்றுள கன்றெனும் மாணவர்*
*கானிடைத்திரி நாயினும் கீழர்தம்*

*கையில் நாள்தோறும் நாள்தோறும் மாய்வதும்*
*மாதர் கற்பினை மண்ணிடைச் சாய்ப்பவர்,*
*மானம் நாணம் துறந்தபுன் கோழையர்,*
*காதகர் பிறர் கண்ணுற வன்மையிற்*
*காமம் மூழ்கிடும் கற்புக் கொலைஞர் பால்,*
*செந்தமிழ்க்குல மாதர்கள் நாள்தோறும்*
*திருவிழப்பதும், எங்ஙனம் தாங்குவோம்;*
*வெந்தழல்தனில் அங்கமும் ஆவியும்*
*வேவ தென்றிடும் வேதனை மிஞ்சயாம்*
*பொங்கி நெஞ்சம் புழுங்கி யழிந்தனம்;*
*புன்மை புன்மைஇப் புன்மையை வையகம்*
*எங்ஙனம்பொறுக் கின்றதோ? தெய்வமே*
*ஈழ வர்துயர்க் கெல்லையொன் றில்லையோ?*

*(கு.க.பக்கங்கள்:624,625)*

என்று வேதனைப்படுகின்றார். ஒரு பக்கம் நாள்தோறும் தமிழ்மக்களை மாய்க்கின்றனர். ஒரு பக்கம் ஒற்றுமை பேசுகின்றனர். நாம் அனைவரும் ஓரினம் என்று கூவுகின்றனர். வரிசையாக நிற்க வைத்துச் சுட்டுக் கொன்றவர் வாழ்க வளமுடன் என்கின்றனர். நரியினும் கீழாகத் தந்திரம் செய்து தீமைகள் புரிந்தவர் நல்வழி ஓதினர். புதியதாய் ஞாயம்பேசினர். எம்மினத்தை ஈவு இரக்கமின்றி எரிதழலில் வீசியவர் இணைவோம் என்று கரம் நீட்டினர். அவர் எண்ணத்தில் சொல்லில் செயலில் எல்லாம் மாயம், எதிலும் வேடம், அவர் உடம்பே நஞ்சு, உயிரும் நஞ்சு. உடம்பும் உயிரும் நஞ்சானவர் நம்நிலம் ஒன்றெனப் பாடம் நடத்தினர். வெம்பியும் மடிந்தும் வீழ்ந்த தமிழரின் சிறைதான் ஈழமண்.

தமிழ் ஈழ மக்கள் எரியுண்ணும் கொடுமை நெஞ்சத்தின் ஆழத்தைச் சுடும் ஒன்று. மானுட ஆன்மாவின் தரம் தாழ்ந்த அவலம் இது. இக்கொடுமை வரலாறு காணாத புன்மை. சிங்களவர் தீமையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, கயவருடன் கைகோத்துக் கொண்டு தமிழீழ மக்களை வன்கொடுமைக்கு ஆளாக்கினர். எரியூட்டினும், எலும்பை நொறுக்கினும் கைகால்களை வெட்டி எறியினும் உரிமைப் போர் ஓய்ந்ததில்லை. இப்போது உலக நாடுகளின் தலைவர் உதவுவார். அண்டை நாட்டினர் துணை வருவர். உலகமன்றம் தலையிட்டுத் தீர்க்குமென்று நம்பித் தொடங்கிய போரன்று. தம் வலியை நம்பிய போர். தன்மானத்துடன் தலை நிமிர, தொடங்கிய போர். ஓயாது; ஒரு போதும் ஓயாது.

வன்கொடுமைக்கு ஆற்றாது எளிய தமிழ்மக்கள் பெற்ற நிலம் துறந்து, பிரியமுடன் வாழ்ந்திருந்த சுற்றத்தைப் பிரிந்து, தோணி

துணையாகக் கடல் மேல் சென்றனர். கரையேறி வாழ்வில் ஒரு திருப்பத்தைக் காண்போம் என்ற ஆசைக்கனவோடு புறப்பட்டனர். காலமெல்லாம் ஓயாத இனவாதப் போர்க்களத்தில் வெந்தவர்கள், உயிர் வாடி மெலிந்து வாழ்வில் சுவை இழந்து, எங்கேனும் சென்று உயிர்வாழ்வோம் என்று கடல்மேல், அலைமேல் பயணம் செய்தனர். தம்மினத்தவர் வாழ்ந்து வரும் மண்ணில் கால் பதித்துக் கவலை தீர்வோம் என்று எண்ணியவேளையில் நடுக்கடலில் பேரலையில் தோணிகள் புரண்டு, குடும்பம் குடும்பமாய்க் கடலில் அழுந்தி மாண்டது கொடுமையிலும் கொடுமை. தோணி கவிழ்ந்த கணத்தில், துணையின்றி நின்ற கணத்தில், உறவுகள் அத்தனையும் பிரிந்துவிட்ட பெருஞ்சோகம் மின்னெலென உடலெல்லாம் பரவிய வேளையில் என்ன நினைத்தாரோ? எதற்காக ஏங்கினாரோ? சுற்றம் சூழ நிற்காமல் சடங்கேதுமில்லாமல் கடல் நீரில் அடங்கிய இவ் ஆவிகளின் ஆசைகளை யார் அறியக் கூடும்?

தமிழ் ஈழப்போர் நெஞ்சை உறைய வைக்கும் கொடுமைகளைத் தாங்கிக் கொள்ளும் வீரமறவர்களால் தொடர்ந்தது. அப்போரின் தொடக்கம், நோக்கம், விளைவு என்னவாகவிருக்கும் என்பதையெல்லாம், சிங்களவரின் ஏமாற்று வித்தையெல்லாம் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்தவரின் கயமையனைத்தையும் மரணத்தின் வாயிலில் நின்றுகொண்டு கொழும்பு நீதிமன்றத்தில் தமிழ் ஈழப் போர்மறவர்களின் முன்னோடிகளில் முன்நின்ற தங்கதுரையின் வீர உரை, வீறுமிக்க எழுச்சியுரை வெளிச்சம் போட்டுக் காட்டியது.

### தங்கதுரையின் சூளுரை

கைது செய்யப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைத்து வந்து விசாரித்தபோது ஈழத்தமிழர்களின் கோரிக்கை என்ன என்பதைத் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் தங்கதுரை மிகவும் ஆணித்தரமாகத் தெரிவித்த கருத்துகள் வரலாற்றுப் புகழ்பெற்றவை. அந்த உரை, தனக்கு மரணதண்டனை உறுதி என்பது தெரிந்திருந்தும் தனது கொள்கைகளிலிருந்து மாறாது உறுதியாய் நின்ற சாக்ரடீசின் உரைக்கு நிகரானது. இருபதாம் நூற்றாண்டில், கியூபாவின் விடுதலைக்காக ஆயுதமேந்தி அப்போது ஆண்டு கொண்டிருந்த அரசிடம் சிக்கிக் கொண்டு நீதிபதி முன் நிறுத்தப்பட்ட ஃபிடல்காஸ்ட்ரோவின் உரைக்கு ஒப்பானது.

**1983-ஆம் ஆண்டு பிப்ரவரி 24-ஆம் நாளன்று கொழும்பு நீதிமன்றத்தில் தங்கதுரை நிகழ்த்திய வாதம்:** "கனம் நீதிபதி அவர்களே! ஸ்ரீலங்காவின் நீதிமன்றம் எதற்கும் எம்மை விசாரிப்பதற்கான அதிகாரமோ, உரிமையோ கிடையாதென்ற எமது ஆரம்ப ஆட்சேபணையையும் மீறி, ஸ்ரீலங்காவின் நீதி நிர்வாகப் பிரிவின் ஓர்

அங்கமாகிய இம்மன்றம் எம்மீது இவர்களால் சோடிக்கப்பட்ட இவ்வழக்கைக் கடந்த நான்கு மாதங்களாக விசாரித்து வந்துள்ளது. நாமும் இரண்டாம் கட்டமாகிய பகிஷ்கரிப்பு என்பதை மேற்கொள்ளாது இம்மன்றத்தின் விசாரணைக்கு வந்துள்ளோம். எமது குற்றமற்ற தன்மை, மற்றும் எமக்கு இழைக்கப்பட்ட சித்திரவதைகளை எமது சட்டத்தரணி, எமது சாட்சிகளின் மூலமாயும், சித்தரவதைப் புகழ் ஸ்ரீலங்கா அரசுப் போலீஸ் அதிகாரிகளைத் தமது குறுக்கு விசாரணையின் போது அடிக்க வைத்த குட்டிக் கரணங்களாலும் மற்றும் சட்டவாதங்களின் மூலமாயும் மிக வெற்றிகரமாய் நிருபித்து விட்டமை கண்கூடு. வெள்ளையர் இந்நாட்டைச் சிங்களப் பிரபுக்களிடம், தமிழ் மக்களின் தலைவிதியையும் சேர்த்து ஒப்படைத்துச் செல்கையிலேயே தமிழ் மக்கள் விடுதலையைக் கோரி விடவில்லை. மாறாகச் சிங்களப் பிரபுக்கள் எம்மை இரண்டாம் தரப் பிரஜையாக்க மாட்டார்களோ என்ற சந்தேகம் எழுந்தது இயல்பே. இதன் விளைவே தமிழ்த் தலைவர்கள் தம் இனம் நசிந்து விடக்கூடாது என்ற தீர்க்கதரிசனத்துடன் கூடுதல் பிரதிநிதித்துவம் போன்ற விஷயங்களை அப்போது வலியுறுத்தினர். அவர்கள் சந்தேகங்கள் தவறான அடிப்படையில் ஒன்றும் எழுந்து விடவில்லை என்பதை வலியுறுத்தும் வகையிலேயே அமைந்தன. மலையகத் தமிழரின் வாக்குரிமை பறிப்பு அடுத்து வந்த கால் நூற்றாண்டுக் காலமாகத் தமிழ் மக்களது உரிமைகள் மட்டுமல்லாது மரபுவழிப் பிரதேசங்களும், தமிழ் மக்கள் தலைவர்களின் கடும் எதிர்ப்புக்களையும் மீறித் திட்டமிட்ட முறையில் சிங்கள அதிகார அமைப்பு முறையினால் பறிக்கப்பட்டு வந்தன. இக்காலக் கட்டத்தில் இலட்சக்கணக்கான தமிழ்மக்களும், தமிழ்த் தலைவர்களும் தமது எதிர்ப்புக்களை அகிம்சை முறையில் மிக நாகரிகமாகவும், உறுதியுடனும், சத்தியாக்கிரக வழிகளிலும் காட்டினர். ஆனால் நடந்தது என்ன? நிராயுத பாணிகளான தலைவர்கள் மீது முதன்முதலில் காளிமுகத்திடலில் ஆயுதக் காடையர்கள் மூலம் வன்முறை கட்டவிழ்த்து விடப்பட்டது. பின்னர் யாழ் செயலகத்தின் முன்பாக அப்பாவி மக்கள், தலைவர்கள் அடங்கிய சத்தியாகிரஹிகள் மீது ஸ்ரீலங்காவின் ஏவல் இராணுவம் தனது காட்டுமிராண்டித் தனத்தைப் பிரயோகித்தமை நாகரிக உலகு தலைநிமிர்ந்து ஏற்றுக் கொள்ளக் கூடிய செயல் அல்ல. இப்படி ஒன்றா இரண்டா? கடந்த முப்பதைந்து ஆண்டுகளாக இத்தீவின் வாழ் தமிழ் மக்கள்மீது பிரயோகிக்கப்பட்ட திட்டமிட்ட காடைத்தனங்கள், வன்முறைகள், எண்ணிக்கையில் அடங்கிவிடக் கூடியவையா? தமிழ் மக்களின் ஜீவனோபாய உடமைகள் மட்டுமா சூறையாடப்பட்டன? எத்தனை தமிழ்ப் பெண்களின் கற்பு அவர்கள் குடும்பத்தினர் முன்னிலையிலேயே பறிக்கப்பட்டது.

காலங்காலமாய் எங்களால் பேணிப் போற்றப்பட்டு வந்த கலைப் பொக்கிஷங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. இவற்றிற்கெல்லாம் சில

இலட்சம் ரூபாய்களால் ஈடுகட்டி விடலாம் என்பது எத்தகைய கேலிக்கிடம். இத்தனை இம்சைகளையும் கண்ட தமிழ் மக்கள் மனச் சோர்வுற்றார்களா? இல்லை தமது போராட்டத்தில் இருந்து இம்மியேனும் பின் வாங்கினார்களா? கிடையாது. இந்த இம்சைகள் யாவும் இவர்களின் இலட்சியத்திற்கு உரம் போட்டவையாகவே அமைந்தன. சமயம் கிடைக்கும் போதெல்லாம் தமிழ் மக்கள் அதை ஸ்ரீலங்கா அரசால் நடத்தி முடிக்கப்பட்ட தேர்தலில் அதை மிக உறுதியாய் நிருபித்தனர். இனவெறியைத் தூண்டியும் இனப்படுகொலையை நடத்துவதன் மூலமாயும், கூதல் காய்ந்து கொண்டிருக்கும் ஓர் அரசு நேர்மையான போராளிகளான எம்மைப் பார்த்துப் பயங்கர வாதிகள் என்பதிலும் வேடிக்கை வேறு என்ன இருக்க முடியும்? பாராளுமன்ற ஜனநாயகத்தின் அரை நூற்றாண்டுப் பூர்த்தியைக் கொண்டாடிய அதே வேளையில் இன்னொரு பக்கத்தில் தமிழ்த் தலைவர்களை அதே பாராளுமன்ற உறுப்பினர்களை அர்த்தசாமத்தில் இராணுவ வேட்டையாடிப் பிடிப்பதும் அவர்களை வீட்டுடன் வைத்தே தீயிட்டுக் கொளுத்த முயன்றமையும் உங்கள் ஜனநாயகப் பாரம்பரியத்தில் எத்தனையாவது அத்தியாயத்தில் சேர்த்துக் கொள்ளப் போகின்றீர்கள்?

பயங்கரவாதம், கொள்ளை என்கிறீர்கள். ஸ்ரீலங்கா அரசின் ஏவல்படைகளினால் நடத்தி முடிக்கப்பட்ட பயங்கரவாதங்களுக்கு இணையாகப் பயங்கரவாதங்கள் இத்தீவில் எக்காலத்திலும் நடக்க முடியுமா? அதே ஏவல் படைகளினால் சூறையாடப்பட்ட தமிழ் மக்களின் சொத்துக்கள் அவர்களிடம் இருந்து பறிக்கப்பட்டமையும் இத்தீவு மக்கள் அறியாத இரகசியங்கள் அல்ல. போதாக் குறைக்கு அவ்வப்போது உங்களது அரசியல் ஏஜண்டுகள் அரசியல் என்ற பெயரில் துப்பாக்கிகளையும் சுழற்றித் திரிந்தமை அண்மைக்கால வரலாறு. இத்துணை கேவலங்களையும் நடத்தி முடித்திருக்கும் நீங்கள் எம்மைப் பயங்கரவாதிகளாய்ச் சித்திரிக்கக் கச்சை கட்டியிருப்பதை விட இந்நூற்றாண்டின் சிறந்த நகைச்சுவை வேறென்ன இருக்க முடியும்? பிரிவினை கோருகின்றோம். நாட்டைத் துண்டாட முயற்சிக்கின்றோம் எனச் சொல்லுகிறீர்களே, நாம் எப்போது உங்களுடன் சேர்ந்திருக்கிறோம்? ஐரோப்பியரால் கைப்பற்றப்பட்ட எமது பூமி எக்காலத்திலும் எம்மிடம் திருப்பி ஒப்படைக்கப்படவில்லை. அதனை நாம் இணைப்பு என்ற பெயரில் யாரிடமும் தாரைவார்க்கவும் இல்லை. ஆக்கிரமிப்புகள் வேறுபட்ட அதிகார அமைப்புகளினால் கைமாறிப் பொறுப்பேற்கப் பட்டு வரும் நிலையே இன்னும் நீடிக்கின்றதே அன்றி எம் பூமியை நாமே நிர்வகிக்கும் நிலை எம் வசம் இன்னும் வரவில்லை. இந்நிலையில் நாம் கோருவது விடுதலையே அன்றித் துண்டாடல் அல்ல. இதனை நாம் கோருவது நிச்சயம் குறுகிய மனப்பான்மையான ஒரு செய்கை அன்று. இதை

நாம் பெறுவதன் மூலம் நிறைவேறுவது எமது இலட்சியம் மட்டுமல்ல இதன் மூலம் சிங்கள மக்களுக்கும் பெரும் நன்மையைச் செய்தவர்களாவோம். எப்படியெனில், அதன்பின் இனப்பிரச்சினையைப் பூதாகாரமாக்கி அரசியல் பிழைப்பு நடத்தல் என்பது சிங்கள மக்கள் மத்தியில் எடுபடாது. இதனால் சிங்கள மக்கள் மொழி தவிர்த்த ஏனைய விஷயங்களில் அடிமைப் படுத்தப்பட்டிருக்கும் நிலையைப் பூரணமாக உணரவும் தமக்கு உண்டான அரசியல் பொருளாதாரச் சமூகத்தளைகளில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ளவும் முன்வருவர்.

எந்த ஒரு தேசிய இனமும் தனது இறைமையை நிலை நிறுத்துவதை, பறிக்கப்பட்டிருப்பின் அதை மீண்டும் பெற்றுக் கொள்ள முயற்சிப்பதைத் தேசத்துரோகம் என்றோ, பயங்கரவாதம் என்றோ, உலகில் எந்த ஒரு சாசனமும் கூறிவிடவில்லை. எமது உரிமைகளை நீங்கள் ஆரம்பத்திலேயே அங்கீகரித்ததில்லையே; அங்கீகரித்திருப்பின் இந்நிலை இத்தீவில் தோன்றியிருக்க வாய்ப்பில்லை. அங்கீகரியாதது மட்டுமல்ல மாறாகக் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக உங்கள் அரசியல் சோரம் போகும் நிலையை மறைப்பதற்கு, பதவி நாற்காலிகளைத் தக்க வைத்துக் கொள்வதற்கு அவ்வப்போது அப்பாவிச் சிங்கள மக்கள் மனதில் தமிழ் மக்களுக்கு எதிரான விஷயத்தையே ஊன்றி வளர்த்துள்ளீர்கள். ஆனால் சிங்கள மக்கள் உங்கள் நச்சு வலையில் முற்றதாக விழுந்து விடவில்லை என்பதை, உங்களால் உருவாக்கப் பெற்ற இனக் கலவரங்களின் போது தமிழ் மக்களுக்குத் தம்மால் முடிந்த பாதுகாப்புகளை வழங்கிக் காடையர்களிடமிருந்தும், உங்கள் ஏவல் படைகளினது கொடுமைகட்குத் தமிழகத்தை முற்றாகப் பலியிடாது அனுப்பியதன் மூலம் நிரூபித்து வைத்துள்ளனர். வழமையாக ஸ்ரீலங்கா அரசின் எதிர்க்கட்சிகளே தாம் பதவிக்கு வருவதற்காக தமிழ்மக்களின் பிரச்சினையில் ஆளும் அமைப்பு ஏதும் தீர்வுகாண முயல்கையில் அதை எதிர்த்துக் கழறுவதும், சிங்கள மக்களைத் தூண்டிவிடுவதுமான ஒரு நிலையே இருந்து வந்துள்ளது. முதன் முறையாக ஓர் ஆளும் அமைப்பு நேரடியாகத் தமிழ் மக்கள் பால் இனவெறியைத் தூண்டியமை கடந்த ஆறு ஆண்டுக்கால ஆட்சியின் மிக மோசமான நடவடிக்கை. ஸ்ரீலங்காவின் ஆளும் அமைப்பு தமிழ் மக்கள் இடையேயான உறவு நிலை எப்போதும் இல்லாதவாறு மிகவும் பழுதுபட்ட ஒரு நிலையைத் தோற்றுவித்தமையை, சித்திரித்த பொறுப்பைத் தற்போதைய ஆளும் அமைப்பே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்போம், தீர்ப்போம் என்றே கடந்த கால் நூற்றாண்டுக்கு மேலாகச் சில ஸ்ரீலங்கா அதிகார அமைப்புகள் சொல்லி வருகின்றன. நாங்கள் உங்கள் தீர்வை

ஏற்கின்றோமோ இல்லையோ, நீங்கள் இதுவரையில் கபடமற்ற முறையில் எக்காலத்திலும் தமிழ் மக்கள் பிரச்சினையைத் தீர்க்க உருப்படியான நடவடிக்கைகள் ஏதும் எடுத்தது உண்டா? மாறாக, பிரச்சினையைத் தீர்க்கின்றோம் எனக் கபடப் போர்வையுடன் தமிழ் மக்களின் உரிமைப் போராட்ட உணர்வுகளை மழுங்கடிக்கச் செய்யும் காரியங்களிலேயே காலம் காலமாக ஈடுபட்டீர்கள். உங்களிடம் தமிழ் மக்கள் எதை எதிர்பார்த்தார்கள்? பொருளாதாரத்தையோ வேலைவாய்ப்பையோ அல்ல. அவைகளை உங்கள் பொருளாதாரக் கொள்கைகள் ஒன்றும் நிறைவேற்றப் போவதுமில்லை என்பது தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். இல்லை, இவைகளை எல்லாம் நீங்கள் வழங்க முன்வந்தாலும்கூட இத்தீவில் தமிழர் தொடர்ந்து தமிழராக வாழ்வதற்கு என்ன உத்திரவாதம் உங்களால் வழங்க முடியும்? சுதந்திரம் அல்லாத மீதி எந்தச் சுபிட்சமும், தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் அந்நியமானவையே. இத்தீவில் வனவிலங்குகளுக்கேனும் ஒரு வரையறுக்கப்பட்ட பிரதேசம் உண்டு. ஆனால் தமிழன் வாழ்வதற்குப் பாதுகாக்கப்பட்ட வரையறை உள்ள இடம் எதுவும் உங்களால் இதுவரை வழங்கப்படவில்லை. நீங்களாகவே வழங்கப் போவதுமில்லை. இந்நிலைக்கு நாம் வந்து பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாகின்றது. (விசாரணையின் நடுவே பிரதி சொலிசிட்டர் ஜெனரல் குறுக்கிட்டு "இந்நீதி மன்றத்தை உமக்குக் கிடைத்த மேடையாகப் பாவிக்கும் நோக்கமா?" என்றார்). எமக்கு எதற்கு மேடை? அப்படி ஒன்றை உருவாக்கித் தரும்படி நாமாக யாரையும் கேட்கவும் இல்லையே. மாறாக நீங்களே வலிந்து கொண்டுவந்து எம்மை இங்கு நிறுத்தியிருப்பது மட்டுமல்லாமல் எம்மீது அபாண்டங்களையும் சுமத்தினீர்கள். எம்மீது பொய்களைப் புனையச் செய்தது அல்லாது எம்மையே பொய்யராக்கவும் எத்தனித்த போது சில உண்மைகளை இங்கு நாம் பேசினோமே அல்லாமல் நாம் மேடை நாடகம் எதுவும் ஆடவில்லை. உண்மைக்கு மேடையோ வெளிச்சமோ போட்டுக்காட்ட வேண்டியதில்லை. அது மிகவும் மகத்தானது. அது வெளிவருவதை எந்தச் சக்தியாலும் நிரந்தரமாய்த் தடுத்துவிட முடியாது.

நாம் பயங்கரவாதிகளும் அல்லர். அதன் எந்த உருவையும் ஆதரிப்போரும் அல்லர். மாறாக அதை நாம் கண்டித்து உள்ளோம். ஆனாலும் பயங்கரவாதம் பயங்கரவாதம் என ஓலமிடும் பெருந்தகையாளர் கட்சிக்கு ஒன்று சொல்லிக்கொள்வேன். உங்களினால் கிளப்பிவிடப்பட்ட இனத்துவேசத் தீயினாலும் ஆயுதக் காடையர்களினாலும் நூற்றுக் கணக்கான தமிழன் உயிரிழந்த போதிலும், தமிழ்ப் பெண்கள் கற்பு அவர்கள் குடும்பத்தினர் முன்னிலையே சூறையாடப்பட்ட போதும், அவர்களின் நூற்றுக் கணக்கான கோடி ரூபாய்ச் சொத்துக்கள் பறிக்கப்பட்ட போதும் அவை பயங்கரவாதம்

எனத் தோன்றவில்லையா? இல்லை, அதற்கு மேற்பட்ட சொல் ஏதேனும் உண்டா என இன்னமும் அகராதியில் தேடிக்கொண்டிருக்கிறீர்களா? மாறாக, தமிழ் ஈழத்தில் ஒரு சில போலீசாரின் உயிர்கள் பறிக்கப்பட்ட போதும், வங்கி உடைமைகள் கொள்ளை போனதும்தான் உங்களுக்குப் பயங்கரவாதமெனத் தோன்றுகிறது. அப்படியாயின் இங்கு ஏற்கெனவே பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சொன்னதை எடுத்துக் கொள்ளலாம் என்ற கையறு நிலையை எய்தி விட்டீர்களா? அன்றி, எமக்கு இழைக்கப்படும் அநீதியை நிறுத்தி எம் இறைமையை அங்கீகரிக்கும்படியும், அதன் முதல் கட்டமாய்ப் பயங்கரவாதத்தை முற்றாக ஒழிக்கும் ஓர் அம்சமாய், அதன் மொத்த உரித்தாளரான ஸ்ரீலங்காவின் ஆயுதப் படைகளை எம் பூமியில் இருந்து மீளப்பெற உங்கள் அரசை வற்புறுத்துவதன் மூலம் உங்கள் மனோவிலாசத்தை உலகிற்கு உணர்த்தப் போகின்றீர்களா? தீர்மானிக்கும் பொறுப்பை உங்களிடம் விடுகின்றோம். நாம் வேறானாலும்கூட ஒரே தீவின் பிரஜைகள் என்ற வகையில் உங்கள் புரிந்துணர்வைப் பெற வேண்டும் என்ற நல்நோக்குடனேயே இவ்வழக்கின் விசாரணைக்கு நாம் சம்மதித்தது மட்டுமல்லாது, இன்று எமது நிலையையும் உங்கட்குத் தெளிவாய்க் காட்டினோம். இதனால் ஏற்படும் புரிந்துணர்வின் மூலம் எதிர்காலத்தில் எம்பொருட்டு நீங்கள் குரல் கொடுப்பீர்களே ஆயின் மிக்க மனநிறைவை எய்தியவர்களாவோம். இல்லாவிடினும் கூடத் தற்போதைய சமூகப் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்ந்தால் அதன் சுமை தாங்காது என உணர்ந்து, அதன் தடைகளை உடைத்து உங்களை விடுவிக்க நீங்கள் நடத்தும் போராட்டத்திற்கு நாம் மிக உறுதுணையாய் இருப்போம் என்பதை மனப்பூர்வமாய் உங்கட்குத் தெரிவிக்கிறோம்.

தமிழ் ஈழம் அமைப்பது ஒன்றேதான் எமது முற்றான பணி. ஈழத்திய தமிழர் தமிழராய்த் தொடர்ந்து வாழவேண்டுமாயின் தமிழ் ஈழம் அமைப்பது ஒன்றுதான் நம்முன் உள்ள ஒரே வழி என்பதனை ஸ்ரீலங்கா அரசு எம்மைப் பல வழிகளிலும் உந்தியதன் மூலமே அவ்வழியில் மிக முனைப்பாய் உள்ளோம். எமது நோக்கு மிக விசாலமானது. ஆப்பிரிக்கக் கண்டம் என்றால் என்ன? இலத்தீன் அமெரிக்க நாடு என்றால் என்ன? எங்கெங்கு அடக்கி ஒடுக்கப்பட்ட மக்கள் வாழ்கின்றார்களோடு அங்கெல்லாம் அவர்களின் விடுதலைக்காகப் போராடும் நோக்கத்தையும் உள்ளடக்கியது. அப்படி இருக்கையில் எமது சக தேசத்தவரான மக்களின், குறிப்பாக, சிங்கள மக்களின் நலன் அதற்குள் அடங்காது எப்படி போகும்? இப்படி இருக்கையில் ஸ்ரீலங்காவின் போலீசார் மட்டுமே உங்கள் பார்வையில் அப்பாவிகளாய்த் தோற்றம் தருகின்றார்களா? பச்சைக் கொலையாக 1977-ஆம் ஆண்டில் மட்டும் உயிர் இழந்தவர்களே 400க்கும் மேற்பட்ட

தமிழர்கள். அவர்களின் குருதி பாய்ந்து ஓடியதால் இத்தீவின் மேல் கவிந்திருந்த வானமே செக்கல் மயமானது. அவை எல்லாம் உங்களுக்குப் பயங்கரவாதம் என்று தோன்றவில்லையா? தமிழ் மக்களைக் கொலை செய்தவர்கள் மட்டுமே அப்பாவிகளாகவும், குற்றம் செய்யாதவர்களாகவும் உங்களுடைய கண்களுக்குத் தோற்றம் தருகின்றார்களா? தமிழ் மக்களின் உயிர், உடைமை என வரும்போது உங்கள் சிந்தனையின் மெல்லிய உணர்வுகள் அறவே மரத்து விடுகின்றனவா? அல்லது அப்படியான ஓர் உணர்வு உங்கள் வாழ்வில் புரியாத ஒரு மொழியா? நாம் வன்முறை மீது காதல் கொண்டவர்களோ, அன்றி அது மாதிரியான நோய்களால் பாதிப்புற்ற மன நோயாளிகளோ அல்லர். மாறாக விடுதலையை முன்வைத்துப் போராடும் ஒரு ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும் நேர்மையான போராளிகளே நாங்கள்.

சிங்கள மக்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்வேன். எமது பூமியில் மட்டுமல்லாது உங்கள் நாட்டின் பல பாகங்களிலும் மிக அண்மைக்காலம் வரை தமிழ் மக்கள் மீது பல தடவைகள் உங்கள் நாட்டு அதிகார அமைப்பினால் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரவாதத்தைச் சரி என நீங்கள் ஏற்றுக் கொள்கின்றீர்களா? அன்றியும் இவை மட்டுமல்லாது நம்மை நாம் அல்லாதவராக்கும் முயற்சியில் பல வழிகளிலும் ஈடுபட்டு வரும் உங்கள் அரசின் நாகரிகமற்ற நடவடிக்கைகளினின்று மீட்க நாம் முன்னின்றமையைத்தான் தவறு என்று சொல்வீர்களா? அல்லது பாதிக்கப்படுபவன் தமிழன்தானே என்ற பொறுப்பற்ற உணர்வா? அப்படியாயின் தற்போதைக்கு உங்கள் மீது எம்மால் அனுதாபம் கொள்ள மட்டுமே முடியும். நாம் விடுதலை பெறுவது நிதர்சனமான உண்மை. அதன் பின்னர் உங்கள் நாட்டின் சட்டப்புத்தகங்களில் நிரந்தர இடம் பெற்றுவிட்ட எச்சட்டங்களும் எம்மை அணுகா. அப்படியாயின் இச்சட்டங்களையும், பயங்கரவாதத்தையும், எதிர்காலத்தில் நீங்களே சுவீகாரம் எடுப்பீர்கள் என்ற கையறு நிலையை இப்போதே எய்தி விட்டீர்களா? இரு அயல் தேசங்கள் ஒற்றுமையாக இருக்கக்கூடாது என்ற நிர்பந்தம் இல்லை. மாறுபட்ட கொள்கை உடைய எத்தனையோ நாடுகள் பொருளாதாரம், பாதுகாப்பு என்ற விஷயங்களுக்காகச் சில பொதுக் கோட்பாடுகளுக்கு இடையில் ஓர் அமைப்பை உருவாக்கிச் செயல்பட்டு வரவில்லையா? அதற்காக அந்நாடுகள் தமது இறைமையை விட்டுக்கொடுத்து விட்டன என நாம் சொல்ல முடியுமா?

இவ்வுலகின் வல்லாதிக்கம் கொண்ட சில சக்திகள், தெற்காசியப் பிராந்தியத்தில், குறிப்பாய் மூன்றாம் மண்டல நாடுகளைப் பொருளாதார ரீதியில் தலையெடுக்க விடாது செய்து வரும் கூட்டுச் சதியை முறியடிக்கும் விதத்தில் இந்த உபகண்டத்தின் தன்னாதிக்க முள்ள முற்போக்குக் குடியரசுகள் இவ்வுலக நன்மை கருதி அதற்கு ஒரு

பொது அமைப்பை அல்லது எந்தக் குடியரசினதும் தன்னாதிக்கத்திற்குப் பங்கம் வராவகையில் பல குடியரசுகள் கொண்ட ஒரு ஒன்றியத்தை உருவாக்கும் பட்சத்தில் உபகண்ட நன்மை கருதித் தமிழ் ஈழம் நிச்சயமாகத் தன் பங்களிப்பை வழங்கும். இறுதியாக ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். ஸ்ரீலங்கா அரசின் எந்த அமைப்பில் இருந்தும் நாம் நீதியை எதிர்பார்க்கவில்லை. இம்மன்றமும் அதற்கு விதிவிலக்கல்ல. எமக்குத் தெரியும் உங்களது சங்கடமான நிலைமை. சுயேட்சையான நிர்வாகம் அருகிவரும் உங்கள் அரசியல் அமைப்பில் நீதிநிர்வாகத்தில் பணிபுரிபவர்கள் அரசைத் திருப்தி பண்ணியே ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்த நிலை ஏற்பட்டிருப்பது இயல்பே. இந்நிலையில், தமிழ் இன விடுதலை இயக்கங்களை நசித்தே தீருவேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கும் ஓர் அரசின் மன்றத்தில் இனியும் மெனக்கெடுவதற்கு ஏதுமில்லை. எமது இயக்கத்தின் மீதும் இம்மன்றத்தில் நடத்தி முடிக்கப்பட இருக்கும் இரண்டாவது வழக்கு. இனி எத்தனை வழக்குகள் எம்மீது உங்களால் சோடிக்கப்பட்ட போதும் நாமும் விசாரணையில் பங்கெடுத்துக் கொண்டது எனும் நிலை இவ்வழக்குடன் பூர்த்தியாகின்றது. உங்களது இல்லை; உங்களது அந்த நடவடிக்கைகள் மூலம் வெற்றி பெறப்போவதும் நாமே. உங்கள் தீர்ப்பின் பாதிப்புகள் எம்வரை அந்நியமானவையே. எனவே நாம் எமது கடமையை முடிந்தவரை செய்த மனநிறைவுடன் எதிர்காலத்தைச் சிறையில் கழிக்கவோ, வேண்டுமாயின் மரணத்தைக் கூடத் தழுவவோ, நாம் தயங்கவில்லை. ஓர் இனத்தின் விடுதலை வரலாற்றில் இவை எல்லாம் மிகச் சர்வ சாதாரணச் சம்பவங்களே. இதை நாம் தெரிந்தே ஈடுபட்டோம். எமக்கு ஏமாற்றம் என்பது எதுவுமே இல்லை. எதை எய்கின்றோமோ அதுவேதான் நம்மிடம் திரும்பிவரும். எதை விதைக்கின்றோமோ அதையேதான் அறுவடை செய்ய வேண்டும் என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவன் நான். நாம் விதைத்தவை விஷ விதைகளுமல்ல. அதனால்தான் இந்த நிமிடத்திலும் நான் மிகத் தெளிவாக மனநிறைவுடன் நிற்கின்றேன்.

*வாழ்க தமிழ்!*
*வளர்க தமிழ் ஈழம்!*
*அகன்று போகட்டும் வறுமையும்*
*அணுவாயுதப் பயமுறுத்தும்*
*ஒழிக பசியும் பிணியும்!*
*ஓங்கட்டும் மனித நேயம்!*

தங்கதுரை வாதம் முடிந்ததும், நீதிமன்றம் மௌனமானது.

## கலங்கடித்த கையறுநிலை

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உலகக் கவனத்தை ஈர்த்த தேசிய இனவிடுதலைப் போராட்டங்களில் குறிப்பிடத்தக்கவை,

*பாலத்தீனிய விடுதலைப் போராட்டம்*
*வியட்நாம் விடுதலைப் போராட்டம்*
*தமிழீழ விடுதலைப் போராட்டம்*

ஆகிய மூன்று போராட்டங்களுமேயாகும். பாலத்தீனிய விடுதலைப் போராட்டத்தில் இசுரேலுக்கு ஆதரவாக அமெரிக்கா, பிரிட்டன் உட்பட மேற்கத்திய நாடுகள் களத்தில் இறங்கின. பாலத்தீனியர்களுக்கு ஆதரவாக அரபு நாடுகளும் மற்றும் ஆசிய ஆப்பிரிக்க நாடுகளும் சோவியத் ஒன்றியமும் இறங்கின. இரு அணியிலும் வல்லரசுகள் ஈடுபட்டதால் இப்போராட்டம் பல ஆண்டுகளாக நீடித்து வந்தது. பல ஆண்டுகள் போராட்டத்திற்குப் பிறகும் இன்னமும் தெளிவான தீர்வு ஏற்படவில்லை என்பது பெருங்கவலைக்கு உரியதாகும். வியட்நாம் விடுதலைப் போராட்டத்தில் வியட்நாமிய மக்களுக்கு ஆதரவாகச் செஞ்சீனமும் சோவியத் ஒன்றியமும் ஆயுதம் உட்படப் பலவிதமான உதவிகளையும் தாமே முன்வந்து செய்தன. வியட்நாமை அடிமைப்படுத்தி வைத்திருந்த பிரெஞ்சுக்கு ஆதரவாக அமெரிக்கா தனது படைகளைக் குவித்தது. பத்து ஆண்டுகளுக்கும், மேலாக இப்போராட்டம் நீடித்ததால் சர்வதேசப் பிரச்சினையாக உருவெடுத்தது. இலட்சக்கணக்கான மக்கள் பலியான பிறகு உலகநாடுகளின் அழுத்தத்தின் காரணமாக அமெரிக்கா தனது படைகளை வியாட்நாமிலிருந்து விலக்கிக் கொள்ள நேர்ந்தது. வியட்நாம் உரிமை பெற்றது. ஆனால் ஈழத் தமிழர் போராட்டம் அறப்போராட்ட வடிவத்தில் முப்பது ஆண்டுகளும் ஆயுதமேந்திய போராட்டமாக முப்பது ஆண்டுகளும் நடந்து வந்திருக்கிறது. இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்களும் நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகளும் மாண்டனர். ஏறத்தாழ, பத்து இலட்சத்திற்கும் அதிகமான ஈழத்தமிழர்கள் பல்வேறு நாடுகளில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர். ஐந்து இலட்சம் மக்கள் உள்நாட்டிலேயே அகதிகளான அவலம் நேர்ந்தது. இவ்வளவு கொடுமைகட்குப் பின்னும், இப்போராட்டம் உலகமக்களின் கவனத்தை ஈர்க்க முடியாமல் போனது நெஞ்சத்தைப் பிழிந்தெடுக்கும் ஏமாற்றமாகும்.

ஈழத்தமிழர்களின் போராட்டத்திற்கு ஆதரவாக எந்த ஒரு நாடும் களம் காணவில்லை. ஈழத்தமிழர்கள் தங்களை மட்டுமே நம்பி இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு, தம் சக்திக்கு மீறிய அளப்பரிய தியாகத்தைப் புரிந்தனர். அமெரிக்கா, பிரிட்டன், சீனா, இசுரேல், ஈரான், பாகிஸ்தான் முதலிய இருபதுக்கும் மேற்பட்ட நாடுகள் ஈழத்தமிழர் போராட்டத்தை ஒடுக்குவதற்குச் சிங்கள அரசுக்குத் துணை நிற்கின்றன. அண்டை நாடான இந்தியா ஈழத்தமிழர் போராட்டத்தைத் தக்கவாறு புரிந்து கொள்ளாமல் அப்போராட்டத்தை ஒடுக்குவதற்குச் சிங்கள இனவெறி அரசுக்கு ஆயுதமும் நிதியும் கொடுத்து உதவியது மிகவும்

வேதனைக்குரியதாகும். உலகின் எந்த நாட்டின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்கும் இத்தனை நாடுகள் கைகோத்து கங்கணம் கட்டிக் கொண்டதில்லை. போராட்டத்தின் இறுதிக் கட்டத்தில் ஓர் இலட்சத்திற்கும் மேலான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டபோதுகூட உலக நாடுகளோ ஐக்கிய நாட்டுப் பேரவையோ அதைத் தடுத்து நிறுத்த முன்வரவில்லை. ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தின் அடிப்படை அம்சங்களை, நியாயங்களை உலகம் உணரத் தவறியது என்பதைவிட அண்டை நாடான இந்தியா அதை உணரத் தவறியது என்பதுதான் தமிழர் நெஞ்சங்களில் ஆழமான வடுவை உண்டாக்கிவிட்டது.

ஏழரைக் கோடிக்கும் மேலான தமிழ் மக்கள் இந்தியாவில் வாழ்ந்தும் இருபதேகல் தொலைவில் உள்ள தொப்புள்கொடி உறவினரான ஈழத்தமிழர்கள் அறுபது ஆண்டுகளாகத் துன்பக்கேணியில் கிடந்து துடிப்பதைத் தடுத்து நிறுத்த முடியாத வகையில் ஊமையராய்த் திகழ்ந்தார்கள் என்பது தமிழர் வரலாற்றில் படிந்துவிட்ட அவமானக் கறையாகும். உலக மக்களும் இந்திய மக்களும் ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தின் அடிப்படையை உணரவில்லை என்பதை விடத் தமிழ்நாட்டின் அரசியல் தலைவர்களில் தமிழ் மக்களில் எத்தனை பேர் இந்தப் போராட்டத்தின் அடிப்படை உண்மைகளை உணர்ந்திருந்தார்கள் என்று பார்த்தால் பெருத்த ஏமாற்றமே மிஞ்சும். தமிழ்நாட்டில் பெரும்பாலான செய்தித்தாள்களும் இன்னும் பிற செய்தி ஊடகங்களும் ஈழத்தமிழர் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் வகையில் செய்திகளைப் பரப்பியது வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சியது போன்ற கொடுமையாகும். அண்ணல் காந்தியடிகள் வழியில் கால் நூற்றாண்டு போராடினர். ஆயுதமேந்திக் கால் நூற்றாண்டு போராடினர். அரை நூற்றாண்டுகாலப் போராட்டத்தில் ஆயிரமாயிரம் இளைஞர்களும், இளம் பெண்களும், குழந்தைகளும் போர் வேள்வியில் பலியாயினர். கணக்கறியாத மக்கள் கூட்டம் சிங்கள வெறியர்களால் தீக்கிரையாக்கப்பட்டது. எல்லாவிதமான தியாகங்கள், இன்னல்கள், தாங்கொணாத இழப்புகள் ஆகியவற்றை எண்ணி எண்ணி மாறாமல் உரிமை ஒன்றே இலக்கு என்று போராடிய ஈழத்தமிழர் போராட்டம் ஒடுக்கப்பட்டு விட்டது. எள்ளளவும் மனிதத் தன்மையே இல்லாத ஆட்சியாளர் என்னும் அரக்கர் கூட்டத்தால் நாசமாக்கப்பட்டுவிட்டது. எம்தமிழ் ஈழ மக்கள் இன்று பட்டிமாடுகளாகவும், பலியாடுகளாகவும் சிக்கிக்கொண்டு தவிக்கின்றனர். மீண்டும் ஒரு விடியல் வருமா?

உரிமைப் போராட்டங்கள் பல நாடுகளில் பல இன மக்களால் நடத்தப்படுகின்றன. போராட்ட முடிவில் ஓரிரண்டு கோரிக்கைகளையாவது நிறைவேற்றியுள்ளனர். ஒரு கோரிக்கைக்கூட ஏற்றுக்கொள்ளப்படாமல்

முற்றிலுமாக ஒடுக்கப்பட்ட போராட்டம் ஒன்று உண்டெனில் அது ஈழ்த்தமிழரின் தமிழீழப் போராட்டமே. யாரும் உலகெங்கினுமுள்ள உரிமைப் போராட்ட வீரர்கள் ஒருவர்கூட ஒப்புக் கொள்ள முடியாத முடிவு. சிங்களரின் காட்டுமிராண்டித் தனமான அடக்குமுறை கண்டு நல்ல ஆட்சியாளர் நடுங்குகின்றனர். அவர்கள் நெஞ்சில் தற்போது எழும் ஒரு கேள்வி.

*இருபத்தொரு நூற்றாண்டை எட்டும் வையம்*
*எத்தனையோ சாதித்ததென்று கூறும்*
*பெருமைகளில் 'சிறுபான்மை சமபங்கேற்கும்'*
*பேறிலையேல் பேதையர்கள் பெரிதென் கண்டீர்?*

*(கு.க. பக்கம்:630)*

சிங்கள நெஞ்சில் சத்தியசோதனை சாத்தியப்படுமா?

# 4. வையத்தின் மையம்

மானுட யாத்திரை பாடிய கவிஞர் குலோத்துங்கன், பிறவி வேண்டாத பல யோகியரும், சித்தரும் பாடிப்போந்த மண்ணில் பிறந்தவர். பிறவாநிலை அவாவி வாழ்ந்த சித்தரைப் போற்றும் செந்தமிழ்ச் சித்தர். மீண்டும் மனிதனாகப் பிறக்க வேண்டும் என்று தன் ஆசையைப் பறைசாற்றிப் பாடுகிறார். மனித குலத்தின் முன்னேற்றத்திலும், அதன் வளங்கண்டு மகிழ்தலிலும் அளவு கடந்த ஈடுபாடு கொண்டவராகத் திகழ்கிறார்.

*இறவாதிருப்பதெனில் ஏற்பேன்,*
*இறந்தால்யான் பிறவாதிருத்தல் வேண்டேன்*
*வையகக் காட்சிகளின் கோடி இன்பம் காண்பவன் நான்*

என்று தன் ஆசையை உலகறியப் பாடிப் பரவசமடைகிறார். மனிதனைக் காண மீண்டும் மீண்டும் மனிதனாகப் பிறக்க வேண்டும் என்று தீராத தாகம் கொண்டதால்தான் கவிஞர் 'மானுடயாத்திரை' என்ற மனிதக் காப்பியத்தைப் பாடியிருக்கிறார். காப்பியத்தின் தொடக்கமும் மனிதனே, நடுவும் மனிதனே, முடிவடையாத முடிவிலும் அவனே. 'மனிதம்' அவரது நீண்ட வாழ்வில், கவிபடர்ந்த நெஞ்சில் அழியா ஓவியமாக நின்று நிலைத்திருப்பதைக் காப்பியம் முழுவதும் கண்டுகளிக்கலாம். இக்காப்பியம் சமுதாயம், அரசியல், அறிவியல், ஆன்மிகம், சமயம் என ஐம்பால் காப்பியமாகப் படைக்கப்பட்டிருக்கிறது. இக்காப்பியத்தின் மூன்று பாகங்களிலும் ஐம்பால்களிலும் பாவிடை ஊடு போல் விளங்கி நிற்பது மனிதனே. மனிதன் இல்லாமல் இவ்வுலகம் எவ்வகையிலும் மேன்மை அடைதல் இயலாது, என்பதைப் பெருங்கவிஞர் குலோத்துங்கன் காவியம் முழுவதும் ஆணித்தரமாகப் பாடுகிறார்.

இயற்கையின் பலவிதமான அழகிய தோற்றங்கள், அச்ச மூட்டும் தோற்றங்கள் நிகழ்வுகள் எவ்வாறு உண்டாகின்றன? ஏன் நிகழ்கின்றன? யார் நிகழ்த்துகிறார்கள்? இக்கேள்விகளால் ஆதி மனிதன் குழம்பினான். அஞ்சினான். விடை தெரியாமல் புதிர்கள் மண்டிய வாழ்க்கை நடத்தினான். இதனைக் கவிஞர் பெருமகன்,

*..............மழையும், காற்றும்*
*வருவதேன், பொழுது தோன்றி*
*மறைவதேன், புறங்கள் யாவும்*
*இருள்வதேன், இரவு வானம்*
*வெண்ணிலா வைரம் பூண்ட*
*மேனியோ டொளிர் வதேன் ஓர்*
*வெள்ளியின் வட்டில் அன்ன*
*தேனில(வு) ஒளிகு றைந்து*
*தேய்ந்து பின் மறைவதென்ன?*

*(மா.யா.பாகம்.-3.பாடல்:12)*

என உவமை நலங்கனியப் பாடுகிறார். படிக்குங்கால் உள்ளம் பரவசமடைகிறது. பல்வேறு புதிர்களுக்கும் விடை தெரியாத ஆடை அணியாத ஆதிமனிதன் வயிற்றுக்கு உணவு தேடி வாழ்ந்தான். காலம் செல்லச்செல்ல வேறு வேறு பசிகளும் தலையெடுக்கத் தொடங்கின. இதை அவனால் உணரமுடிந்தது. பசி தீர்க்கத் தேடத் தொடங்கினான். இதனை,

*மண்ணையும் ஆய்ந்தார், நீல*
*வானையும் ஆய்ந்தார், பின்னர்*
*விண்ணையும் கடந்தெழுந்து*
*வெளியெல்லாம் துருவித் தேடும்*
*வேள்வியில் இன்பங்கண்டார்*

*(மா.யா.பாகம்-1.பாடல்கள்:35,36)*

என்று பாடுகின்றார் குலோத்துங்கன். மனிதனிடம் பலவகையான குணநலன்கள் காணப்படுகின்றன. அவனிடம் பனிமலரின் குளிர்ச்சியும் உண்டு, பகலவனின் வெம்மையும் உண்டு. இரண்டும் சேர்ந்த புனிதன் அவன். எடுக்க எடுக்கக் குறையாத சக்திப் புதையலும் அவனே என்பார், பல்வேறு ஆராய்ச்சிக் களங்கள் கண்ட கவிஞர்.

## கருவியும் திருவும் கல்வியே

மனிதன் வளர்ச்சியில் கல்வி பெரும் பங்கு வகிக்கிறது என்பது மறுக்க இயலாத சத்தியமாகும். ஆயின் கல்வி என்பது என்ன? கல்வியின் இலக்கணம் யாது? அதனால் விளையும் பயன் என்ன? என்பது போன்ற கேள்விகளுக்குக் கவிஞர் பெருமகன் மிக அழகாக அருமையாகச் சந்தத் தமிழில் விளக்கம் தந்து பெருமையடைகிறார்.

*ஏடன்று கல்வி;*
*சிலர் பேசும் இயலன்று கல்வி;*
*பலர்க்கெட்டாதென்னும் வீடன்று கல்வி;*

*ஒரு தேர்வு தந்த விளைவன்று கல்வி;*
*அது வளர்ச்சி வாயில்* (கு.க.பாடல்: 202)

இதைவிட மேம்பட வேறு யாரும் கல்விக்கு இலக்கணமும் இலக்கும் கூறமுடியாது. கல்வி மனிதனின் வளர்ச்சி வாயில். எனவே தான் கவிஞர் குலோத்துங்கன் கல்விப் பணி மக்கள் இயக்கமாக மாற வேண்டும் என்று விரும்புகின்றார். அப்போது தான் 'பொதுமக்கள் கல்வி' என்பது நனவாகும். சிலர் படிப்பதும், பலர் படிக்காமல் வாடுவதும் நல்ல நாட்டிற்கு அழகல்ல. கல்விதான் நாட்டின் உயிர்மூச்சாக விளங்க வேண்டும். அதனால்தான் புரட்சிக் கவிஞர் பாரதியார்,

*வீடு தோறும் கலையின் விளக்கம்*
*வீதிதோறும் இரண்டொரு பள்ளி*
*நாடு முற்றிலும் உள்ளன ஊர்கள்*
*நகர்கள் எங்கும் பலபல பள்ளி*
*தேடு கல்வியில்லாத ஒருரைத்*
*தீயினுக் கிரையாக மடுத்தல்*
*கேடு தீர்க்கும் அமுதம் என் அன்னை*
*கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்*

என்று வீதி தோறும் கல்வி விளக்கு ஏற்றப்பட வேண்டுமென்று அன்று பாடினார். கவிஞரும் அவ்வாறே பாடுகிறார். கல்வியினால் மட்டுமே அறிவு வளம் பெருகும். அறிவு வளமே இவ்வைய வாழ்விற்கு அடிப்படையான முதலீடாகும். தெள்ளிய அறிவினால் மலரும் உலகம் இந்த வையத்துண்டு. தேவர் உலகம் என்று எதுவும் இல்லை; அப்படி இருப்பின் அதுவும் மனித அறிவு வளத்தினால் படைக்கப்பட்டதே என்று வீறாப்புடன் பாடுகிறார் கவிஞர். மனிதன் பால் பற்றும் அவன் வளர்ச்சியில் அளவு கடந்த ஆர்வமும் கொண்டவராகத் திகழ்கிறார்.

கல்வி கடவுளுக்கு ஒப்பானது. கல்வி கற்ற மனிதன் மட்டுமே கருவிகளைப் படைக்கும் ஆற்றலுடையவனாகிறான். அவன் படைத்தளித்த கருவிகளால்தான் மனித வாழ்க்கை வசதியும் வளமும் பெற்றதாக இருக்கிறது. சிறியவை அனைத்தினுள்ளும் சிறியதையும், பெரியவை அனைத்தினுள்ளும் பெரியதையும் தேடும் சக்தி கருவியில் இல்லை; அது கல்வியால் வளம் பெறும் சிந்தையின் செல்வமாகும். வரம்புள்ள வாழ்க்கையை உடைய மனிதன் கையில் வரம்பிலா ஆற்றல் மண்டிக் கிடக்கின்றது. மனிதனுடைய வரம்பிலா ஆற்றலைக் கண்டு பலர் பாராட்டுகின்றனர். பலர் அஞ்சுகின்றனர். எத்துறை எனினும், எக்கருத்து எனினும் எம்முயற்சி எனினும் எதிர்ப்போர் ஏற்போர் எனப் பிளவு பட்டு நிற்றல் உலக நடைமுறையே யாகும் என்று கவிஞர் அமைதி கூறுவார். எதிர்ப்போரும் ஏற்போரும் கூடி வாழ்வதே நல்லது. பன்மையில் வலிமை கிடைக்கிறது. பன்மையில் அழகு மிளிர்கிறது. பன்மையே இயற்கை

அன்னையின் படைப்பில் ஒளிரும் ஆன்மா. பரிதியின் வெள்ளை ஒளி வானவில்லாக நிறம் பிரிந்து தோன்றும் போது எத்தனை அழகு! வேற்றுமை எங்கே விரிகிறது? நிறங்கள் வேறு வேறானாலும் இனிமையானதன்றோ! வானவில்லின் ஒளிக் கீற்றுகள் போல் மனிதர் இனம் யாவும் இணைந்து வாழ்வதே அழகாகும். மனித நேயத்தை மிஞ்சும் மதமில்லை. ஒழுக்கம் என்னும் பண்பில் இடம்பெறாத பொருள் எதுவுமில்லை. அறிவும் ஒழுக்கமும் சேர்ந்த வாழ்வு இவ்வுலகையே இன்ப வீடாக்கும். அவ்வாழ்வே இங்கு வரமாகும். விண்ணகம் மண்ணகம் தேடி வருமென்று வைய்ய வாழ்வின் மாண்பினைப் பாடி மகிழ்கிறார் கவிஞர். மானுடம் யாவற்றினும் உயர்ந்தது. யாரையும் வெல்லக் கூடிய வல்லமையுடையது. இதனை,

*ஆறுகொள் சடிலத்தானும் அயனும் என்று இவர்கள் ஆதி*
*வேறுள குழுவை எல்லாம் மானுடம் வென்ற தம்மா*

என்று கம்பர் பாடுகிறார்.

## வித்தும் விளைவும் மேதைமையே

மனிதப் பண்புகளின் உறைவிடமாக விளங்கும் கவிஞர் தமது கவிதைகளில் ஆங்காங்கு ஓங்கிக் குரல் கொடுத்து உலகுக்கு அறிவிக்கும் உண்மை ஒன்றுண்டு. அது மனித சமுதாய மேம்பாட்டிற்குத் தனிமனிதர் மேதைமைதான் 'வித்து' என்பதாகும். தனிமனிதர் முயற்சியினால், அயராத உழைப்பினால், சாதனையால்தான் மனித சமுதாயம் தொடர்ந்து வளர்ந்து வருகிறது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. இதனை,

*................. தனிச்சிலர் சாதனை*
*தவழும் மானிடம் தாவிட விடை தரும்*

என்றும், மேதையின் மின்னல் தந்த வெளிச்சத்தில் விண்ணும் வெல்லும் பாதையின் மேல் நடந்தான் என்றும் இலக்கிய நயம்படக் கூறுகின்றார். சாதனையாளர் யாராய் இருப்பினும் நம்மவர், பிறர் என்று கருதாமல் அவர் மனித குலம் தழைக்க வந்த மாமனிதர் என்று போற்ற வேண்டும் என்பது கவிஞர் பெருமகனின் கோரிக்கையாகும். சாதனையின் பயன் கருதிப் போற்ற வேண்டும். தலைமேல் வைத்துக் கொண்டாட வேண்டும்.

*வேண்டுவ படைக்கும் மேதையின் வித்துளர்*
*யாண்டு தோன்றினும் யாவரே யாயினும்*
*போற்றுவீர், நம்நிலப் புதையல் என்றவர்தமை*
*வேற்றுமை யறியா விழியொடு காணுவீர்*

*(கு.க. பக்கம்:394)*

என்ற கவிதை வரிகள் கவிஞரின் கோரிக்கையைப் பறைசாற்றுகின்றன. தனிமனிதர் சாதனையால் தான் இவ்வுலகம் முன்னேற்றம் அடைகிறது என்பதே அறிவியல் வல்ல கவிஞரின் அசைக்க முடியாத நம்பிக்கையாகும். நம்பிக்கை மட்டுமன்று அன்னாரது முடிந்த முடிபான கொள்கையுமாகும். மனிதன் மீது அவர் கொண்டுள்ள நம்பிக்கை கீழ்வரும் கவிதை வரிகளில் ஒளிவிடுகிறது.

*தனிமனிதர் குருதியினில் வெயர்வு நீரில்*
*தழைக்கின்ற பயிரன்றோ தரணி தன்னில்*
*மனிதகுல முன்னேற்றம், அவ்வப்போது*
*மாமனிதர் தோன்றியதால் மனிதன் வென்றான்*
*(மா.யா.பாகம்-2. பாடல்:171)*

மனிதன் படைப்பாற்றல் மிக்கவன். கலப்பை முதல் கணிப்பொறிவரை அவன் படைத்தளித்த கருவிகள் எண்ணற்றவை. ஏறு மயில் ஏறிவரும் வேலனின் வேலும் மனிதன் படைத்ததுதாம், அயோத்தி இராமனின் வில்லும் அம்பும் அவன் வடித்தவைதாம். அச்சமூட்டும் அணு ஆயுதமும், ஏவுகணைகளும் மனிதன் உருவாக்கியவைதாம். வல்லரசுகள் ஒன்றோடொன்று முரண் கொண்டு குவித்து வரும் படைக்கலங்கள் நல்லோரை நடுங்க வைக்கின்றன. வலிமையற்ற நாடுகளை அச்சுறுத்துகின்றன. எனினும் மனித இனம்,

*தடம்புரண் டகலு மென்றும்*
*தன்திசை மாறு மென்றும்*
*அஞ்சுவம் இல்லை, நீண்ட*
*அறநெறி மரபை மாந்தர்*
*மிஞ்சுவர் இல்லை (மா.யா.பாகம்-2.பாடல்கள்:608,609)*

என்று பாடி அச்சமடையத் தேவையில்லை என்கிறார். மனிதன் காலடி எட்டி வைத்தால் இந்த உலகம் நீளும். அவன் தளர்ந்து ஓய்ந்து உட்கார்ந்தால் உலகம் சுருங்கும். கனவும் கற்பனைக் கடலும் கரையிலா மனமும் கொண்ட மனிதன் வாழ்வின் மன்னன் ஆவான். அதனாற்றான் ‘எல்லோரும் இந்நாட்டு மன்னர்’ என்கிறோம். தடைகள் பல உண்டு எனினும் தடந்தோள்கள் உண்டு என்ற வீறாப்பில் தடைகளை உடைத்து நொறுக்கி முற்செலும் உணர்வின், ஆற்றலின் ஊற்று மனிதன்.

மனிதன் ஒரு வியத்தகு உயிர். இப்பேரண்டத்தின் மையம் இறைவனுக்கே உருவமும் பேரும் தந்தவன். தன் முயற்சியில் தன்னை மேம்படுத்திக் கொள்பவன். தன் எல்லையறியாது தானாகவே வளருகின்றான். இவ்வுலகின் முகவரியும் வரலாறும் அவனே. மனிதன் வாழும் இந்நிலவுலகம், தீராத ஆற்றல் உடையது. வற்றாத சிந்தனை வளத்தால் விந்தைகளையும் கோடி கோடியாய் விளைவிக்கும் தேவப் பண்ணையாகும் இம்மண்ணுலகம்; சிந்தையே தெய்வம். சிந்தையின்

செழிப்பினாலே வளர்வது நாகரிகம். மனிதனை விட உயர்ந்த தேவர் ஒருவருமில்லை. மனிதனைவிடக் கீழான புழு பூச்சிகள் எவையுமில்லை. மேன்மையும் அவனே. கீழ்மையும் அவனே. கல்வியாலும் சிந்தனை வளத்தாலும் செயல் திறனாலும் தன்னை மேம்படுத்திக் கொள்பவனும் மனிதனே. இவைகளில் எவ்வித ஆர்வமும் முயற்சியுமின்றிச் சோம்பித்திரிந்து சோற்றுக்கலைந்து புழு பூச்சிகளை விடத் தன்னைக் கேவலப்படுத்திக் கொள்பவனும் மனிதனே என்ற நிலைகண்டு கவிஞரின் உள்ளம் கனக்கிறது.

**இன்ப நாட்டம்**

மனிதன் தன்னை மேல்நிலையில் நிறுத்திக் கொண்டாலும், கீழான நிலையில் வைத்துக் கொண்டிருந்தாலும் இன்ப நாட்டம் குறைவதில்லை. ஐம்புலன்களாலும் நுகர வேண்டிய இன்பங்கள் அனைத்தையும் துய்க்க அலைகிறான். உலகில் இன்பம் அடைதல் உயிரியற்கை.

*எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது*
*தான் அமர்ந்து வரூஉம் மேவற்றாகும்*
*(தொல். பொருள்.219)*

என்பார் தொல்காப்பியர். ஆயின் - உயிர்கள் இன்பம் மட்டுமே அனுபவிப்பதில்லை. இன்பங்களையும் துன்பங்களையும் மாறி மாறி அனுபவிக்க நேரிடுகிறது. புறநானூறு,

*இன்னாது அம்ம இவ்வுலகம்*
*இனிய காண்க இதன் இயல்பு உணர்ந்தோரே*

என்று தெளிவுபடுத்துகின்றது. ஒரு வீட்டில் திருமணப் பறை முழுங்குகிறது. அடுத்த வீட்டில் சாப்பாறை முழங்குகிறது. அன்புக்குரிய காதலர் ஓரிடத்தில் கூடி மகிழ்கின்றனர். அதே வேளையில் மற்றோரிடத்தில் பிரிந்தோர் வருந்தி அழுகின்றனர். இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் காரண காரியம் கூறி விளக்க இயலாது. இவ்வனுபவங்கள் ஏன்? இதற்கு,

*மாந்தர் வாழ்வொரு மர்மம், வாழும்*
*மனிதனோர் மர்மம்........... (மா.யா.பாகம்-1. பாடல்:36)*

என்ற குலோத்துங்கனின் வரிகளால் விடை அமைகிறது. இன்பமும் துன்பமும் மாந்தர் தம் சிந்தனையின் அனுபவமாகும். சிந்தையெனும் மேடையில் அரங்கேறும் ஓரங்க நாடகங்களாகும். மாந்தர் தம் சிந்தை எல்லையற்றது. முந்தையோரின் எல்லையற்ற தன்மையை வியந்து பாடுகிறார் கவிஞர்.

*........செறிவு அனைத்தும்*
*தன்னுளே தாங்கி நிற்கும்*

*தனிப்பொருள், முழுமையாக*
*இன்னும் யாம் அதன் திறத்தின்*
*எல்லையைக் கண்டோம் இல்லை.*

எல்லை காண இயலாத பெருமித நிலை இறைவனுக்கு மட்டும்தான் உண்டு என்பதில்லை. மனிதனுடைய மனத்திற்கும் உண்டு என்று உறுதியாக அறிவிக்கிறார் கவிஞர் பெருமகன். மனமுடைய மனித இனம் இல்லறத்தின் வாயிலாக உயர்ந்த அனுபவங்களைப் பெறமுடியும். இல்லறமல்லது நல்லறமில்லை என்பர். திருவள்ளுவரும் அவ்வாறே போற்றுகிறார். இல்லறவியல் பகுதியில் இல்லறத்தின் மாண்பினையும் அதனால் மனிதன் பெறும் பயன்களையும் பேறுகளையும் நிரல்படக் கூறுகிறார். ஆணும் பெண்ணும் சேர்ந்து நடத்துவது இல்லறம். அதன் பயனாய் நன்மக்கட்பேறு உண்டாகும். மக்கட்பேறு அன்பினை வளர்க்கும் வாயிலாகும். மக்கட்பேற்றின் காரணமாக மனிதன் நாளடைவில் தன்னிடமுள்ள தீய பண்புகளைத் துறந்து நற்பண்புகளைப் பெறுகின்றான். அவனிடம் விருந்தோம்பல், இனியவை கூறுதல், செய்ந்நன்றி உடையவனாயிருத்தல், நடுவுநிலைமை, அடக்கமாயிருத்தல், ஒழுக்கம் போற்றுதல், பொறுமை பூணுதல், பொறாமைப்படாதிருத்தல், புறங்கூறாதிருத்தல், பயனுடைய சொற்களை மட்டுமே பேசுதல், பிறர் துன்பங்கண்டு உதவுதல், ஈதல் போன்ற உயர்பண்புகள் வந்து அமைகின்றன. அதனால் புகழுடையவனாகிறான். இல்லறம் எல்லா நற்பண்புகளையும் வளர்த்து மனிதனை அன்புடைய்வன் என்ற நிலைக்கு உயர்த்தி விடுகிறது. காயாக இருந்த மனிதன் இல்லறத்தால் அருட் கனியாகிறான். எனவேதான் இவற்றையெல்லாம் உள்ளடக்கிக் கவிஞர் குலோத்துங்கன்,

*நல்லன அனைத்தினுள்ளும்*
*நல்லதாம் என்பதுண்டேல்*
*இல்லறம், குடும்பம் விஞ்ச*
*எத்தனை நாம் கண்டோம், அன்பில்*
*உள்ளமும் உயிரும் ஒன்றும்*
*உறவுகள் படைக்கும் இன்பம்*
*விண்ணிலுமில்லை, கூற*
*வேறொரு உலகமில்லை*

*(மா.யா.பாகம்-1. பாடல்கள்:53-55)*

என்று கூறுகின்றார். ஆணும் பெண்ணுமாய் இணைந்து இல்லறம் பூண்டு வாழும் மானுட வாழ்வின் மர்மத்திற்கும் முடிவில்லை. தீராத மர்மம் எனினும் தேடல் அவசியம். ஏனெனில் மனிதன் பயணம் ஒண்டிப்பயணம்; ஒரு வழிப்பயணம். எனினும் முன்னேறும் பயணமாகும். மனிதன் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும் ஒரு புதிய களத்தில் கால் பதிக்கின்றான். ஒவ்வொரு கட்டத்திலும், வாழ்வின் மர்மத்திரை

விலகுகிறது. வயது ஏற ஏற மர்மத்திரைகள் பல விலகி விடுகின்றன. எனினும் வாழ்க்கையின் இறுதியில்கூட எல்லா மர்மங்களும் விளங்குவதில்லை என்பது ஏற்றுக் கொள்ள வேண்டிய உண்மையாகும்.

## அலுப்பிலா ஆன்மீகம்?

வாழ்நாள் இறுதிக் கட்டம் வரை ஆண்டு அனுபவித்த பின்னர் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒரு வெறுமை தோன்றுகிறது. உலகம் தன்னைப் பொருட்படுத்தவில்லை என்ற உணர்வு வாட்டி வதைக்கிறது. இவ்வெறுமையை நிரப்பிக்கொள்ள, வாட்டத்தைப் போக்கிக் கொள்ள உதவுவது ஆன்மீகம் ஆகும் என்பது பலரது நம்பிக்கையாக இருக்கிறது. ஆன்மீகம் என்பது இறைவனை நாடும் முயற்சியா? வீட்டுலக இன்பத்தைக் காட்டும் விடி வெள்ளியா? பாவ புண்ணிய கணக்கினைத் தீர்க்கும் வழக்கு மன்றமா? மறுபிறவிக்குத் துணை நிற்கும் ஆதார ஒழுக்கமா? அளவில்லா ஆனந்தம் நல்கும் ஒரு வழி வகையா? கேள்விகள் பற்பல; விடைகளும் அவ்வாறே. பக்தர் ஒரு விளக்கம் தருவார்; தவத்தில் நிற்பவர் ஒரு விளக்கம் கூறுவார்; இல்லறம் வெறுத்தவர் வேறோர் விளக்கம் கூறுவார்; ஞானியர் என்போர் பலவாறு விளக்கிக் கூறுவர்; ஆயின் யாருடைய விளக்கமும் முழுமையானதன்று; நம்பகமானதுமன்று.

ஆயின் 'ஆன்மீகம்' குலோத்துங்கன் பார்வையில் வேறானது. மனிதன் வாழ்ந்து அலுத்துப்போன பின்னர்த் தேடுவதன்று. வாழும் போதே வாழ்க்கையில் அமைவது, என்று எளிமையாகவும் மிக அழகாகவும் கூறுகிறார். அன்றாட வாழ்வில் ஒவ்வொரு நொடியிலும் நம்மிடம் ஆன்மிகம் இருப்பதைக் காணலாம் என்கிறார்.

*கடமைகள், கடமை சார்ந்த*
*கருமங்கள், சுருங்கக் கூறின்*
*அறவழி வாழ்வு தேடும்*
*அனைத்தும் ஆன்மிகம்*

*(மா.யா.பாகம்-3. பாடல்கள்:1124,1125)*

என்று கூறுகிறார். இதைவிட வேறு எவ்வாறு அழகாக எளிமையாக மனிதனுக்கு மிகவும் நம்பிக்கை ஊட்டுகின்ற வகையிலே விளக்கம் தரமுடியும்? அறிவியற் புலம் கண்டு துறை போய நம் கவிஞர் பெருமகனால் மட்டுமே இத்தகையதொரு விளக்கம் தரமுடியும். ஆன்மீகத்தின் தன்மை, ஆன்மாவின் உண்மை இன்மை ஆய்தல், வீடுபேறு தேடுதல் ஆகியவற்றில் மனம் செலுத்துவோர் ஒரு பக்கம் இருக்கட்டும். இந்த உலகமும் உலக வாழ்வும் நாம் கண்ணால் காண்பவை. நம் கையில் உள்ளவை. இயற்கை ஏராளமாக அள்ளி அள்ளி வழங்கியிருக்கிறது. எனவே நாம்,

*பண்ணை போல் இவ்வையத்தைப்*
*பதம் செய்வோம், கவிஞர் பாடும்*
*விண்ணையும் விண்ணமைந்த*

*வீட்டையும் மிஞ்சி நிற்கும்*
*துறக்கத்தை இங்கமைப்போம்*
*(மா.யா.பாகம்-3. பாடல்கள்:1131,1132)*

வாருங்கள் என்று மனித குலம் அனைத்தையும் கூவி அழைக்கின்றார். வையகம் முழுமனதுடன் வரவேற்கத் தக்க அழைப்பு. மெய்யன்பர்களும் தயக்கமின்றி ஏற்கத் தக்க அழைப்பு. மானுடயாத்திரை ஞானம் தேடும் யாத்திரை. அனுபவம் சேரும் யாத்திரை. அளவிலா வித்தைகள் கற்றுக் கொடுக்கும் யாத்திரை. மானுடயாத்திரையின் எல்லா அம்சங்களையும் ஊடுருவி நிற்கும் நோக்கம் ஒன்று இருக்கிறது. மானுட யாத்திரையின் அனைத்துக் கட்டங்களிலும் வாழ்வாங்கு வாழ வழிகாண்பதே உன்னத நோக்கமாகும். ஒட்டு மொத்த மானுட யாத்திரைக்கு முடிவில்லை. தனிமனிதன் யாத்திரைக்கு முடிவு உண்டு. வாழ்வாங்கு வாழ வழிகாணும் வாய்ப்புகளைத் 'தீராத தேடலில்' விவாதித்துத் 'தொடரும் பயணம்' என்ற இறுதி அத்தியாயத்தில் இன்றைய தீர்வாக ஒன்றை நம் முன் வைக்கின்றார். நம் நெஞ்சில் பதிய வைக்கின்றார்.

*மனித நேயத்தை மிஞ்சும்*
*மதமிலை; ஒழுக்கம் என்னும்*
*புனிதத்தில் இடம் பெறாத*
*பொருளிலை; இயற்கை தந்த*
*வையம் ஓர் இன்ப வீடு*
*வாழ்வொரு வரம் என்கின்ற*
*மெய்ம்மையே எமது வேதம்*
*விண்ணகம் இங்குக் காண்போம்*
*(மா.யா.பாகம்-3. பாடல்கள்:1144,1145)*

என்கிறார் கவிஞர். குறைவிலா இன்பம் பெற விழைவது மானிட இயல்பு. மானுடம் என்பதும் மனிதம் என்பதும் ஒன்றே. 'சிந்தையும் தோளும் சேர்ந்த மனிதம்' ஓர் விந்தையாகும். சிந்தனை வளமும் செயல்திறனும் இணைந்து நிற்பதே மனிதம், மனிதன். சிந்தனை வளமும் செயல்திறனும் உடைய மனிதன் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை என்று பிரகடனம் செய்கிறார் கவிஞர்.

ஒரு குறிக்கோளை மனதில் தேர்ந்தெடுத்துக் கொண்டு அதை அடைய வேண்டி முழு ஈடுபாட்டுடன் மனதோடு ஒன்றி உழைப்பது இன்பத்தின் ஊற்றாகும். இதுதான் ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் வழங்கும் ஞானம். முன்னேற வேண்டும் என உறுதி பூண்ட நெஞ்சினர் என்றைக்கும் மறக்க நினைக்காத வரிகள். மனிதன் ஒரு வியத்தகு பிறவி. வான்மண்டலம் போன்று வரம்பு காண முடியாதவன். காலந்தோறும் கவிஞர்கள் மனிதனின் சிந்தனை வளத்தையும், திறனையும் பாடியிருக்கிறார்கள். ஆனால் மனிதப்பிறவியைப் பெருங்கவிஞர் குலோத்துங்கன் போன்று இதுவரை யாரும் இவ்வாறு போற்றிப் பாடியதில்லை.

# 5. அறம்பாடும் புறநடையாளன்

முனைவர் தமிழண்ணல், குலோத்துங்கன் அவர்கள் இருபது மற்றும் இருபத்தோராம் நூற்றாண்டின் 'கவிஞருள் சிறந்த கவிஞர்' என்கிறார். குலோத்துங்கன் இளமையில் 'பாரதிதாசன்' பரம்பரை என்னும் முத்திரையோடு அறிமுகமானார். அவரிடம் 'பாரதி பரம்பரை' எனக் குறிக்கத்தக்க இயல்புகளும் நிரம்பவே காணப்படுகின்றன. ஆயினும் அவர்கள் இன்றயை காலப்பகுதியை அவர் எதிரொலிப்பதால் அவர்களின் மறுபதிப்பாக மாறிவிடாமல் வளர்ச்சி நிலை காட்டுகிறார். நாட்டுக்கும் மொழிக்கும் மானுடத்திற்கும் இன்றியமையாத—தேவைப்படுகிற, தவிர்க்க இயலாத தமிழ்க் கவிஞர் என்று குறிப்பிடுகிறார் தமிழண்ணல். இவர் ஓர் அறிவியல் அறிஞர், பொறியியல் வல்லுநர், சிறந்த துணைவேந்தர், உலகளாவிய மதிப்பிற்குரியவர் என உணர்ந்துள்ளது போல ஒரு கவிஞர்—மானுடம் பாடும் மாபெரும் கவிஞர் எனும் மாண்பு தமிழ் உலகில் இன்னும் உரிய அளவுக்கு உணரப்படாதிருக்கிறது. எனினும் இவரது கவிதைகள் தமிழ் உலகில் படிப்படியாக அறிமுகமாகிக்கொண்டு வருகின்றன. 'பேர்ள்பக்' என்ற அமெரிக்க மருத்துவப் பேரறிஞர், சீனாவில் அத்துறையில் பல ஆண்டுகள் பணியாற்றிப் பேரும்புகழும் பெற்றவர். ஆனால், அவர் எழுதிய நாவல்களாலேதான் உலகப்புகழ் பெற்றார். அப்பேராசிரியை தன் வாழ்நாளில் துணைப்பணியாக மேற்கொண்ட இலக்கியப் பணிக்காகவே நினைவுகூரப் பெறுகிறார். அவர் ஓர் அரிய மருத்துவர் என்பதை உலகம் மறந்துவிட்டது. 'குலோத்துங்கன்' அவர்களின் இதுவரை வெளிவந்துள்ள நான்கு தொகுதிகளிலுள்ள (குலோத்துங்கன் கவிதைகள் மற்றும் மானுடயாத்திரை மூன்று தொகுதிகள்) பாடல்களைப் படிக்கும்போது காலப்போக்கில் இவர்தம் இலக்கியப் பணியின் சிறப்பே மேலோங்கித் தமிழுலகில் இவருக்கு ஒரு நிலையான இடத்தைத் தேடித்தரும் என்ற உறுதியான நம்பிக்கை ஏற்படுகிறது என்று கூறுகிறார் தமிழண்ணல். பலபொறுப்புகளில், ஆனால் இலக்கிய உலகோடு நேரடித் தொடர்பில்லாத நிலையில் இருந்தும் இவ்வளவு அரிய சிந்தனைகளைத் தமிழில் தெளிவாகப் படைக்க முடிகிறதே என வியக்கிறேன் என்கிறார்.

'மானுடம்' பாடும் இக்கவிஞர், தம் கவிதைத் தொகுதிகளில் மனிதநேயம் பற்றியும் மனிதன் மேன்மேலும் முன்னேற வேண்டும் என்பது பற்றியும் நன்கு பாடுகிறார். அதனைத் தன்மேல் ஏற்றித் தன்னம்பிக்கையுடன் பாடுதலால் படிக்கும் ஒவ்வொருவருக்கும் மன எழுச்சி உண்டாகிறது. நமக்கு வரும் துன்பம் எல்லாம் நம்மை வடிவப்படுத்தவே பயன்படுகின்றன. நம்மீது ஏற்படும் 'சிற்றுளிக்' காயங்கள் நம்மைச் 'சிற்பமாக்கவே' பயன்படுவன. பற்றும் துயரமாகிய நெருப்பில், நமது உயிர் பக்குவப் படுகிறது என்கிறார் குலோத்துங்கன்.

*என்னைச் செதுக்குகிறாள்-இயற்கை*
*இன்னும் உயர்த்துகிறாள்*
*பொன்னைச் சுரங்கத்திலே-எடுத்தவள்*
*புடம் இடுகின்றனள்*

அதாவது கூர்தல்அற விதிப்படி (Evolution) நாம் பக்குவப்படவே இத்துன்பமும் துயரமும் துயரம் தரும் அனுபவங்கள் அனைத்தும் பயன்படுகின்றன. 'சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம் சுடச்சுட நோற்கிற்பவர்க்கு' என்பார் திருவள்ளுவர். கவிஞர் குலோத்துங்கன் 'பற்றும் துயர் நெருப்பு நம்மைப் பக்குவம் ஆக்கும்' என்பதுடன் 'வெங்கனலில் குளித்தோம்-எமை ஒரு வெய்யில் சுடுமோடா? என வினவுகிறார். கனலில் குளிக்கவும் ஆயத்தமாக இருப்பவன் தடைகள் கண்டு தளர்ந்துவிட மாட்டான். தோல்வியில் துவண்டு விடமாட்டான். ஒவ்வொரு தடையும் அவனது உறுதியை வளர்க்கிறது. ஒவ்வொரு முயற்சியும் அவனது முயற்சிக்கு வலிமை சேர்க்கிறது.

**நினைவில் நிற்பது ஏன்?**

தமிழகத்தில் மிகப்பெரிய பரிசினைப் பெற்ற இக்காலக் காப்பியம் ஒன்றைப் படிக்க நேர்ந்தபொழுது அத்துணைப் பெரிய காப்பியப் பனுவலில் திரும்ப நினைவுகூரும்படியாக ஓரடிகூடக் காணப்படாமையை எண்ணி வருந்தினேன் என்கிறார் முனைவர் தமிழண்ணல். சிறந்த கவிதைக்கு இலக்கணம் படித்து முடித்தபிறகும் நம் நினைவில் ரீங்காரமிட்டுக் கொண்டிருக்கும் கருத்து, சொல் தொடர்கள் மூலம் திரும்பத் திரும்ப உணரப்படும் தன்மையாகும். குலோத்துங்கன் கவிதைகளில் சொற்கள், தொடர்கள், பாடலடிகள் எனப் பற்பலவற்றை நினைவில் நிறுத்தலாம். நினைவில் நிறுத்த வேண்டும் என்னும் ஆர்வத்தைத் தூண்ட வல்லன என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும் என்கிறார் தமிழண்ணல். குலோத்துங்கன் கவிதைகளில் 'நோக்கு' எனத் தொல்காப்பியர் குறிப்பிடும் கோட்பாடு முழுமையாக அமைந்துள்ளது. தொல்காப்பியர் 'ஒரு சிறுமாத்திரை முதலாகக் கவிதையில் இடம்பெறும் அனைத்தும் காரண காரியத்தோடு அமைந்து, மறித்து, மறித்து நோக்கிப்

பயன்கொள்ளுமாறு 'நோக்குப்பட அமைவதே செய்யுள்' என்கிறார். குலோத்துங்கன் கவிதைகள் அவ்வாறு அமைந்துள்ளமை கண்டு யான் மகிழ்ச்சியடைவதுடன், நீங்களும் இதுபோலத் தேடிப்பார்க்கத்தக்க கருவூலமே அவரது கவிதைகள் எனக் குறிப்பிட்டுக் காட்டவும் விழைகிறேன் என்கிறார் பேராசிரியர் தமிழண்ணல். நோக்கு அமைந்துள்ள சில கவிதை வரிகள்

*கருவி படைத்தவனைக் கருவியே மாய்ப்பதுவோ*
*வாயிற் கதவுகள் காப்பதிலை—எழும்*
*மானிடச் சீற்றம் தோற்பதில்லை*
*மாறாத பொருளேதும் வளர்வதில்லை*
*வையத்தின் விதியிதற்கு மாற்றமில்லை*
*ஏழ்மையின் மிஞ்சிய 'மாசு' மிலை — பசி*
*ஈர்ப்பதை மிஞ்சிய நோவுமிலை*

*சிந்தையும் தோளும் சேர்ந்தது மனிதம்*
*முன்னையர் அனைவரும் முனிவரல்லர்*
*முனிவரென நின்றோரும் கடவுளல்லர்*
*பின்னையவர் தம்முள்ளும் பெரியவருண்டு*
*பேதையரும் முன்னாளில் பிறந்த துண்டு*

பாரதியார், பாரதிதாசனுக்குப் பிறகும் மாறாதனவும், புதியனவுமான எத்தனையோ சிக்கல்கள், மாற்றங்கள், விளைவுகள் நல்லனவும், தீயனவுமாக உள்ளன. அவை பற்றியெல்லாம் சிந்தித்தன் பயன்பாடு, புதிய கவிதைகள் தோன்றினாலல்லவா 'வளர்ச்சி' எனப்படும். குலோத்துங்கனின் இக்கவிதைகள் பல பேச்சலங்காரர் வாய்வீரர்களுக்குக் கடுங்கசப்பாக இருக்கும். எம்போல்வார் அண்மைக்காலமாக அழுத்தம் பெற உணரும் மன அலைகள் பல இவை போன்றனவாதலால், இப்பாடல்கள் தமிழகமெங்கும் பறைசாற்றப்பட வேண்டும் என்று நெஞ்சம் துடிக்கிறது என்கிறார் தமிழண்ணல்.

கவிஞர்கள் என்றால் உயர்வு நவிற்சி அணி இல்லாமல் இருப்பதில்லை. அதிலும் மரபுக் கவிதை பாடுவோருக்கு வழங்கப்பெற்ற உரிமைச் சாசனம் உயர்வு நவிற்சி. அது தமிழ்க்கவிஞர்கட்கு இன்றியமையாத இரத்த ஓட்டம். குலோத்துங்கன் என்ற தமிழ்க் கவிஞர் இவ்வகையில் புதுமையானவர். உயர்வு நவிற்சி இல்லாமல் உள்ளதை உள்ளவாறே பாடுகிறார். இவ்வாறு செய்வதால் கற்பார் உணர்ச்சியைத் தூண்ட முடியாது. எனவேதான் உயர்வு நவிற்சி அணி தேவையெனத் திறனாய்வாளரும் நம்புகின்றனர். புதுமைபடைக்கும் குலோத்துங்கன் உள்ளதை அப்படியே கூறி அதே சமயத்தில் கற்போர் உணர்ச்சியையும் சிறந்த முறையில் தூண்டி விடுகிறார் என்கிறார் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள். இதன் இரகசியம் என்ன என்பதைச்

கற்றுக்கொள்ள வேண்டும். அன்றாடம் வழங்கும் சொற்களையே பயன்படுத்தி, உயர்வு நவிற்சி இல்லாமல் மரபுக் கவிதையே பாடி, ஒரு கவிஞன் முழு வெற்றி அடைகிறான் என்றால் இதனுள் இருக்கும் இரகசியம் என்ன? தலையாய கவிஞர்களிடம் மட்டுமே காணப்பெறக்கூடிய 'கவடு இல்லாத வாய்மை' தான் காரணம் என்பதைக் கற்றோர் அறிய முடியும். கவிஞர் குலோத்துங்கன் பயன்படுத்தும் சொற்கள் பேச்சு வழக்குச் சொற்கள், பேசும் பொருள் அன்றாடம் நாம் காணும் நிகழ்ச்சிகள், எனினும் இரண்டுக்கும் அப்பாற்பட்ட கபடிலா வாய்மையால் (Sincerity) நம்மை உலுக்கி விடுகிறார். மிக அமைதியான முறையில் சில கருத்துக்களைப் போகிற போக்கில் உதிர்த்துவிட்டுப் போகிறார். கவிதையைப் படித்து முடித்து, சில விநாடிகள் கழித்துத்தான் அதிர்ச்சி ஏற்படுகிறது என்கிறார் அ.ச.ஞானசம்பந்தன். கடலையும், மலையையும், விண்மீன்களையும் பார்த்து இக்கவிஞர்,

*கண் இமைக்கும் மீன் இனமே, ஓடம் போன்று*
*கார் முகிலில் தவழ்நிலவே, காலமெல்லாம்*
*பண் இசைக்கும் எம் கவிஞர் உம்மைப் போற்றிப்*
*பாடாத பனுவல் இலை, எனினும் நீவிர்*
*வாழ்ந்த கதை ஏதுமிலை, முயன்று வென்று*
*வளர்ந்த கதை ஏதுமிலை, புதுமை காணச்*
*சூழ்ந்த கதை எதுமிலை, உள்ளோம் நாளும்*
*தொடர்கின்றோம் என்பதல்லால் சொல்வதென்ன*

என்று கேட்கிறார். இயற்கை எனினும் வளராத ஒன்றைப் போற்றுவதில் முழுஉடன்பாடில்லாதவராகவே காணப்படுகிறார். 'மாறுதலே உயிர்ப்பு', மாறாத நிலைப்பு', 'வளர்ச்சியை இழந்த பிணநிலை' என்று உயிர்த்தத்துவத்தை இக்கவிஞர் உலகுக்கு எடுத்தோத விரும்புகிறார். இக்கவிஞரின் புலமை நயத்துக்கு அவர் பாடியவற்றுள் எத்தனையோ சான்றுகள் காட்டலாமெனினும் 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பது போல் ஒரு கவிதையைக் கூறி அவர் புலமையை நிறுவுவோம்.

*மலரினும் மெல்லிது காமம், சிலர் அதன்*
*செவ்வி தலைப்படு வார்* (குறள் 1289)

என்பது வள்ளுவம். இக்குறளின் மனவியல் கருத்தைப் புரிந்து கொண்டு இதுவரை உணரக் கூறினார் யாரும் இலர். பரிமேலழகரையும் ஆழம்பார்த்த குறள் இது. கவிஞர் குலோத்துங்கன் மற்றோர் கவிதையில் வள்ளுவனின் மேலே காட்டிய கவிதைக்குப் பொருள் விரிக்கின்றார். கைகள் தொடாது என்னும் பாடலின் இறுதியில் காணப்படும் வரிகள் குறளுக்குப் பொருள் விளக்கம் தருகின்றன.

*நெஞ்சினில் அரும்பி நினைவில் வளர்ந்து*
*நெருக்கம் மலருமடா – உறவின்*
*நிறைவுகள் கனியுமடா*
*கொஞ்சுதல், தழுவுதல், குலவுதல், உடல்கள்*
*கூடாது இயலுமடா - ஈருளம்*
*குவிவது கலவியடா!* (கு.க. பக்கம்.439)

மெள்ள அமைதியாக இருந்து அசைபோட்டுப் பார்த்தால் இப்பாடலின் கருத்தாழம் என்ன என்பதை உணரமுடியும்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் கவிஞர் குலோத்துங்கனின் பரிணாம வளர்ச்சியையும் பரிமாணத்தையும் கூர்ந்து கவனித்து வந்துள்ளார். அவர் கவிஞர்பால் அன்பும், பெருமதிப்பும் வைத்திருப்பவர். கவிஞரின் பல்வகைத் திறன் கண்டு அவரைப் பாராட்டுவது அதுவும் இலங்கைத் தமிழில் பாராட்டுவதை நாம் படித்து மகிழவேண்டியது அவசியமாகும். பாரதியின் இந்தியத் தேசியம் தமிழில் அழியா இடம்பெற்றது எனக்கொண்டால், பாரதிதாசன் தமிழ்நாட்டின் இந்தியத் தேசியப் போராட்ட முன்னிலையாளர்களால் அழுத்தமாகப் பேசப்பெறாத, மழுங்கடிப்பு முறையில் நோக்கப்பட்ட சமூக முரண்பாட்டையும் அந்தச் சமூக முரண்பாட்டில் இருந்து பெறவேண்டிய விடுதலையையும், தமிழ்த் தேசியத்திற்கு அச்சாணியாக்குகிறார். பெரியார் சிந்தனைப் பள்ளியின் கருத்து வெளிப்பாடாகப் பாரதிதாசன் அமைகின்றார். இதன் பின்னர்த் தமிழ்த் தேசியம் பாரதிதாசன் காட்டிய பாதையினூடாகவே பாயத் தொடங்குகிறது. தெளிவறிவு நிலையில் அனைத்திந்தியப் பாரம்பரியத்தை உள்வாங்கியவராகவும், உணர்வறிவு நிலையில் தமிழ்-தமிழரின் அவலங்களை இனங்கண்டு கொண்டவராகவும், வெளிக்கிளம்புகிற வா.செ.குழந்தைசாமி பாரதியின் தேசிய தரிசனத்துடன் பாரதிதாசன் பாட்டையிலே மேலே நடைபோடத் தொடங்குகிறார். இந்தியாவின் வரலாற்று ஓட்டம் குறிப்பாகத் தமிழ்நாட்டின் அரசியல் விகசிப்பு, பாரதி, பாரதிதாசன் போக்குகளைத் துருவப்படுத்தினவெனினும் உன்னிப்பாக நோக்கும்பொழுது இவை இந்திய எழுச்சி என்ற நாணயத்தின் இருபக்கங்க்ளே. இந்த இருபக்கங்களுக்குமுள்ள இணை நிலையிலேயே இருபதாம் நூற்றாண்டின் இந்திய வரலாற்றின் வெற்றிகளையும், அவலங்களையும் காணலாம். இந்த வாதவிவாதங்களினூடே இந்தக் கருத்துநிலை வேறுபாடுகளினூடே நவீனத் தமிழிலக்கியத்தின் ஒரு முக்கியப் பண்பு, சமூக, அரசியல், விமர்சிப்பு, நிலைபேறுடையதாகிறது. இப்பண்புதான் குழந்தைசாமியைக் 'குலோத்துங்கன்' ஆக்குகின்றது. குலோத்துங்கன் கவிதைகளின் இருப்புக்கான நியாயப்பாட்டினை வழங்குகின்றது. ஒரு பிரபல

பொறியியலாளராக, உலக நிலைப்பட்ட விஞ்ஞானியாக, இந்திய நிலைப்பட்ட உயர்கல்வி ஒழுங்கமைப்பாளராக விளங்கும் ஒருவர் தன்னுடைய தமிழத்தன்மையையும், தமிழ் நிலைப்பட்ட தன் கொள்கைகளையும் எடுத்துக் கூறுவதற்குக் கவிதை, 'ஆயுதமாகிறது'. இது நவீனத் தமிழ் இலக்கியம் வழங்கும் சுதந்திரங்களில் ஒன்றாகும். குலோத்துங்கன் குழந்தைசாமியின் உயிர்ப்பாகின்றார்.

இந்தச் சமூக, அரசியல் கருத்துநிலை அவரது கவிதைக்கு ஓர் எடுத்தோதும் பண்பை வழங்குகின்றது. அதாவது தன் அறிவுமட்டத்தில் தெளிவாகத் தெரியும் இலக்குகள், பிரச்சினைக்கான காரணங்கள் மற்றைய தமிழருக்கும் புலனாக வேண்டும் என்ற உள்ளக்கிடக்கையினடியாகத் தோன்றும் கருத்துகள், இவரது கவிதைகளுக்கான பிரதானப் பொருள்களாகின்றன. தாம் கூறுவன, தமிழர்க்கு வேண்டுவன என்னும் அறிவுத் துணிவு காரணமாக அனைத்துத் தமிழர்களும் தம் கவிதையைக் கேட்க வேண்டுமென விரும்புகின்றார். அவர்களிடத்துத் தம் கவிதை எட்ட வேண்டுமென்று விரும்புகின்றார். இவர் போன்றவர்கட்குக் கவிதை தாம் எடுத்துக்கூறத் தீர்மானித்துள்ளவற்றுக்கான தொடர்பு வாய்க்கால் ஆகிறது. இத்தகைய செய்யுளாக்க மரபு, நவீனக் காலத்துக்கு முன்னர்த் தமிழ் இலக்கிய மரபில் வலுவுடன் தொழிற்பட்டதாகத் தெரியவில்லை. இத்தேவை ஒரு சமூக அரசியல் தேவையாகும். ஏறத்தாழக் கி.பி. 600-இல் இருந்து இவ்வாறு எடுத்துக்கூறும் மரபு புலவர்களுக்கு உண்டு என்று கருதப்பட்டதாகவும் தெரியவில்லை. சங்க காலம், திருவள்ளுவர் காலத்துடன் விடுபட்டுப்போன ஓர் அறம்சார் அதிகாரத்தோடு (Moral Authority) குழந்தைசாமி பேசுகிறார்; பாடுகிறார். இந்தப் போதிப்பு முறைமைக்குத் தமிழ் இலக்கியத்தின் இந்திய இலக்கியத்தின் இன்னொரு பாரம்பரியம் துணை நிற்கிறது. அதுதான் நமது அற இலக்கியப் பாரம்பரியமாகும். தமிழிலும் அனைத்திந்திய மரபிலும் அறத்தினை 'எடுத்துக்கூறல்' என்பது ஒரு கவிதை வழக்கமாகவே இருந்து வந்துள்ளது.

பதினெண்கீழ்க்கணக்கில் வரும் அறப்போதனை சார்ந்த இலக்கியங்களை நோக்குவோம். அவை சிறுபஞ்சமூலம், ஏலாதி, திரிகடுகம், இன்னா நாற்பது, இனியவை நாற்பது, ஆசாரக்கோவை, நாலடியார், திறக்குறள் என வருபவை. ஓர் அறநியமம் மனங்கொளப்படல் வேண்டும் என்று எடுத்துக் கூறப்படுவதே இந்நூல்களின் இலக்கியப் பொருளாக அமைகின்றது. இலக்கியம், இத்தன்மைத்தாக அமைவது அதன் இயல்புகளில் ஒன்று என்ற எடுகோளின் (Premise) அடிப்படையிலேயே இவை இலக்கியங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. தொல்காப்பிய, செய்யுளியலில் வரும் இலக்கிய வகைகளில் 'நூல்'

என்பதனை நாம் 'ஒரு பொருள் பற்றிய புலமை விவரிப்பு (Treatise) எனக்கொண்டால் அறப்போதனை இலக்கியங்களும் 'நூல்களே'. அறப்போதனைகளை இலக்கியமாக எடுத்துக்கூறும் மரபு சங்க மரபின் புறத்திணைக்குள் கரந்துகிடப்பது. பதினான்காம் நூற்றாண்டின் பின்வரும் இலக்கிய வகைகள் பலவற்றில் இந்த அறநியமங்களின் பதிகை நிறையவே நடைபெற்று வந்துள்ளது. சதக இலக்கிய வகை இவ்விடயத்தில் மிக முக்கியமானதாகும். தண்டலையார் சதகம், அறப்பளீசுவர சதகம் என்ற நூல்களில் இவ்வுண்மை நிலைநிறுத்தப் பட்டுள்ளது. அறநியமங்கள் எனக்கருதப்படுவனவற்றைப் பாடல்களில் எடுத்துக்கூறும் மரபு தமிழில் நீண்டகாலமாக இருந்து வந்துள்ளது.

நவீனத் தமிழ் இலக்கியத்தின் அரசியல், சமூக விமர்சனத்திலிறங்கும் கவிஞர்கள், தமது கவிதைகளில் இந்த அற எடுத்துரைப்பினைப் போற்றுவது எந்த வகையிலும் இலக்கியப் பாரம்பரியத்துக்கு ஊறு செய்வதாகக் கருதப்படவில்லை. அந்தக் கவித்துவ நிலைப்பாடே குலோத்துங்கனின் பிரதான கவிதைகளில் பாலில் நெய்யாக ஊடுபோய்கிடக்கின்றது. சமூக அரசியல் விமர்சிப்பையும் வாழ்க்கையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நியமங்களையும் எடுத்துக்கூறுவதனையும் கவிதையாகத் தரும்பொழுது கவித்துவம் பற்றிய சில கருத்துக்களை மீளநோக்க வேண்டுவது அவசியமாகிறது. கவிதை (Poetry) என்பது 'உளநிலைப்பட்ட ஒன்று (A Matter of mind and heart). அது கற்பனைக்கு இடம்தருவதாக அமைதல் வேண்டும். அந்தக் கற்பனைகளும் பிரதானமாக உணர்வுகள் (Feelings), உணர்ச்சிகள் (Emotions) சம்பந்தப்பட்டவை. கவிதை என்பது இவற்றோடு பின்னிப்பிணைந்து கிடப்பது. இந்த எடுகோள் காரணமாக மனித உணர்வுகள் நிலைப்பட்டனவே கவிதைக்குப் பொருளாக அமையும் என்ற ஒரு கருத்து உண்டு.

இந்த நிலைப்பாட்டுக்கு ஒரு மேனாட்டுப் பின்புலம் உண்டு. புராதன கிரேக்கக் கவிதை முதல், மறுமலர்ச்சிக்குப் பின்னர் (16-ஆம் நூற்றாண்டு) வரும் கவிதைப் பாரம்பரியம் வியந்தோதப்பட்ட இருபதாம் நூற்றாண்டின் மூன்றாம் நான்காம் பத்துகள் (Decades)வரை, இலக்கியத்தைப் பொறுத்தவரை லீவிஸ் (Leavis), ரிச்சாட்ஸ் (Richards) ஆகியோர் கவிதை பற்றிய இந்தக் கொள்நெறிகளை (Principles) 1930/40-களில் விரித்துரைத்தனர். அந்த வழியாகவே தமிழில் இக்கருத்துக்கள் முதனிலைப்படுத்தப்பட்டன. அதனால் இந்த 'உணர்வுப் புனைவுக்' கொள்கை முதனிலைப்பட்டது. கைத்தொழிற் புரட்சியின் பின்னர் ஏற்பட்ட சமூக நகர்வுகளின் பின்னர்க் காவிய மரபு (Epic Tradition) ஒதுங்கிப் போய், சூழவுள்ளன பற்றிய கவிஞரின் தனிநிலைப் பதிற்குறிகளே (Responses) கவித்துவத்தின் உயர்நிலை என்பது வலியுறுத்தப்பட்டது

(Poetry Largely constitutes the individual response of poets to their environments). கவிதை பற்றிய இந்தக் கொள்கை இந்திய மரபுக்குள் உள்வாங்கப்படும் பொழுது சில பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. முதலாவது இந்திய மரபில் கவிதை முதல் தொழில்நுட்பத் தரவுகள் வரையான பல விடயங்கள் யாப்பு நிலைப்பட்ட பாடல்களில் (Verses) சொல்லப்பட்டுள்ளன. சமசுகிருதத்திலும், இப்பண்பு காணப்படுகிறதென்பர். தமிழில் இது வெட்ட வெளிச்சமான விடயமாகும். சோதிடம், மருத்துவம், கப்பல் கட்டுதல், கூத்து, நடனம் ஆகியன பற்றிய தரவுகள் பாட்டு வடிவிலேயே உள்ளன. மெய்யியலும் பாடல்களாகவே எழுதப்பட்டுள்ளன. (சைவ சித்தாந்த சாத்திரங்கள்). இவ்விடயங்கள் பற்றிப் பாட்டு வடிவத்தில் எழுதப்படுவதற்கான முதற்காரணம் அக்காலக் கல்வி முறைமை, கேள்வியையே பிரதானப்படுத்தியதால், கேட்டல், வாழ்க்கையளிப்புக்கு யாப்புக் கட்டுக்கோப்புள்ள பாடல்களே பொருத்தமானவையாகும். வேதங்கள் கையளிக்கப்படுவதற்கே இந்த ஓதல் (Recitative) முறைமை காரணமாக இருந்துள்ளது. மாணவர் 'பாடல்' முறைமை வழியாகத் தரவுகளை ஈட்டிக் கொள்ளும் இயல்பு காரணமாக 'ஓதல்' என்பது கல்வியைக் குறித்தது. தொல்காப்பியர் கல்விக்கான பிரிவை ஓதற்பிரிவு என்றார். இந்த முறைமையில் பாடல் ஓதும் (Recitation) முறை முக்கியமாயிற்று. இந்த ஓதல் யாப்பு வரையறையுடைய சந்த நிலைப்பட்டதாகும். அடுத்தது இந்திய இலக்கிய மரபில், சமசுகிருதத்திலும் தமிழிலும் இந்தப் பாட்டு மரபிலேயே அறப்போதனை நூல்கள் இயற்றப்பட்டன. அறப்போதனைகள் கற்கைத் தேவைகளுக்காகப் பாட்டு வழியாகக் கூறப்பட்டிருக்கலாம். பௌத்த, சமணப் பள்ளிகளில் அத்தகைய ஒரு கற்பித்தல் முறை இருந்தும் இருக்கலாம். ஆனால் இதிலுள்ள ஒரு முக்கியமான அம்சம் யாதெனில், இந்த அறப்போதனைகள் வரன்முறையான இலக்கியங்களாகத் தமிழில் போற்றப்பட்டு வந்துள்ளன. நாலடியார், திருக்குறள், ஆகியன தோன்றுவதற்கு முன்னரே 'அற' இலக்கியங்களைப் பாடல்களாக எடுத்துக்கூறும் மரபு இருந்தது என்பதற்குப் புறநானூற்றில் வரும்,

அறம் பாடிற்றே ஆயிழை கணவ

எனும் வரி மறுதலிக்க முடியாத சான்றாகும். தமிழில் வரும் அறப்போதனை நூல்களை, பாடல்களை 'இலக்கியங்கள் அல்ல' என்பது சிரமங்கள் பலவற்றை ஏற்படுத்தும் ஒரு நிலைப்பாடாகிவிடும். திருக்குறள் அறநியமங்கள் ஒழுகலாற்றுக்கு வேண்டிய நியமங்கள் ஆகியனவற்றைக் கூறுவதுதான். ஆனால் அது கூறும் முறைமையில் அதன் இலக்கியக் கவர்ச்சி உள்ளது. இந்தக் கவர்ச்சிக்குள் இரண்டு விடயங்கள் தொக்கி நிற்கின்றன.

1. சொற்செம்மை (சொற்களின் தெரிவு மற்றும் வைப்பு ஒழுங்கு)
2. அணிகள் (இந்த அணிகளின் தொடர்பு முக்கியத்துவம் நன்கு புலனாகும் வகையில் திருக்குறளுக்கான உரை விளக்கங்கள் அமைந்துள்ளன)

இதனால் திறக்குறள் நமது படைப்பிலக்கியப் பாரம்பரியத்தில் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. அதனை வெறுமனே ஒரு போதனை நூல் என்று கூறிவிடமுடியாது. கவிதையிற் சொற்செம்மை என்பது இரண்டு அம்சங்களை உள்ளடக்கி நிற்கும்.

1. சொல்லின் பொருத்தப்பாடு
2. ஓசைநயம்

முதலாவது ஒரு முக்கியமான அம்சமாகும். அர்த்த ரீதியான அதன் பொருத்தப்பாடு, அச்சொல்லின் 'லாவக'த்தன்மை. அதாவது அச்சொல் வழி ஏற்படும் சிந்தனை/உணர்வு எகிறல்கள் ஆகியன ஓசை நயம் மூலமே வருகின்றன. எனவே ஓசை நயம் (ஒலிப்புச் செம்மை) இரண்டாவது அம்சமாகும். மேலே கூறிய சிந்தனை/ உணர்வு எகிறல்கள் இந்த ஓசை நயத்துடன் தொடர்புடையன. இவையாவற்றுக்கும் மேலாகச் சொல், பாட்டின் ஓசையோடு இயைந்து பாட்டின் இலயத்தோடு சொல் இயைந்து நிற்கும் தன்மை பாடலின் சிறப்புக்கு மிக முக்கியமானதாகும். அந்தச் சொல்லின் உச்சரிப்போசையும், பாடலின் பொருளும் இணைந்து நிற்கும் இயைபு கவித்துவ ஆற்றலுக்கான உரைகல்லாகும்.

*கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழாஅ ரெனின்* (குறள் 2)

நற்றாளில் வரும் ஆகார ஒலியும், தொழாரில் வரும் ஆ ஒலி மிகையும் (உயிரளபெடையும்) இணைகின்ற பொழுது கிளம்பும் ஓசை, தொழுகையின் முறை வழியை (Process) மனத்தில் நிறுத்துகின்றது. இந்தக் குறளில் சொல்லோசைக்கு அப்பாலான 'அணி' எதுவுமே இல்லை. பாடற்பொருளும் 'உணர்ச்சி சார்ந்தது' (Emotions) அன்று. உண்மையில் இது தெய்வ நம்பிக்கையாளர் நிலையில் ஒரு 'நேர்வு கிளத்தலே' (Statement of fact). புனைவியல் வாதக் கவித்துவத்துக்கு இதில் இடமில்லை. ஆனால் இக்குறள் அமைந்துள்ள முறையில் ஒரு கவித்துவ வசீகரம் உள்ளதென்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

இந்தக் கவிமரபைக் குலோத்துங்கன் தனக்கென உள்வாங்கியுள்ளார். 'அறத்திற்கான நிலைப்பாட்டுடன் பாடல் இணைந்து கொள்கிறது. குலோத்துங்கன் கவிதையில் விடயப் பொருளாகக் காணப்படும் உள்ளடக்கம் பற்றியும், அது எடுத்துக் கூறப்படும் முறைமைக்கான இலக்கிய வரலாற்று ஊற்றுக்களைப் பற்றியும் பார்த்த

நாம் குலோத்துங்கன் கவிதையின் இயல்புகளாக அமையும் அம்சங்கள் பற்றிச் சற்று உன்னிப்புடன் நோக்குவோம். குலோத்துங்கனுடைய கவிதைகளுக்கான கணிப்புக் களம் தமிழனின் உள்ளத்துணர்வுகள், தன்னைப் பற்றியும் தன் இனத்தைப் பற்றியும் கொண்டிருந்த எண்ணங்கள் அந்தராத்மாவின் உலக நிலைத்த தரிசனங்கள் இவற்றை எடுத்துக் கூறுவதற்குக் 'குலோத்துங்கன்' நாவாகிறார். இந்த நாவினை உந்தும், நிர்ப்பந்திக்கும் ஆழ்மனம் ஆகிறார். குலோத்துங்கனின் இந்தச் சிரத்தை விடயங்கள் யாவை? குலோத்துங்கன் எதனைக் கண்டு கொதிக்கிறார்? அவரின் உணர்வுகளில் உலக விடயங்கள் எப்படி படுகின்றன? இவரது கவிதைப் பொருள் பற்றிய தேடல் இந்த உந்துதல்களை இனங்காணும் முயற்சியாகவே இருத்தல் வேண்டும். இம்முறையில் நோக்கும் போது குலோத்துங்கன் கவிதைகளில் 'முதற்பொருளாக' அமைவது தமிழ்ச் சமூகத்தின் சமனற்ற தன்மை பற்றிய ஆதங்கமே. தமிழ்நாட்டில் அவரைச் சூழ நடக்கின்ற சமூக அரசியல் மட்டங்களில் கோலோச்சுகின்ற தமிழனை மனிதனாக வைத்திருப்பதற்கு எதிராகத் தொழிற்படுகிற சமூக அரசியல் குறைபாடுகளை அவற்றினுள் இரண்டை முக்கியப்படுத்திக் கூறலாம்.

1. சாதிப் பிளவுகள்
2. ஏழ்மை

இவை இரண்டும் வன்மைமிக்க கவித்துவம் மிக்க கவிதைகள் தோன்றுவதற்கான தளமாக அமைகின்றன.

*மனிதத் தொழுவம்: மானிடச் சாதியின்*
*புனிதம் முழுமையும் புதைத்த மண்ணில்*
*எடுத்த சின்னம் இருளும் சகதியும்*
*கொடுத்த சாபக் குவியல்........*
*குடிசைக் குவியல்*
*பச்சை மரக்கிளைக் கூட்டினில் - சிறு*
*பார்ப்பொரு தூக்கணம் குஞ்சுடா - மலைத்*
*துச்சிலில் பல்லுயிர் கண் வளரும் - பெரும்*
*தூற்றில் விலங்கினம் தூங்குதடா - வெயில்*
*உச்சி வெடித்திடும் வேளையிலே - குளிர்*
*ஊனை வருத்திடும் நேரத்திலே - சிறு*
*குச்சுக்கு மானிடம் வாடுவதா - அட*
*கோடி கலைகள் பிதற்றுகின்றாய்*

*உடம்பொடும் உயிரொடும் ஒன்றிய பிணி என*
*இடம்பெறும் நெஞ்செலாம் இழிக்கும் சாதியின்*
*கீழ்மையில் தமிழினம் கெடுவதும் உளுத்துத்*
*தாழ்வதும் பார்த்துத் தாங்குவ தாற்றிலம்*

*நெருப்பில் மெழுகெனும் நெஞ்சிலாடும் நிறைந்த*
*பொறுப்பின் சுமையொடும் புகலுவம் இஃது*
*சத்தியம்; வேரொடும் தளிரொடும் முளைக்கும்*
*வித்தொடும் சாதியை வீழ்த்துவதின்றேல்*
*சாதித் தழல் தன்னில் தமிழினம் வெந்தது*
*ஆதிக் குடியினர் அமரரின் றாயினர்*
*(கு.க. பக்கங்கள்:324,325)*

சாதி வேறுபாட்டுக்குக் காரணமான இழிவுகளைப் போக்குவதற்கு, இவற்றிலிருந்து விடுபட ஒரு மானுடம் இவரது இலட்சியமாகின்றது. குலோத்துங்கன் கவிதைகள் பற்றி நடந்த ஆய்வரங்கொன்றில் கருத்துரை வழங்கிய இலக்கிய அறிஞர்கள் ஏறத்தாழ ஒருமித்த குரலில், இவரது பிரதான கவிதை உந்துதலுக்கான அடிப்படைச் சமர்ப்பண வரிப்பாகக் (Commitment) கொள்வது மானுடமே என்று எடுத்துக் கூறியுள்ளனர். (பார்க்க: A Hymn to Humanity, Poems of Kulothungan – Critical essays,Ed. Sirpi Balasubramaniam- pon Navukkarasan Trust 1999- Chennai) இந்த மானிடக் கூவலைக் கட்டவிழ்ப்புச் செய்யும் பொழுது (Deconstruct) இதற்கான தேவை குலோத்துங்கன் பார்வையில் குலோத்துங்கனைச் சூழவுற்ற மக்கள் மானுடத்தை இழந்தவர்களாகவே உள்ளனர் என்பது தெரியவருகின்றது. இந்தப் பொறியியற் பின்புலம், இந்தக் குறைபாட்டைத் தீர்ப்பதற்கான, இந்தக் குறைபாடு இடம்பெறவே முடியாத ஒரு வடிவமைப்பை (Design) முழுமையான மானிடத்தினுள் தேடுகிறது. அவரின் இளமைக்காலப் பயில்வுக்களமாக அமைந்த சமயச் சார்பற்ற, பெரியாரின் சுயமரியாதை இயக்கத்தின் தாக்கமும் அந்த மானுடத்துக்கே அவரை இட்டுச் செல்கின்றது. அவரது மானுடம் இந்திய (திராவிட) மரபினுள் வேர்விட்டு நிற்கின்றதென்பது பெண்மை, பெண்ணியம் பற்றிய கருத்துக்களில் நன்கு தெரிகின்றது. பெண் விடுதலையின் அவசியத்தை உணர்கின்ற அவர் அதற்கான மாதிரியமாக (Model) மேலை நாட்டுப் பெண் விடுதலைச் சின்ன நடைமுறைகளை மேற்கொள்வதைக் கண்டிக்கிறார். அவரது மானுடம் பற்றிய நோக்கின் படிக்கற்கள் யாவை என்பது 'எம்பணி மானிடர் ஏற்றம்' எனும் கவிதை மூலமாக நன்கு புலப்படுகின்றது.

*தத்துவங்கள், சமயங்கள் அறிவு வாழ்வைச்*
*சார்ந்தவை என்றறிந்த வெலாம் சலித்தெடுத்தேன்*
*முத்தமிழின் தமிழினத்தின் மானிடத்தின்*
*முன்னேற்றம் எனை ஆளும் முழுமை கண்டேன்*
*(கு.க.பக்கம்:128)*

மதச்சார்பற்ற புலமை வளர்த்தெடுப்புக் காரணமாக வாழும் உலகத்திலேயே இலட்சியங்களை எய்திடல் வேண்டும். அந்த மாற்றங்களை நிலை நிறுத்த வேண்டும் என்ற அவா அவரிடத்துக்

காணப்படுகின்றது. (பார்க்க: வையம் தரும் இன்பம்) வையத்தைத் துன்பங்களைந்த பூமியாக மாற்றுவதென்பது ஒரு மெய்யியல் இலட்சியமாக இருந்து வந்துள்ளது. உண்மையில் அது ஓர் அரசியல் இலக்கே. சமூகங்கள் மனித ஒப்பந்தங்களினடியாகவே (Social Contract) வருகின்றன என்று தொடங்குகின்ற சிந்தனை மரபுகள் மார்க்சியப் புரட்சிக் கோட்பாடாக மாறுகின்றன. 'மெய்யியலாளர்கள் (Philosophers) உலகைப் பற்றி நன்கு விவரித்துள்ளனர். விடயம் என்னவென்றால் அதை (உலகை) மாற்றியமைப்பதே! என்று கூறி ஓர் அரசியல் கொள்கையை (Political Theory) மார்க்ஸ் முன் வைக்கிறார். தான் வாழும் சூழலில் அரசியல் வீழ்ந்து போயிருந்த அதள பாதாளங்களைச் சாரும் குலோத்துங்கன் அதை மாற்றுவதற்கு அந்த மாற்றத்தின் மீது அபரிதமான நம்பிக்கை வைக்கும் 'பித்துநிலை' வேண்டும்' என்கிறார். தன்னை அந்த 'மாற்றுகைப் பித்தன்' என்றே சொல்கிறார்.

*பித்தன் என்றெனைப் பேசுவார்க் குரைப்பேன்*
*பெரியன பெற ஒரு பித்தனும் வேண்டும்*
*தத்துவம் சொல்வேன் தனிச்சிலர் சாதனை*
*தவழும் மானிடம் தாவிட விசைதரும்*

*(கு.க.பக்கம்: 83)*

உண்மையின் அதற்கு ஓர் உன்மத்தம் வேண்டும். அது சிந்தனை நேர்மையினடியாக வருவது. அரசியல் தனது சமூக ஒருமைப்பாட்டினையும் சமூக வீரியத்தையும் இழந்து நிற்கும் நிலையில் வரவேண்டிய மாற்றத்தைத் தனிமனித நிலைப்படுத்திப் பார்க்கிறார். குழந்தைசாமி—குலோத்துங்கன் ஊடாட்டம் மிகுந்த இலக்கியச் சுவாரசியத்துடன் கவிதைகளில் வெளிப்படுகின்றது. தமிழைப் பற்றிய குலோத்துங்கன் கருத்துகள் மிக மிக முக்கியமானவை. அவரது தனித்துவத்தைக் காட்டுவன. அவர் வளர்ந்த சூழலில் தமிழ் உணர்வு முக்கியப் படுத்தப்பட்டிருந்தது என்பது மொழிநிலையிலும் இனநிலையிலும் நாம் காணும் உண்மை. பலர் தமிழை அதன் பழமைக்காகப் பண்டைய சாதனைகளுக்காகப் புகழ்ந்து பாடும் ஒரு நிலை திராவிடக் கருத்து நிலையின் அரசியல் வளர்ச்சியின் போது ஏற்பட்டது. வடமொழி மீதுள்ள காழ்ப்பு, தமிழை மிதமிஞ்சிப் போற்றும் ஒரு நிலை ஏற்படுகிறது. ஆனால் குலோத்துங்கன் காணவிரும்பும் தமிழ்மேன்மையில் அதன் கடந்தகால வரலாற்றுச் சாதனையிலும் பார்க்க எதிர்காலச் சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய தேவையும் அதற்கான புத்தாக்கமுமே முக்கியப்படுத்துகின்றன. திருக்குறளை மரணம் அறியா மாண்புமிகு இலக்கியம் எனப் போற்றிய வா.செ. குழந்தசாமியின் 'தமிழ் ஆன்மா'வான குலோத்துங்கன்,

*திருக்குறளும் சிலம்பொலியும் கம்பன் செய்த*
*சித்திரமும் தேவையெலாம் தீர்ப்பதுண்டோ*
*கருத்துலகப் பூம்பொழிலின் விரிவில் கோடி*
*கலைமலர்தல் காணீரோ அவையனைத்தும்*
*திருத்தமிழில் கண்டீரோ? மொழிவளர்க்க*
*மருத்துவரின் பொறிவலரின் அறிவியல் நூல்*
*வல்லுநரின் துணைதேட வழி செய்தீரோ?*

என்ற கேள்வியை எழுப்புகிறார். தமிழின் கவித்துவச் சிந்தனை உச்சிகள் தமிழின் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்யா என்பது துணிச்சல் மிகுந்த கூற்று. குலோத்துங்கன் குழந்தைசாமியின் பிரசாரகர் ஆகிறார். நவீனகாலத் தமிழ்க் கவிதையில் தமிழ்நாட்டில் இது ஓர் அசாதாரணக் குரல்; அசாதாரணக் குரல் என்பதிலும் புறநடையான குரல் எனலாம். இந்தப் புறநடைத் தன்மைதான் இவரது கவித்துவத்தின் ஆணிவேராக அமையும் ஒரு பண்பைப் புலமைத்துவக் கவிதைப் பண்பை (Intellectual Poetry) எடுத்துக் காட்டுகிறது.

புத்திநிலை கலந்த புலமைத்துவம் எதையும் காய்தல் உவத்தலற்றுப் பார்க்கும் தன்மையது. அறிவின் தர்க்கங்களுக்கு அது கட்டுப்பட்டது. இந்தப் போக்குதான் உலகில் அறிவியல் வளர உதவியது. சமகாலத் தேவைகள் பற்றிய புத்தி ஜீவ ஊடாட்டம் (Intellectual Interaction), புதிய கண்டுபிடிப்புகளுக்குப் புதிய நோக்குகளுக்கு இடமளிக்கிறது. ஆங்கில மரபில் ஒருவன் புத்தி ஜீவியாய் இருப்பதென்பது வெறும் படிப்பாளியாக இருப்பதற்கு மேலானது. அதனாலேதான் நவீனச் சமூகத் தொழிற்பாடுகளில் இந்தப் புத்தி ஜீவிகள் முக்கியமாகிறார்கள். மேலும் அவர்கள் எல்லா விடயங்களையும் அந்தப் புத்தி நிலையிலே வைத்துப் பார்ப்பர். ‘புத்தி ஜீவிகள்’ என்ற தொடரை ‘புலமையாளர்’ என்று மாற்றீடு செய்து கொண்டால், ‘புலமைத்துவம்’ என்பது Intellectualism என்பதற்கான தமிழ் வடிவமாகிறது. குலோத்துங்கன் கவிதைகள் அடிப்படையில் புலமைத்துவப் படைப்புகளே. அதாவது உலகை அவர் பார்க்கின்ற முறைமை தன் பயில்வுப் புலம் சார்ந்த ஒரு கற்றிவாளனுக்கு இயல்பாக வரும் நோக்கில் பார்க்கின்றார். புலமைத்துவக் கவிதைகள் எண்வகை இரசங்களின் நிலைப்பட்டதல்லதான். ஆனால் அந்தப் புலமைத்துவத்துக்கு ஓர் உணர்வு முனைப்பு, உத்வேகம் (Fervour) உண்டு. குலோத்துங்கன் கவிதைகளில் குறிப்பாக, சமூகம், தமிழ் சம்பந்தப்பட்ட விடயங்களில் அந்த உணர்வு வேகமே (உணர்ச்சி அல்ல) தொழிற்பட்டிருக்கின்றமையைப் பார்த்தோம்.

இரண்டாவது, குலோத்துங்கன் என்ற அறிஞனுக்கும் அந்த அறிஞனுள் உறையும் மனிதனுக்குமிடையே ஒரு மெல்லிய மிக மெல்லிய

பிரிகோடு (Dividing Line) உண்டு. எந்த ஒரு மனிதனும், அந்த மானுட உணர்ச்சிகளுக்குக் கட்டுப்பட்டவன் ஆகின்றான். அந்த உணர்ச்சிகளை 'இருவரை இழந்த வாழ்வு. எத்தனை இழந்ததம்மா' என்ற தலைப்பின்கீழ் வரும் கவிதைகளிலே காணலாம். அந்த வெளிப்பாடுகள் உணர்ச்சிச் செம்மை நிலையைக் காட்டுவனவாக இருக்குமே தவிர வெறும் உணர்ச்சி உந்தல் (Being Sentimental) வெளிப்பாடாக அமையா. இதனை இன்னொரு வகையாக எடுத்துக் கூறலாம். புலமையாளனும் உணர்ச்சி நிலைப்படுபவனே. ஆனால் அந்த நிலைப்பாடு தன் ஆளுமையை உடைப்பதாக அமையவிடான். (மகாபாரதத்தில் பீமனுக்கு மாத்திரமல்ல, தருமருக்கும் சகாதேவனுக்கும் கூடக் கோபம் வரும். பீமன் தன் கோபத்தைக் காட்டுவது போலத் தருமர் காட்டமாட்டார்). குலோத்துங்கன் சோகம், அந்தச் சோகம் ஏற்படுத்தும் துவற்சி கதறல்களில் இல்லை. மற்றவர்கள் கதறி அழுவதால், வெளிப்படுவதைக் குலோத்துங்கன் கம்பீரத்தை இழக்காத தோற்றத்தினூடே வரும் இலக்கிய, கண்ணீர் திவலைகளால் காட்டி விடுகிறார். ஈழத் தமிழர் இன்னற்பாடுகள் பற்றிய கவிதைகள் இந்த வரையறைகள் யாவற்றையும் கடந்து, தமிழ் ஆத்மாவின் ஓலமாக மானுடத்தின் கையறு நிலைக் கதறல்களாக வெளிவந்துள்ளன. குழந்தைசாமியாகிய தமிழனின் உணர்வுக்குக் குலோத்துங்கன் வடிகாலாகிறார்.

*வேட்டையே தொழிலாய் விலங்கினம் உணவாய்*
*காட்டையே நம்பிக் கழித்த நாளினும்*
*நன்றுதீது எனும் ஞாய உணர்வுகள்*
*இன்று இலங்கையில் இழிந்தது போலத்*
*தாழ்ந்ததற்கிதுவரை சரித்திரமில்லை*

*(கு.க.பக்கம்: 615)*

'கடலில் ஒரு கல்லறை' ஈழத்து மக்களின் சோகங்களுக்கான நெஞ்சுருக்கும் சொல்லோவியமாகிறது.

*தோணி கவிழ்ந்த கணம், துணையின்றி நின்ற கணம்*
*பேணியவை அத்தனையும் பிரியும் பெரும் சோகம்*
*மின்னலென அங்கமெலாம் விரவுகின்ற நேரத்தில்*
*என்ன நினைத்தாரோ? எதற்காக ஏங்கினாரோ?*
*சடங்கொன் றறியாது, தமர்சூழ்ந் தழுவாது*
*அடங்கிய இவ்ஆவிகளின் ஆசைகளை யாரறிவார்?*

*(கு.க.பக்கம்: 632)*

பொறியியலாளன், அறிஞன், உலகப் பெருமதியாளன் என்ற அறிவுப் பேறுகள் யாவற்றுக்கும் கீழே போய், கொங்கு நாட்டு மண்ணின் தமிழ் வாழ்க்கையின் உயிர்ப்பு இந்த வரிகளில் வெளிவருகிறது. நாட்டார் நிலைத்தமிழரின் ஒப்பாரியோசை ஒப்புயர்வற்ற கவிதைக்கு இலயத்தை

வழங்குகிறது. அந்தப் பண்பாட்டின் சின்னங்கள் சிலிர்ப்புடன் வெளிவருகின்றன. ஈழத்தமிழர் பற்றிய எந்த நூலும் இப்பாடல்கள் இல்லாது நிறைவு பெறாது. இவரது கவிதைகளின் பிரதானப் பொருள் சமூக, அரசியல், விமரிசனம். அது நவீனத் தமிழ்க்கவிதையின் பொதுப்படையான இயல்பு. எனினும் இவரது கவிதையாக்கத்தின் மிக முக்கிய அம்சம், கவித்துவம் தமிழில் பாரம்பரியமாக வரும் ஓசை அமைதிகளைப் பயன்படுத்துவதாக உள்ளது. ஒரு மொழியின் யாப்பு மரபு என்பது அந்த மொழிக்கூட்டத்தினரது ஓசையமைதி, வாழ்க்கைச் செல்கதி (Phase of Life) ஆகியவற்றுடன் மிகமிக ஆழமாகத் தொடர்புடையது. பண்டைய ஓசை மரபுகள், வந்து சேரும் மாற்று ஓசை மரபுகளுடன் இணைந்து வாழ்க்கையின் ஓட்டத்திலும், கவித்துவத்தின் வெளிப்பாட்டிலும், இலயங்களை மாற்றும். கலி-கட்டளைத் துறையானதும், ஆசிரியம் விருத்தத்துடன் இணைவதும் இந்தச் சமூக நாத ஓட்டத்தின் விதியாகும். புதுக்கவிதைகூட முறிந்த ஓசையமைதியின் ஊடாக முறியாது செல்லும் ஓர் இதய இலயத்தைக் கொண்டது. யாப்பு முறைமை, ஓசையமைதியுடையது. அந்த ஓசை விதிமுறையான (Formal) ஓசை. அதில் இப்படித்தான் இனிவரும் என எதிர்வு கூறலாம். அதாவது அதற்கு ஒரு முன்கூட்டிச் சொல்லப்படத்தக்க ஒழுங்கமைதி (Predictability) உண்டு. அதற்கும் மேலாக அதற்கென ஒரு 'மொழி' உண்டு; 'மொழிமரபு' உண்டு. சுருக்கமாகச் சொன்னால், வரன்முறையான தமிழ்ச்செய்யுள் ஒரு தனி உலகு. அது அதன் விதிகளுக்கு இயையவே இயங்கும். அதே வேளை அதன் 'தொடர்பியல் வலு' தாக்கம் நிறைந்தது.

தனது தொழில்முறை ஈடுபாடுகளில் தனது பயில்வு நெறிகளில் தமிழ், தமிழ் நெறிகள் அதிகம் இடம்பெறாத நிலையில், தனது பண்பாட்டு வேர்களை மீள நோக்குபவர், தமிழ்ப் பாரம்பரியத்தின் விதிமுறையான வெளிப்பாட்டு முறைமையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளல் தவிர்க்க முடியாத ஒன்றாகும். பேராசிரியர் குழந்தைசாமி அவர்களது 'தமிழிடத்துத் திரும்புகை' என்பது அதன் 'மரபு வழி அமைதி'யை மேற்கொள்வதாகவே அமையும். குலோத்துங்கனது செம்மொழிச் சார்பை அவரது யாப்புக் கட்டமைப்பில் மாத்திரமல்லாமல் சொற்செம்மையிலும் காணலாம். ஆனால் இந்த 'மேற்கொள்கை'யில் காலப்போக்கில் ஒரு முதிர்வு ஏற்படுவதையும் நாம் அவதானிக்கலாம். தொடக்க நிலையில் விதிமுறையான யாப்பு முறைகளையே கையாண்ட குலோத்துங்கன், படிப்படியாகப் பேச்சோசை (Speech Rhythm) மிகுந்த நடைக்கு வருவதைக் காண முடிகிறது. கவியரங்கக் கவிதைகளிலும், அவற்றுக்கு மேலாக, அவரைப் பெரிதும் 'உலுப்பிய' விடயங்கள் பற்றி எழுதும் போதும் ஒரு பெரு நெகிழ்ச்சி ஏற்படுகின்றது.

தமிழ்க் கவிதையை யாப்பு அடிப்படையில் 'மரபு', 'புதியது' என்று பிரிப்பது தமிழில் யாப்பியல் வரலாற்றையே மறுதலிக்கும்

முயற்சியாகும். தமிழ் மரபில் விருத்தம் கூட ஒரு காலத்தில் புதுக்கவிதை. ஒரு மொழியின் யாப்பு என்பது ஏற்கெனவே கூறியபடி அடிப்படையில் அந்த மொழியின் பண்பாட்டு வட்டத்தினுள் உள்ள ஓசை நயத்தோடு சம்பந்தப்பட்டது. யாப்பு எப்பொழுது பிரச்சினையாகுமெனில், அது கவிஞனின் சொல் வேகத்தையும், தொடர்பியல் ஆற்றலையும் முழுமை பெறவிடாது தடுக்கும் பொழுதுதான். குலோத்துங்கனுக்கு அந்த இடர்ப்பாடு இருக்கவேயில்லை என்பது அவரது கவிதைகளில் புலனாகிறது. உண்மையாதெனில் உணர்வும் வெளிப்பாடும் பண்பாட்டின் அடித்தொனிகளால் தீர்மானிக்கப்படுகின்றன. குலோத்துங்கனின் கவித்துவத்தைக் காணும்போது விபுலானந்த அடிகளின் கவித்துவ வெளிப்பாடு நினைவுக்கு வருகின்றது. விபுலானந்தர் கவிதைகளிலும் யாப்புச் செம்மை, சொற்செம்மை மிக முக்கியமானவையாகும். குலோத்துங்கன், விபுலானந்த அடிகளைவிடச் சமூக ஈடுபாடு அதிகம் உடையவர். சமூக விடுதலை பற்றிய செயற்சிரத்தையுடையவர். இந்தச் சிரத்தைகளுக்கு இயைந்ததான ஒரு கவிதை நடை குலோத்துங்கனுக்கு இயல்பாகவே அமைந்துள்ளது. குலோத்துங்கன் தனது கவிதையின் தொடர்பியல் வலுவுக்குச் செற்செறிவையும் அந்தச் சொற்கள் கவிதையின் இலயத்துடன் இணைவதையுமே பெரிதும் நம்பியுள்ளார். நல்ல யாப்பில் சொல்லின் பொருளும் ஓசையின் தரிப்பும் (Beat) இணைதல் வேண்டும். குலோத்துங்கன் கவிதை இந்தச் சொற்செம்மை ஓட்டத்தினை (Beat) உயிர்ப் பண்பாடாகக் கொண்டது. இதுவரை கூறியவற்றைத் தொகுத்து நோக்கும்போது இவரது ஆக்க நோக்கு, ஆக்க முறைமை ஆகியனவற்றைப் பார்க்கும்போது இருபதாம் நூற்றாண்டின் பிற்கூற்றில் முதன்மை இடம்பெற்ற கவிதைப் பண்பாட்டிலிருந்து வேறுபட்ட ஒரு கவித்துவ நோக்கும் தொழிற்பாடும் இவரிடத்தில் காணப்படுவதை அவதானிக்கலாம். கவிதை நிலையிலும் சரி, கவித்துவ ஆளுமை நிலையிலும் சரி, பொது நீரோட்டத்துக்குள் வர முடியாதவர் குலோத்துங்கன். இவரது கவிதைத்தனம் வேறு; கவிதைகளுக்கான தேவையென்று இவர் கொள்ளும் பொருளும் வேறு. இவர் குரலும் தனிக்குரல்தான்.

இலக்கியச் செல்நெறியின் பண்புகளைப் பதிவு செய்ய விரும்பும் இலக்கிய மாணவன் சிறுபான்மை என்பதற்காகவோ தனிக்குரல் என்பதற்காகவோ இவரது கவிதைகள் பற்றிக் குறிப்பிடாது விட்டால் சமகாலத் தமிழ்ச் சிந்தனை மரபில் ஒரு ஒளிக்கீற்றை மறைத்தவனாவான். பெரியார் காலப் பின்னணியில் வந்து இன்று மருத்துவம், பொறியியல், சட்டம் போன்ற பல தொழின்மைத் துறைகளில் வளர்ந்து உயர்ந்து தங்கள் கடமைகளை ஆற்றிக்கொண்டு அரசியல் சூறாவளிகளைப் பற்றிக் கவனியாது செம்மையான ஒரு தமிழகத்தை உருவாக்குவதில் சில சிந்தனையாளர்கள் பரவலாக முன்னிற்பதைக் காணலாம்.

குலோத்துங்கனின் கவிதைக் குரல் அந்தக் குழுமத்தினது குரலாகும். தமிழ்நாட்டுக் கவிதை பற்றிய விமர்சனப் பதிகைகள் இந்தத் தனிக்குரலைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளாதது கவலைக்குரிய ஒரு விடயமாகும். கவிஞரின் அசாதாரணத் தன்மையும் அவரது கவிதைகளின் வேறுபடும் தன்மையும் பதியப்பட வேண்டுவனவாகும். இதுவே அவர் தனித்து நிற்பதற்குக் காரணமாகும். வெகுசன ஊடகப் பண்பாடு தனது கட்டுக்குள் வைத்திருக்கும் தமிழகத்துக் கவிதையின் இன்னொரு பரிமாணத்தை, சமூகச் சிரத்தைப் பரிமாணத்தை அவரது படைப்பு வற்புறுத்துகின்றது.

# 6. கைதவமோ செய்தவமோ

மொழி என்னும் சாதனம், உலகின் மற்ற உயிர்களிடமிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுகிறது. மனிதன் படைத்த கருவிகள் பலவற்றுள் மொழி எனப்படும் கருவி ஏனைய அனைத்துக் கருவிகளிலும் வேறுபட்டது; உயர்ந்தது; அளவிடற்கரியது; ஆற்றல் வாய்ந்தது. மொழி சமுதாயச் சக்கரத்தின் அச்சு ஆகும். ஓர் இனத்தை அடையாளம் காட்டுவது மொழிதான். அவ்வினம் தனது மொழியை இழந்தால் தன்னுடைய அடையாளத்தை இழந்துவிடும். மொழி என்பது மக்கள் படைத்துக் காப்பாற்றிவரும் அரியதொரு கலையாகும். கலைகளில் இது வளர்கலை. மொழியே மக்களின் அறிவை வளர்த்து உயர்த்தும் அரிய கருவியாக உள்ளது. மொழி என்பது கலையாக மட்டுமல்லாமல், மக்களின் அறிவை வளர்த்து அறியாமையைப் போக்கும் கருவியாகவும் விளங்குகிறது. மொழி பொதுவாகக் கருத்து வெளிப்பாட்டிற்குரிய ஒரு கருவி என்று கூறுவார்கள். மொழி கருத்து வெளிப்பாட்டிற்கு மட்டும் உரிய கருவியல்ல; உணர்ச்சி வெளிப்பாட்டிற்கும் உரிய கருவியாகும்.

தமிழ் மொழியானது தமிழரது மேன்மைக்கு, தமிழரது தகுதிக்கு, முற்போக்குக்கு ஏற்ற மொழியாகும். இந்திய நாட்டின் பிற மொழிகளைவிடப் பலவகையிலும் நாகரிகம் பெற்று விளங்குகின்ற மொழி. எந்த ஓர் இனமும் சமுதாயமும் தனது பழம்பெருமை பற்றிப் பெருமிதத்துடன் எண்ணுவதும் பேசுவதும் இயல்பு. பாரம்பரியம் மரத்தின் ஆணிவேரைப் போன்று அசையாது நிலைத்து நிற்க அதுதான் அடிப்படை. பாரம்பரியம் என்பது கடந்த காலத்தின் கணக்கு அன்று. முன்னோர் அனுபவங்களின் தொகுப்பாகும். மொழி அச்செல்வத்தைப் பாதுகாத்து வைத்திருக்கும் கொள்கலனாகும். நாளைய தலைமுறைக்கு விட்டுச் செல்வதால் ஓர் இனத்தின் வலிமையையும் பெருமையையும் அவ்வினமொழி பிரதிபலிக்கிறது. எனவே, மாபெரும் நாகரிகங்கள் மகத்தான மொழியை உருவாக்கத் தவறியதுமில்லை. வரலாற்றுப் பெருமை இல்லாத மக்கள் வளமிக்க மொழியை உருவாக்கியதுமில்லை. மூவாயிரம் ஆண்டுக்கும் மேலான பாரம்பரியம் உள்ள இந்திய நாகரிகம் கண்ட மொழிகள் தமிழ், வடமொழி ஆகிய இரண்டும் தொன்மையானவை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய இலக்கணம் உண்டு. கவிதை,

இலக்கியம் மற்றும் காப்பியங்களும் உண்டு. உலகில் பெருமையுடைய மொழிகள் ஆறனுள் இந்தியா இரண்டு மொழிகளின் தாயகமாகத் திகழ்கிறது. இப்பெருமை உலகில் வேறு எந்த நாட்டுக்கும் இல்லை. தமிழைப் பலநிலைகளில் ஆராய்ந்த ஏ.வி.சுப்ரமணிய அய்யர் அவர்கள், தமிழுக்கு இணையாக விளங்கிய சமசுகிருதத்தில் அகப்பாடல்கள் இருப்பினும் தமிழ்ப்பாடல்களில் உள்ள கதையழகோ, கற்பனைப் பண்புகளோ, மனோதத்துவ ஆழமோ அவற்றில் காணப்படவில்லை என்கிறார். இது தமிழின் மேம்பாட்டினை விளங்க வைப்பதாக அமைகிறது.

எனினும் புதியன காண்பதற்கு நம் தமிழகப் பங்களிப்பு அறவே இல்லை எனலாம். அறிவியல் தொழில்நுட்பம் சார்ந்த துறைகளில் மூலநூல் சமுதாயமாக நாம் இன்னும் மாறவில்லை. மொழிபெயர்ப்புச் சமுதாயமாகத்தான் இருந்து வருகிறோம். நம் மொழி வளமுடையது, வலிமையுடையது. ஆயினும் நாம் புதியன படைப்பவர்களல்லர். அறிவியல் தொழில்நுட்பம் பொருளாதாரம், சமுதாயம், மேலாண்மை போன்ற எல்லாவற்றிலும் நாம் மேலைநாட்டினரின் கண்டு பிடிப்புகளையே பயன்படுத்தி வருகின்றோம். தேவைப்படும் இடமெல்லாம் ஏற்று வாழ்கிறோம். அறிவுத் துறைகளில் நாம் இன்னும் கொடுத்து வாழும் நிலைக்கு வளரவில்லை. வளர்வதே நம் குறிக்கோளாக அமைய வேண்டும். அதுவே நமது உயிர்த்துடிப்பாகும். இதனை,

*வாழ்வும் மொழியும் வளரும் பொருளாம்*
*ஆழ்திரை விரையும் ஆற்றின் நீரென*
*ஓட்டம், புதுமை, உயிர்த்துடிப் பிவைதான்*
*ஈட்டமாம், தேக்கம் இறப்பின் வாயிலாம்*

என்று கூறுகிறார் கவிஞர் குலோத்துங்கன். தற்போது தமிழ் மறுபிறப்பு எடுத்துள்ளது. இனி, பழைய நிலைக்குத் திரும்பாது. சில பழம் பாடல்களை வைத்துக்கொண்டு எமது தமிழே பெரிது என்றால் உலகம் ஒப்புக் கொள்ளாது. சிவனைத் தூது அனுப்பியதும், முதலை விழுங்கிய பாலகனை அழைத்ததும், எலும்பைப் பூங்கோதையாக்கியதும், கல்லைத் தெப்பமாக்கியதும் எமது தமிழ்தானே என்று புராணம் பேசிய காலம் போய்விட்டது. மேலும், தனித்தமிழ் முயற்சி மட்டும் போதாது. எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதும் போதாது. சமுதாய உயர்வுக்கு வேண்டிய அறிவுச் செல்வத்துடன் திகழ்ந்தால்தான் எங்கும் தமிழர் எதிலும் தமிழர் என்று உயர்ந்த நிலையை அடைய முடியும். இயல்பாகவே தமிழ்ச் சமுதாய முன்னேற்றத்தில் நமக்குள்ள அக்கறையும் இன்றைய அறிவியல் தொழில்நுட்பத் தேவைகளுக்கு ஏற்ப நம் தமிழ் மொழியும் மேம்பட்டு விளங்க வேண்டும் என்ற வேட்கையும் குலோத்துங்கன் கவிதைகளில் வெளிப்படுகின்றன. நமது மக்களின் அரசியல் சமுதாயப் பொருளாதாரத் தேவைகளை நமது மொழி முழுமையாகப் பூர்த்தி செய்ய வேண்டும் என்பது அவரது ஆசை. நமது மொழி, நமது தேவைகளைப் பூர்த்தி

செய்யத் தவறும்போது, பூர்த்தி செய்யும் வாய்ப்பு உடைய மொழியை நாடத் தொடங்கிவிடுகிறார்கள் என்று பெரிதும் கவலைப்படுகிறார். எனினும், மனந்தளர்ந்து விடவில்லை. தமிழ் ஏற்றம் பெறும் நாள் விரைவில் வரும் என்று நம்புகின்றார். ஆங்கிலத்தில் வியத்தகு புலமை இருந்தாலன்றிச் சமுதாயம், அரசியல், அறிவியல், ஆன்மீகம், சமயம் ஆகிய வாழ்வின் எல்லா அம்சங்கள் அனைத்திலும் ஏறத்தாழ இன்றுவரை ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைப் பாட இயலாது. தமிழில் ஆழ்ந்த பயிற்சியும், புலமையும், சொல்வளமும் இருந்தால் அல்லாது தொடர்ந்து ஆழமான நதியின் அமைதியான ஓட்டமும், வெள்ளப்பெருக்குப் போன்ற உணர்வும் கருத்தாழமும் ஒருங்கிணைந்த கவிதைகளைப் படைத்தல் இயலாது. கவிஞரின் கற்பனை வளம், நயம் போன்றவை ஆங்காங்கு அருமையாக வெளிப்படுகின்றன. தமிழன்னை கவிஞருக்கு அவர் விழைந்த அனைத்தையும் வேண்டியவாறு விருப்புடன் வழங்கியிருக்கிறாள்.

புகழ்பெற்ற பேராசிரியை பிரேமா நந்தகுமார் அவர்கள் ‘சுமையைக் குறை’ என்பதை விடச் ‘சுமக்கும் அளவு தோளுக்கு வலிமைதா’ எனக் கேட்பதே சிறந்தது என்று குறிப்பிட்டதைக் கவிஞரின் மாறுபட்ட தொலைநோக்குப் பார்வை எனக் குறிப்பிடுகிறார்.

‘இமயச் சிகரம் வளரட்டும், தொடர்ந்தேறும் வலிமை எம் கால் பெறட்டும்’ என இயற்கையிடம் வேண்டுகிறார். ‘துயரம் தவிர் எனத் தொழுவதிலேன்’ என்று வீறாப்புடன் பாடுகிறார். துயரத்தில் மனிதன் ‘உருப்பட’ முடியும். உருப்பட வேண்டும் என்பது மனித சமுதாயத்திற்குத் தரப்படும் நல்ல அறிவுரையாகும். ‘எட்டாத பொருளுக்குக் கொட்டாவி விடாதே’ என்பது நம்பிக்கையைத் தகர்க்கும் பழைய பழமொழி. எட்டாததற்கும் ஏணி படைத்து, ஏறவும் பழகு என்பது குலோத்துங்கனின் நன்மொழி. குலோத்துங்கன் இத்தகைய தன் முயற்சி, தன்னம்பிக்கை, தன்னெழுச்சிப் பாடல்களைப் புதுமையாய்ப் பாடியுள்ளார். இவை ‘உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்’, ‘ஊழையும் உப்பக்கம் காண்பர்’, ‘முயற்சி மெய்வருத்தக் கூலி தரும்’, ‘எண்ணிய எண்ணியாங்கு எய்துப’ என்பன போன்ற பல அறிவுரைகளைச் செயல்படுத்தும் பார்வையை அழுத்தமாக வலியுறுத்துகின்றன. குலோத்துங்கன் தாம் எழுதிய கவிதைகளில் தேர்ந்தெடுத்த நாற்பத்து எட்டுக் கவிதைகளை Earth is paradise Enough என்ற தலைப்பில் அவரே மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கிறார். அந்நூலுக்குக் கன்னட எழுத்தாளர் முனைவர் ஆனந்தமூர்த்தி எழுதியுள்ள முன்னுரையில் பின்வருமாறு கூறுகிறார்:

> I knew Prof. Kulandaisamy as a visionary in the field of education, but I did not know that he was a poet as well. A surprise awaited me when I was in Oslo for a literary conference. A Norweigian Poet who looked delicate and was

also participating in the conference. She talked about her preferences in poetry which crosses national and cultural boundaries. As an example, she read about two poems of Prof.Kulandaiswamy. I had great admiration for Prof.Kulandaisamy as an educationist, but the Norwegian Poet added to a new dimension to my admiration.

இந்தியாவில் தோன்றிய, இனித் தோன்றி வளரும் கவிஞர்களும் இறை நம்பிக்கையைப் பாடும் பல்வேறு இலக்கியங்கள், இதிகாசங்கள், புராணங்கள் போன்றவற்றின் ஆதிக்கத்திற்குட்பட்டுத்தான் வெளியே வரவேண்டும். பாரதிதாசன் கடவுளைப் பாடினார்; பின்னர்ப் பாடவில்லை. பாரதியார் கடவுளைப் போற்றிப் பாடுகிறார். ஆயின் மனிதன் அக்கடவுளைவிட மேலானவனாக வளர வேண்டும் என்று பாடுகிறார். குலோத்துங்கன் தம் இளமைப் பருவத்திலிருந்தே 'கடவுள் பற்று' என்பதில் எவ்வித ஈடுபாடும் கொள்ளவில்லை. அதில் ஈடுபட வேண்டும் என்ற ஆர்வமும் இல்லை. எனினும் கடவுள் நம்பிக்கை உள்ளவரைக் கண்ணியக் குறைவாகப் பாடவில்லை. குலோத்துங்கனுக்குக் கடவுள் ஒரு பொருட்டல்ல. அப்படி ஒருவர் இருந்தால் இருந்து விட்டுப் போகட்டும். நமக்கு ஆவது ஒன்றுமில்லை என்ற போக்குடையவர். மதங்களிலோ கடவுள் வழிபாட்டிலோ அவர் மனம் ஈடுபடவில்லை. ஆயின் அவர் எல்லா மதநூல்களையும் படித்தார். அதன் விளைவாக ஓர் உயர்ந்த மனிதப் பண்புடன் திகழ்கிறார்.

## கருத்தே கவிதை

பெரியாரின் கொள்கைகளில் படிந்த மனமுடையவர் எனினும் கவிதையில் பெரியாரின் வீச்சு இல்லை. பண்டைய இலக்கியங்களின் தாக்கம்தான் காணப்படுகிறது. வழிவழியாக வரும் இலக்கியத் தாக்கம் யாருக்கும் இயற்கையானதுதான். அதனால்தான் பகுத்தறிவைப் போற்றும் கவிஞர் குலோத்துங்கன் மதம், கடவுள், போன்றவற்றைக் குறிப்பிடாமல் பாட முடியவில்லை. இது நிலத்தின் இயல்பாகும். மக்கள் மனங்கொள்ள இவை தேவைப்படுகின்றன. குலோத்துங்கன் அறிவார்ந்த கவிஞர். அவர் கவிதைகளில் கற்பனை மிகவும் குறைவாகவே காணப்படும். நாடு செழிக்க மனிதன் அறிவும் நெஞ்சுரமும் பெற வேண்டும் என்று பாடுகிறார். தம் கவிதைகளை அவர் உணர்ச்சிப் பெருக்கால் பாடுவதில்லை. தம் கவிதைகளை, எண்ணிப் பார்த்து எண்ணிப் பார்த்துப் பாடுகிறார்; இல்லை எழுதுகிறார்; மீண்டும் பார்க்கிறார்; திருத்துகிறார்; மீண்டும் எழுதுகிறார். சொல்ல வேண்டியதைத் துல்லியமாக அழுத்தமாகக் கூற வேண்டும் என்று பிடிவாதம் அதிகம்.

ஒரு சிற்பிபோல் தம் கவிதைகளைச் செதுக்குகிறார் எனின் மிகையாகாது. புது இலக்கியங்களைப் படைப்பவர் எனினும் வெறுங்

கவிதைகளில் நாட்டமில்லை. கவிதை வடிவில் கருத்தும் காரியமும் நடைபோட வேண்டும் என்று விரும்புகின்றார். மேலைநாட்டுக் கவிஞர்களான Pope மற்றும் Dryden போல் தெளிவும் துல்லியமும் துலங்கும் கவிஞர் இவர். இலக்கிய அழகு, கவிதை உணர்வு ஆகியவற்றோடு கருத்து முதலிடம் பெற வேண்டும் என்ற உறுதியுடையவர் இவர். வெற்றாரவாரமான கவிதைகள் எழுதுவதில் விருப்பமில்லை. மக்கள் மொழியில் பாடினாலும் இலக்கிய நடையில் கவிதை புனைந்தாலும் தமிழ் மண் உயர வேண்டும் என்பதே குறிக்கோள். ஆகையினால் கருத்துக்கே முதலிடம் தந்து கவிதை இயற்றுகிறார்.

சான்றோர் செய்யுட்கள் எழுந்த காலத்திலிருந்து தத்துவத் தெளிவுடனும், தரிசன வீச்சுடனும் காலத்துக்குக் காலம் வந்துள்ள செய்யுள் மரபை—சிந்தனைப் பூர்வமான கவிமரபை—நமது யுகத்துக்கேற்றவாறு புதியதொரு உயரத்திற்கு எடுத்துச் சென்றிருக்கிறார். குலோத்துங்கனின் புதிய கவிதையால் பழைய செய்யுட்களும் நமக்கு இனியவையாகின்றன. இன்றைய சூழ்நிலையில் குலோத்துங்கன் ஓர் ஆய்வறி கவிஞர் (Intellectual Poet) என விவரித்தல் சரியானதாயிருக்கும். கவிஞரின் கவிதைகளில் ஆர்ப்பாட்டப் போர்ப்போக்கோ, ஆவேசமோ இருப்பதில்லை. எள்ளி நகையாடி ஏளனம் செய்யும் நிலையோ, பயந்து நடுங்கி மன உறுதியிழக்கும் ஆற்றாமையோ இல்லை. தீவிரமான உணர்ச்சிகள் என்று குறிப்பிடத்தக்கவை எவையும் இல்லை. இருப்பினும் கவிதையில் ஓர் ஈர்ப்பு இருக்கிறது. தெள்ளத்தெளிந்த சில சீரிய சிந்தனைகளைத் தேறித் தேர்ந்தெடுத்த திட்பமான சொற்களால் அமைதியாகவும், உறுதியாகவும் எடுத்துரைத்துள்ள பாங்கே இக்கவிதைகளின் நயமாகும். இவர் கவிதைகளில் உணர்ச்சிக்கு அதிகம் இடம் இருக்காது. உணர்ச்சிக்கு மேலாகச் சிந்தனையே, அதாவது கருத்தே ஓங்கி நிற்கிறது. உணர்ச்சியோ மிகைப்பட்டுத் தோன்றாமல் இலைமறை காய்போல் பின்னணியில் நின்று கவிதைகட்கு ஓர் அழகைத் தருகின்றது. இவர் கவிதைகளில் பெரும்பாலும் சொல்வளம் தந்த மொழிநலத்தை நுகரலாம்.

இருபத்து ஒன்றாம் நூற்றாண்டிலும் இனிவரும் நூற்றாண்டு களிலும் தவிர்க்க முடியாதவாறு விஞ்ஞானம் மனித வாழ்க்கையில் பெரும்பங்கு வகிக்கும். ஆகையால் இன்றும் நாளையும் இலக்கியப் படைப்பாளிகள் இலக்கியக் கர்த்தர்கள் விஞ்ஞானத்தைப் புறக்கணிக்க இயலாது. உண்மையில் திரு.குழந்தைசாமி விஞ்ஞானத்தைக் கவிதையாக்கவில்லை. விஞ்ஞானத்தை, பொறியியலை, பல ஆண்டுகள் பயின்று அதிலே ஊறித் திளைத்தமையினால், விஞ்ஞானத்தின் உயர்வை, விஞ்ஞானப் பார்வையை, இலக்கிய ஆக்கத்திற்குப் பயன்படுத்துகிறார். விஞ்ஞான நோக்கு பாசியின் இழைபோல், தசையிடை நார்போல ஒன்றி

இணைந்து அவரது இலக்கியப் படைப்புகளில் ஊடுருவி நிற்கிறது. அதுவே இவரது தனித்தன்மைக்கும் அடிப்படையாயுள்ளது.

பாரதியின் அறிவியல் பார்வையும் திருவள்ளுவரின் வாழ்வியல் நெறிமுறைகளும் கவிஞரின் உள்ளத்தில் ஆழமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. அவர் எந்த இலக்கியக் கோட்பாடுகளிலும் தன்னைக் கட்டிப்போட்டுக் கொள்ளவில்லை. சிறை வைத்துக் கொள்ளவில்லை. சுதந்திர இந்தியாவின், தமிழகத்தின் பல்வேறு துறைகளில் நிகழ்ந்துள்ளவற்றைக் கண்டவர். தன் காலத்தில் ஐம்பது ஆண்டுகாலப் பார்வை, அனுபவம் வேறு எந்தக் கவிஞனுக்கும் கிட்டாத பேறு ஆகும். எந்தக்கோணத்திலிருந்து பார்த்தாலும் பிற கவிஞர்களிலிருந்து அவர் முற்றிலும் வேறுபட்டுக் காணப்படுகிறார். இக்கவிஞரிடம் வழிமொழிதலோ துதிபாடுதலோ போற்றுதலோ தூற்றுதலோ இல்லை. சத்திய வாக்குகள் போல் உண்மைகளைக் கூறத் தயங்குவதில்லை என்பது அறிஞர்களின் மதிப்பீடாகும்.

பரிணாம வளர்ச்சியில் மனிதன் ஓர் உயிரியாக உருவாகியுள்ளான். அத்துடன் மனித முயற்சி இல்லாவிட்டால் மேலும் வளர இடம் இல்லை என்று ஐ.ஏ.வெல்ஸ் போன்ற சிந்தனையாளர்கள் எழுதியுள்ளார்கள். மகான் அரவிந்தரும் மனிதன் தேவனாக வேண்டும் என்ற முயற்சியில் நெடுங்காலம் தவம்புரிந்து அவன் தேவனாக முடியும் என்ற நம்பிக்கையை வெளியிட்டுள்ளார். இக்கருத்தை மிகுந்த நம்பிக்கையுடன் பாரதியார் பல கவிதைகளில் கூறுகிறார். இந்த உயர்ந்த குறிக்கோளையும், அதை அடைய முடியும் என்ற நம்பிக்கையையும் குலோத்துங்கன் கவிதைகளிலும் இயல்பாகவே காணலாம் என்பார் முதுபெரும் தமிழறிஞர் பெரியசாமித்தூரன். இவர், கவிஞர்பால் அன்பும், பெருமதிப்பும் கொண்டவர்.

> குலோத்துங்கன் கவிதைகள் எளிய பதங்கள் இனிய சொல் அமைப்பு இவற்றைக் கொண்டு படைக்கப்பட்ட சிறந்த கவிதைகளின் தொகுப்பு: கொள்கையில் தெளிவு, புதிய அணுகுமுறை, அழகான கருத்துக்கள், இவை கவிதை வடிவம் கொண்டு காட்சி அளிப்பதை எண்ணி, எண்ணித் தான் வியந்தது உண்டு. இப்படிப்பட்ட கவிஞர்களைப் பாராட்டாமல் போனால் உயர்ந்த உணர்வுகள் மங்கிவிடும் என்பது என் அச்சம். மகாகவி பாரதியாரும் 'கம்பன், வள்ளுவன் முதலிய பெருங்கவிஞர்களைப் பாராட்டாத நாட்டில் ஒரு சிறந்த கவிஞன் தோன்ற மாட்டான்' என்று எழுதியிருப்பது என் நினைவுக்கு வந்தது. ஒரு சிறந்த கவிதை இயற்றினால் சங்க காலத்தில் அந்தப் புலவனுக்கு ஒரு தனி இடம் ஒதுக்கப்படும். அந்தக் கவிதை ஒரு தொகுப்பில் திண்ணமாக இடம் பெற்றுவிடும். இந்த மரபைத் தமிழர்கள் மறந்துவிடமாட்டார்கள். நான் அமைதிக்காகக் கூறுவதாக

> நினைத்துக் கொள்ளக்கூடாது. குலோத்துங்கன் கவிதைகள் தமிழ் இலக்கியத்தில் நிரந்தர இடம்பெறத்தக்கன என்று உறுதியான மதிப்பீட்டையும் அவரது கவிதைகளின் தகுதியை இன்னும் தமிழகம் முழுமையாக உணராத நிலை பற்றிய என் உள்ளக்குமுறலையும் பதிவு செய்கிறேன்

என்கிறார் பெரியசாமித்தூரன்.

பாரதநாடு பழம்பெரும்நாடு, பூரண ஞானம் பொலிந்த நன்னாடு, புத்தர் பிரான் அருள் பொங்கிய நாடு. இதன் பாரம்பரியத்தை, பண்டைய உயர்வை எண்ணிப் பெருமைப்படுகிறார்; பரவசமடைந்து பாடுகிறார் கவிஞர். புத்தர்பிரான் முதல் வாழ்வின் இறுதிகண்டு உண்மையின் இயல்புணர்த்திய சங்கரர் இடையாக, பின்னர்த் தாழ்வுற்று, வறுமை மிஞ்சிப் பாழ்பட்டு நின்ற பாரதத்தை உய்விக்க வந்த காந்திஅடிகள் வரை மகான்கள், வால்மீகி, வியாசர், வள்ளுவர், இளங்கோ, கம்பன், காளிதாசன் போன்ற மகாகவிகள் மற்றும் பல்துறைத் தலைவர்கள் என வந்த அனைவரையும் போற்றுகின்றார். இந்த மண் படைத்த வேத, உபநிடதங்களை வியந்து போற்றுகிறார். எனினும் இவற்றுள் எதுவும் நாளைக்கு நமது முன்னேற்றப் பயணத்திற்குத் தடையாக நிற்குமானால் அவற்றுடன் அவர் பற்று, பக்தி, காரணமாக ஒன்றிவிடுவதில்லை. அத்தகைய தீயபக்தி அவரிடம் இல்லை. பாரதி என்ற பெருந்தருவின் வேர்கள், பண்டைப்பண்பு பாரம்பரியம் என்ற மண்ணில் ஆழ்ந்து, பரந்து ஓடியிருந்தாலும், அதன் வாதும், தளிரும், மலரும், கனியும் நாளை என்ற எல்லையற்ற வான வெளியிடைப் பரவி நிற்கும். இத்தகைய பண்பினைக் குலோத்துங்கன் கவிதைகளிலும் காணலாம். வேதமாயினும், உபநிடதமாயினும், மறையாயினும் மற்றவையாயினும் அவை மனிதன் படைத்தவை. அவற்றைக் கடந்தும் வளர்பவன் மனிதன். வளர்ந்து உயர்பவன் மனிதன். ஒழுக்க நூல்களும், உபநிடதங்களும் மறைகளும் வழிகாட்டுபவைகளும் தனக்குத் துணையாக நிற்கும்வரை மனிதன் ஏற்க வேண்டும். இது தவிர்க்க இயலாத ஒன்று. எனவே, எந்த நூலையும் அது வேதமாயினும் வேறொன்றாயினும் மறையாயினும் மற்றதாயினும் மகான்கள் வாய்மொழியாயினும் மன்னர்தம் கோட்பாடாயினும் என்றும் எல்லோருக்கும் ஏற்றது என்று சொல்வதற்கில்லை என்று ஆணித்தரமாகக் கூறுவார் கவிஞர் குலோத்துங்கன்.

இந்த நாடு இதிகாசங்கள் பலவற்றைப் படைத்து எண்ணற்ற புராணங்களை உடையது. இவற்றில் பிடியளவே வரலாறு இருக்கலாம். ஆனால் பெரும்பகுதியும் கற்பனை. இதிகாசம் புராணம் போன்றவை நீண்ட பாரம்பரியம் கொண்ட ஒரு சமுதாயத்தின் உயரிய சொத்துக்கள். ஏதோ நேற்றுத் தலையெடுத்து இன்று பண்பாட்டிற்கு வந்த வளம் இல்லை. எனவே, முறையோடு நோக்கினால் அவை நம் பெருமைக்குரியன. நாம் போற்றிப் பாதுகாக்கத் தகுந்தன. ஆனால்

அவை பயன்படக்கூடிய அளவிலே இடம்பெற வேண்டும். நம் முன்னேற்றப் பயணத்தில் தடைக்கல்லாக அவற்றை வைத்துவிடக்கூடாது. இதிலே மயக்கம் ஏற்படுமானால், தவறு நேருமானால், அது சமுதாயத்தின் தடுமாற்றம், சமுதாயத்தின் தவறு. அதற்குப் புராணங்கள் பொறுப்பல்ல. எனவேதான் பாரதி "நன்று புராணங்கள் செய்தார் அதில் நல்ல கவிதை பலப்பல தந்தார்" என்று அவற்றின் வலிமையான அம்சத்தைக் கூறி, "புவிதனில் ஊழ்நெறிகாட்டி நன்மை போதிக்கும் கட்டுக்கதைகள் அவைதாம்" என்று எடுத்துக்காட்டி, அன்றாட வாழ்வில் அவற்றிற்குரிய இடத்தையும் நிர்ணயிக்கிறார். குலோத்துங்கன் பாரதியின் புராண இதிகாசம் பற்றிய ஒளிவு மறைவற்ற கருத்துக்களை உள் வாங்கிக் கொண்டவர். அவர் கவிதைகளிலும் இத்தாக்கம் நன்றாகப் புலப்படுகிறது.

தமிழ்நாட்டின் தலைசிறந்த தமிழறிஞர்கள் பலரும் கவிஞர் குலோத்துங்கனின் ஒப்புயர்வற்ற தன்மையினைக் குறிப்பிட்டுப் பாராட்டத் தவறவில்லை. அரசியல் களத்தில் நற்பெயர் எடுத்து மறைந்த ம.பொ.சி. அவர்களும் சி.சுப்பிரமணியம் அவர்களும் பாராட்டியுள்ளனர். இனி மானுடயாத்திரை காப்பியத்தில் காணலாகும் நம் மனங்கவர்ந்த இலக்கிய நயங்களை, கற்கண்டுக் கவிதைகளை ஆய்ந்து அனுபவிப்போம்.

### அறிவே அனைத்தும் படைக்கும்

அறிவியல் வளர்ச்சி, மனித ஆற்றலின் அளவிறந்த நம்பிக்கையை உருவாக்கியிருக்கிறது. நிலமும், நீரும்தான் வளங்கள் என்றிருந்த நிலையிலிருந்து மாறி, வளர்ந்து, கனிம வளங்களும், எண்ணெய் வளமும் கண்டு, அறிவியலும், தொழில் நுட்பமும் தனது வளர்ச்சிக்குப் பயன்படும் தலைசிறந்த கருவி என்ற உணர்ந்த மனிதன் இன்று கல்வி எல்லா வளங்களும் தரும் தகுதி வாய்ந்தது என்ற நிலையை எட்டிக் கொண்டிருக்கிறான். கனவுகள் கனவுகளாகவே இருந்த காலக்கட்டம் மாறிக் கனவெனக் காண்பவை யாவும் கைப்படல் இயலும் என்னும் சூழ்நிலை உருவாகி வருகிறது. "அறிவுடையார் எல்லாமுடையார்" என்று 2000 ஆண்டுகட்கு முன்பு வள்ளுவர் கூறினார். அறிவே ஆற்றல் (Knowledge is power) என்று 17வது நூற்றாண்டில் பேகன் கூறினார். அன்றைய நிலையில் தீர்க்க தரிசனம் (Prophetic Statement) என்று வேண்டுமானால் கூறலாமே தவிர, முழுமையான நடைமுறை உண்மைகள் அல்ல. ஆனால் இன்று அது உண்மை என்னும் நிலை உருவாகி வருகிறது. மனிதன் கையில் பலநூறு கருவிகள் தற்போது உள்ளன. எனினும் எல்லாவற்றினும் எக்காலத்திலும் உயர்ந்த ஒரு கருவி கல்வியேயாகும். அது பீடுடைய கருவி. கடவுளும் தனக்கு வேண்டும் என்று ஆசைப்படும் கருவியாகும். கவிஞர் பாடுவதைக் கேளுங்கள்.

*பெருமிதம் கொள்ளத் தக்க*
*பீடுடைக் கருவியான*
*கல்வியென் றொன்று கண்டான்*
*கடவுளும் வெ.'.கி வேண்டும்*
*செல்வமென் றொன்று கண்டான்*

*(மா.யா.பாகம்-1. பாடல்:24,25)*

இயற்கையில் மறைந்து புதைந்து கிடங்கும் அளவற்ற செல்வங்களைக் கண்டெடுக்க, உதவிடும் கருவி கல்வி. மனிதன் தேடும் உலகங்கள் அனைத்துக்கும் கதவுகள் திறக்கும் சாவி கல்வியேயாகும்.

*.......தேடும்*
*உலகங்கள் அனைத்தினுக்கும்*
*கதவுகள் திறக்கும் சாவி*
*கல்வி..................* *(மா.யா.பாகம்-1. பாடல்:97)*

என்று பாடி, சாவியின் பெருமையை உயர்த்தி விடுகிறார். பணப்பெட்டியின் 'சாவி'யை அறிவுப் பெட்டகத்தின் சாவியாக்கிவிடுகிறார். இது இரும்பைப் பொன்னாக்கும் இரசவாத வித்தைபோல் இருக்கிறது! கல்வி, மனித வாழ்க்கையில் ஏராளமான மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இன்னும் கொண்டுவரும். கல்வியில்லா உலகில் எந்தவித முன்னேற்றமும் இருக்காது. தேக்கமே இருக்கும். மானுடம் இத்தகைய தேக்கத்தை விரும்புவதில்லை. மாறாத நிலைபற்றி உவமை நயம் தோன்ற அழகாகப் பாடுகிறார் கவிஞர்.

*.................மனிதன் தொட்ட*
*நீலவான் நிலவும், வாழ்வில்*
*நேர்மையர் உள்ளம்போல்*
*அசைவிலா மலைகள் யாவும்*
*அன்று தொட் டின்று மட்டும்*
*திசையிலும் மாற வில்லை*
*திறமையில் உயர வில்லை*
*தொங்குமோர் சிறிய வீடு*
*தூக்கணாங் குருவிக் கூடு*
*கூடிவாழ் அடையின் கூடு*
*வாழ்வதற் கெனச் சிலந்தி*
*வடித்துள வலைஎன்றாங்கு*
*சூழ்வன மாற்ற மின்றித்*
*தொடர்வன, வளர்வ தில்லை*
*மாற்றமொன் றில்லா வாழ்வை*
*மானுடம் ஏற்ப தில்லை*

*(மா.யா.பாகம்-1. பாடல்கள்: 104-108)*

என்று பிரகடனப்படுத்துகிறார். போர் எக்காலத்திலும் உயர்ந்ததாக இல்லை. போர் ஓர் அழிவுப்பாதை, படுகுழி. 'There is no good war' என்றார் மேலைநாட்டு அறிஞர் ஒருவர். எனினும் தொன்று தொட்டு இன்று வரை வீரம் காட்டிப் போரில் மடிதல் சொர்க்கம் செல்லும் வழி என்று நம்பப்படுகிறது. இது நல்ல நம்பிக்கையன்று.

*போர்க்களம் துறக்க நாடு*
*புகுந்திடும் வாயில் என்னும்*
*தீர்க்கமொ (டு) ஆர்ப்ப ரித்துச்*
*செறுநர்மேல் சென்று செற்றார்.*

*(மா.யா.பாகம்-1. பாடல்:158)*

போரில் சாதலே அன்றிச் சுவர்க்கம் புகுதல் இல்லை; இல்லவே இல்லை. இதை வீரரும் உணர வேண்டும். 'துறக்க வாயில்' என்று எதுவும் இல்லை என்று ஆணித்தரமாகப் பாடுகிறார். வழக்கமான நடைமுறைகளுக்கு மாற்றாக ஒன்று வருமானால் அது புதுமையாகிறது. சில நேரங்களில் அது புரட்சியாகிவிடுகிறது.

பூமியை மையமாகக் கொண்டு பிற கோள்கள் சுற்றி வருகின்றன என்று பலநூறு ஆண்டுகளாக மக்கள் நம்பி வந்துள்ள நாட்டில் ஓர் அறிஞர் அது தவறு என்றார். சூரியனை மையமாகக் கொண்டுதான் பூமி முதலான கோள்கள் சுற்றி வருகின்றன என்ற கருத்தைக் கூறினார். இது பெரும் புரட்சியை ஏற்படுத்தியது. கிறிஸ்துவ குருமார்கள் இதை ஏற்கவில்லை. அப்போதைய ஆட்சியாளர்களும் உண்மையை ஒப்புக் கொள்ளவில்லை. சூரியனே மையம் என்று கூறிய அறிவியல் அறிஞரைக் கம்பத்தில் கட்டி வைத்து உயிரோடு கொளுத்திவிட்டனர் கொடுமையாளர்கள். எனினும் அவருக்குப் பின் வந்த அறிஞர் பலரும் சூரியனே மையம் என்ற கருத்தை வலியுறுத்தி நிரூபித்தனர். பின்னாளில் அந்த உண்மை ஏற்றுக்கொள்ளப்பட்டது. புதுமையானது புரட்சியானது ஒன்று வரும்போது இம்மாதிரி எதிர்ப்புகளும் இழப்புகளும் வருவது தவிர்க்க முடியாதது என்பதைக் கவிஞர் அவர்கள் எளிய உவமையுடன்,

*......எதிர்ப்போர் ஏற்போர்*
*என ஒரு பிளவு தோன்றல்*
*எத்துறை எனினும் மெய்யாம்*
*மின்னலும் இடியுமின்றி*
*மேகங்கள் பொழிவதில்லை*
*இன்னலும் இழப்பு மின்றி*
*என்றுமே புரட்சி இல்லை*

*(மா.யா.பாகம்-1. பாடல்கள்: 255,256)*

என்ற வரிகளில் விளக்குகிறார்.

மனிதன் உயிர் வாழ்வதற்கு அவசியமான எல்லாவற்றையும் பற்றி அறிவியல் அறிஞர்கள் தொடர்ந்து ஆராய்ந்து கொண்டு வருகின்றனர். ஆராய்ச்சி என்று தொடங்கியது என்று கூற இயலாது. மனிதனிடம் மூளை என்று ஒன்று எப்போது மலர்ந்து இயங்கத் தொடங்கியதோ அப்போதே அனுபவத்தால் ஆராய்ச்சி தொடங்கி விட்டது என்று ஒருவாறு கூறலாம். இதுவரை அவன் ஆராய இயலாத ஒன்றாக இருப்பது 'உயிர்' மட்டுமே. மனிதன் இருக்கும் நாள்வரை அறிவியல் ஆராய்ச்சியும் இருக்கும். எத்தனையோ கலைகள் மடிந்துவிட்டன. எனினும் அறிவியல் மடியாது என்பதை 'நீள்கலை' என்ற சொல்லால் அருமையாக விளக்கி நிறுவுகிறார். என்றும் இருக்கும் 'நீள் விசும்பு' போல் இதுவும் இருக்கும். எனவேதான் அறிவியல் கலையை நீள்கலை என்றார். 'நீள்கலை' சுருக்கென இனிக்கும் மாதுளம் பரல் போல் இனிக்கிறது. சாறு நிறைந்த பரல் போல் பொருள் பொதிந்து விளங்குகிறது.

உணவு விளைவித்துத் தரும் பயிர்த்தொழிலை வேளாண்மை என்றும், விவசாயம் என்றும் பொதுவாகக் கூறுவதுண்டு. ஆயின் குலோத்துங்கன் என்னும் சொற்சித்தர் பயிர்த்தொழில் உயிர்த்தொழில் என்கின்றார். உடலையும், உயிரையும் வளர்ப்பது உலகில் உணவின்றி வேறெதுவும் இல்லை. யாவரே ஆயினும், எத்தகைய தவத்தவர் ஆயினும் பசி எல்லோருக்கும் உண்டு. பசியைத் தாங்கிக் கொள்ளலாம். உணவினால் அன்றிப் பசியைத் தணிக்க இயலாது. உடலை வளர்க்கும் உபாயம் உணவு. 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்பார் திருமூலர். உடல் வளர்ந்தால், உயிர் வளரும். எனவே, உடல் வளர்க்கும் உழவுத் தொழிலை உயிர்த்தொழில் என்றார். 'உயிர்த்தொழில்' என்ற சொல் உச்சித் திலகம் போல் கவனத்தை ஈர்க்கும் சொல். செல்லும் தவநெறி எல்லாம் உயிர்த்தொழில் பின்னேதான் செல்லும். கருவி என்ற வரிசையில் தற்போது வைத்துப் பார்த்தால் கலப்பையே முதன்மையானது. ஆயின் எளிமையானது. எளிமையான தோற்றம். ஆனால் சாதாரணக் கருவியன்று. மானுடம் அறத்தின் உயிர்வளர்க்கும் கருவி; உடல் வளர்க்கும் கருவி. பொருளில் எளியது. ஆயினும் பயனால் இமயத்தினும் பெரிது கலப்பையாகும். சின்னஞ்சிறிய கருவி பென்னம்பெரிய பொருண்மை உடையதாக விளங்குகிறது.

*கருவியின் வரிசை தன்னில்*
*கலப்பையே முதல், நாம் காணும்*
*பொருள்களில் எளியது, ஆயின்*
*பொருண்மையில் இமயம் அன்றோ?*

*(மா.யா.பாகம்-2. பாடல்: 41)*

என்று அழகாகக் குறிப்பிடுகிறார் வேளாண்குடியில் பிறந்த கவிஞர். பண்டுதொட்டு இன்றுவரை மருத்துவர்கள் உடற்பிணி அகற்றும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். மருந்தினால் நம் மதி நுட்பத்தால்,

அறுவை சிகிச்சையினால் மனிதனின் பிணி போக்கி ஆயுளை நீட்டிக்கின்றனர் என்று கூறலாம். வாழ்நாள் நீடிக்கும் வழியினை மருத்துவ உலகம் புதிது புதிதாகக் கண்டுபிடித்து வருகிறது. எனினும் இதுநாள்வரை மரணத்தை வெல்ல முடியவில்லை. மரணமில்லாத வாழ்வு எனும் வரம் தர முடியவில்லை. மனிதன் இறுதி என்று இயற்கை கண்ட இறப்பினை வென்றானில்லை! கடவுளும் மனிதனாக வந்தால் மரணமடைவான் என்பதே உறுதி.

*இறைவனும் நிலத்தில் தோன்றின்*
*இறப்பது தவிர்த்தற் கில்லை*

*(மா.யா.பாகம்-2. பாடல்: 58)*

ஆகவே, இறைவனும் மடிவான் என்று கூறுகிறார். புராணங்களில் இதிகாசங்களில் மனித அவதாரமெடுத்தவர்கள் மடிந்துள்ளனர். மறைந்துள்ளனர். இராமனும் மடிந்தான், கிருஷ்ணனும் மடிந்தான். எனவே, இறைவனும் நிலத்தில் வந்தால் இறப்பது உறுதி. இறக்காமல் இருக்க வேண்டும் என்ற முயற்சி வீண் வேலையாகும். வேண்டாத வேலையாகும். மனிதன் தன் வாழ்நாளில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் மரணத்தை வரவேற்கும் பக்குவத்தைப் பெற வேண்டும். மரணத்தை வரவேற்கும் பண்பு மரண துன்பத்தைப் போக்கிவிடும்.

வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் கவிஞர் குலோத்துங்கன் அவர்கள் அறிவியல் அறிஞர்களை வாயாரப் புகழ்வார். அறிவியல் மேதைகளை 'ஆய்வுத் தவசிகள்' என்பார். 'தரணித்தேவர்' என்பார். 'புனிதரில் புனிதர்' என்பார். வையகப் பிரம தேவர் என்பார். இத்தனை விதமாகப் பாராட்டிய பின்னும் அவர் மனம் நிறையவில்லை.

*இயற்கையின் இயல்பு காணும்*
*இயங்கிடும் விதிகள் காணும்*
*முயற்சியில் தமது வாழ்நாள்*
*முழுமையும் அர்ப் பணித்தோர்,*
*அறிவியல் தமைஆட் கொண்ட*
*அடியவர் போன்றார்............*

*(மா.யா.பாகம்-2. பாடல்கள்: 62,63)*

என்று மேலும் பாராட்டுகிறார். சிவனடியார், மெய்யடியார் என்பன இறையன்பர்களைக் குறிப்பன. இராமலிங்க அடிகளார் என்ற வழக்கு எல்லோரும் அறிந்த ஒன்று. எனினும் இவர் 'அறிவியல் அடியவர்' என்று ஒரு புதுமையைப் புகுத்தி மகிழ்கின்றார். அறிவியல் அடியார் அறிவியல் தவத்தவர் ஆவர். உண்மையைத் தேடும் வாழ்வில் துறக்கத்தின் இன்பம் எல்லாம் அடங்கியுள்ளது 'என்று கண்டவர்கள். இவர்களே சத்தியமான மெய்யடியார்கள்.

மனிதன் பிறக்கும்போதே கண்களோடுதான் பிறக்கின்றான். கண்களில்லாமல் பிறப்பது அரிதினும் அரிதானது. கண்களிரண்டும் கருவிலே உருவான திரு ஆகும். மனிதன் எந்த முயற்சி செய்தும் கண்களைப் பெறவில்லை. கண்ணும் காதும், மூக்கும் நாக்கும் கருவிலே அமைந்தவை. இருப்பினும் தமிழ்ச்சித்தர் கவிஞர் பெருமகன் குலோத்துங்கன் 'விழிகளும் முயன்று பெற்றான்' என்று கூறி நம்மைத் திடுக்கிட வைக்கிறார். ஒரு குழந்தை கண்ணில்லாமல் பிறந்தபின் தன் முயற்சியால் அல்லது தாய் தந்தையர் முயற்சியால் கண்களைப் பெற்றதுண்டா? இல்லை. இதுவரை அப்படி யாருக்கும் கண் உண்டாகவில்லை. பின் எப்படி நம் கவிஞர் அங்ஙனம் பாடுகிறார். இரண்டு கண்களுடன் பிறந்த மனிதன் தன் ஆராய்ச்சி வலிமையினால் இன்னும் சில கண்களைப் பெற்றுக் கொண்டான் என்கிறார். விழிகளும் முயன்று பெற்றான் என்பதில் உள்ள விழிகள் அறிவியல் கருவிகளான மைக்ரோஸ்கோப், டெலஸ்கோப், எக்ஸ்-ரே, சி.டி ஸ்கேன், போன்றவைகளைக் குறிக்கின்றன. உடலில் மறைந்துள்ள உறுப்புகளையும் குறைகளையும் ஊடுருவிப் பார்க்க உதவுகின்றன. மண்ணில் மறைந்துள்ளவைகளைக் காணவும் கருவிகள் இருக்கின்றன. நம் கண்களுக்குத் தெரியாத ஒன்றை நம் கண்களுக்குத் தெரிவிக்கும் இன்னொரு கருவியைக் கவிஞர் மிகவும் அழகாக முயன்று பெற்ற விழிகள் என்கிறார். சொல் விளையாட்டில் கவிஞர் மிக வல்லவர். பொருள் பின்னிக் கொண்டிருக்கும் சொல் விளையாட்டு அவருக்குப் பிடித்தமான ஒன்றாகும்.

*புதையலாய் இயற்கை தாங்கும்*
*வெறுக்கை ஊடுருவிக் காணும்*
*விழிகளும் முயன்று பெற்றான்*

*(மா.யா.பாகம்-2. பாடல்கள்: 76)*

என்று பாடி மகிழ்கிறார். மனித முயற்சியைப் பாராட்டுகிறார். இமயத்தை வென்றான் ஏழு கடல்களை வென்றான் நோயினை வென்றான் எனினும் தனக்குத்தானே தடைகள் விதித்துக்கொண்டு தடுமாறும் வாழ்க்கை உடையவனாகவே இருக்கின்றான். சாதியும், மதமும் என மனப்பேய்கள் அவனை இன்னும் மருட்டிக் கொண்டுதான் இருக்கின்றன. மனிதனின் இழிநிலை கண்டு,

*இயற்கையின் தடைகள் வென்றான்*
*இமயம்என் றுயர்ந்து நின்றான்*
*செயற்கையாய்த் தனது நெஞ்சின்*
*சிறுமைகள் படைத்த கோடி*
*மதில்கள் சிறைகள் மீறும்*
*வலிமையொன் றில்லான், என்ன*

*விதியடா தனக்குத் தானே*
*விலங்குகள் படைக்கும் மூடம்!*
*(மா.யா.பாகம்-2. பாடல்கள்: 102,103)*

என்று கடிந்து கொள்கிறார். எவ்வளவு கல்வி கற்றவனும் சாதியைத் தாண்ட மறுக்கிறான். மதத்தைப் பிடித்துக்கொண்டு மாய்கிறான். என்னடா மூடத்தனம்? மனிதன் தம்மை மலைகளும் பிரிப்பதில்லை, வனங்களும் தடுப்பதில்லை, அலைகடல் பிரிப்பதில்லை. அவன் தடை அவனே! வேறென்? என்று கேட்டு நெஞ்சொடிந்து போகிறார்.

மனித உடம்பு, அன்னமய கோசம், பிராண மய கோசம், மனோமய கோசம், விஞ்ஞான மய கோசம், ஆனந்தமய கோசம் என்னும் ஐந்து கோசங்களால் ஆனது என்பர். இக்கோசங்கள் ஒரே மையத்தை உடைய பொது மைய வட்டங்கள் போன்று உடலில் நிரலாக நின்று இயங்குபவை. இவற்றினுள் உயிர் தங்குகிறது. ஆன்மா என்று ஒன்று உறைகிறது. இது பரவலான நம்பிக்கை. உயிருள்ள எல்லாவற்றிற்கும் ஆன்மா உண்டு என்று கூறுகின்றனர். ஓரறிவு முதல் ஐந்தறிவு வரை பெற்றுள்ள உயிர்களில் ஆன்மா விளக்கமடையத்தக்க நிலையில் இல்லை. மனித உடலில் உயிரில் உறையும் ஆன்மா விளக்கம் பெறத்தக்கது. மனிதனை மேன்மை அடையச் செய்வது. ஆன்ம 'உணர்வே' தன்னை அறிந்து இன்புறுதலாகும். நமது கவிஞர் மனித உடலில் உறைவது போன்றதொரு ஆன்மா அறிவியல் ஆராய்ச்சி கலைகளுக்கும் உண்டு என்று கூறி நம் கவனத்தை ஈர்க்கிறார். 'கலைகளின் அரசி' கணிதம் என்றும், ஆராய்ச்சியாளரின் கைவிளக்கு கணிதம் என்றும் கூறுகிறார்.

*........ இயற்கை அன்னை*
*எண்களின் மொழியில் தோன்றும்*
*இயல்பினள், கணிதம் தேடும்*
*உண்மையின் பாதை, ஆய்வில்*
*ஒளி செயும் தீபம்............ கணிதம்*
*(மா.யா.பாகம்-2. பாடல்:185)*

கணிதம் என்ற ஒன்று இல்லாமல் ஆய்வுக் கதிர் எதுவும் தோன்றுவதில்லை. எனவே, அறிவியல் உலகின் ஆன்மா கணிதம் ஆகும். நம் கவிஞர் இதனை நன்கு கணித்திருக்கிறார்.

இரவில் வானவீதியில் எண்ணிலா விண்மீன்கள் மின்னுகின்றன. பகலில் கதிரவன் ஒளிபாய்ச்சுகிறான். வானில் உலாவரும் எண்ணற்ற மின்மினிகளுக்கு எண்ணெய் யார் ஊற்றுகிறார்கள்? திரியிடுவது யார்? கவிஞரே தம் அழகான கவிதைகளில் பதில் கூறுகிறார்.

*தொலைவுகள் கடந்து நிற்கும்*
*தாரகைக் குழுமம், வானச்*

*சமுத்திரம் தனில்மி தக்கும்*
*திரியிலா, எண்ணெய் இல்லாத*
*தீபங்கள், காலமெல்லாம்*
*எரிகின்ற அமர தீபம்*

*(மா.யா.பாகம்-2. பாடல்கள்: 460,461)*

திரியில்லாத தீபம், எண்ணெய் இல்லாத் தீபம் என்ற தொடர்கள் உவமையழகு பொலிய விளங்குகின்றன. இரவில் ஒளிரும் நிலவின் நலத்தினைக் கவிஞர் வரிகளில் கண்டு மகிழ்வோம். கலைகளின் அமர ஊற்றாய், கற்பனை மலரும் காடாய், இளமையின் காதல் வாழ்வில் இணை பிரியாத நட்பாய், கவிதையில் கருவில் ஒன்று காதலர் பிரிவில், இந்தப் புவியினில் பொற்பு என்றுள்ள பொருண்மைகள் அனைத்திலுள்ளும் ஒன்றியே நின்ற விந்தை ஒளி செயும் மதியம்! நம் நெஞ்சத் திரையில் என்றும் நிழலாடும் இம்மதியம். கோடிகள் என்பன குறைந்த எண்களே எனும் அளவிற்கு நிறைந்திருக்கும் தாரகைகளும், பால்வெளிக் கூட்டங்களும், எல்லை என்பதே தெரியாது, விரியும் நீள் வெளியும் உயிர்கள் யாவற்றிலும் மேலானவனுமான மனிதனும் நிறைந்த இப்பிரபஞ்சம் ஆதி அறியாதது, அந்தமும் அறியாதது. இப்பெரிய பிரபஞ்சம் பண் தவறாத பாடல் போல, பதம் தவறாத நாட்டியம் போல ஏதோ ஒரு சக்தியால் இயங்கி வருகிறது. இது அனைவரும் ஏற்கும் ஓர் உண்மை. இதுவரை கருத்துவேறுபாடு இல்லை. இந்த இயக்கம் இயற்கையின் ஆற்றல்வழி தானாக நடைபெறுகிறதா அல்லது சிந்தித்துச் செயல்படும் ஓர் ஆற்றல், அதை இயக்குகிறதா என்பதுதான் கேள்வி. இதை எளிய இனிய தமிழில்,

*ஊமையாய் அமைந்த ஒன்றோ?*
*உள்ளம் ஒன்றிற்கும் உண்டோ?*

*(மா.யா.பாகம்-3. பாடல்:10)*

என வேரும் அடிமரமும் விழுதும் கிளைகளுமாக விரிந்து நிற்கும் ஆலமரம் ஒரு சிறுவிதைக்குள் இருப்பதுபோல் விசுவத்தை இரண்டுவரி எனும் வாமன வடிவத்தில் ஒரு கேள்வியாக முன் வைக்கிறார். இந்த அற்புதம் குலோத்துங்கன் கவிதைகளுக்கு மட்டுமே உரியது.

## மனிதமும் மதமும்

இந்து சமயம் அல்லது இந்து தர்மம் பொதுவாக மதம் எனும் வரம்புக்குள் வருவதில்லை. தனித்த ஒருவரை முதல்வர் என்று கூறும் மரபு இல்லை. முனிவரும் முன்னவரும் கலந்த ஞானச் சங்கமமே இந்து தர்மம் அல்லது இந்து மார்க்கம் ஆகும். கவிஞர் மரபு தேடின் கங்கையும் பொன்னி ஆறும் கலந்த கடல் பரப்பு என இந்து சமயத்திற்கு இதுவரை காணாத புதுவிளக்கம் தருகிறார். அர்த்தமுள்ள இந்து மதம் இவ்விளக்கத்தால் மேலும் பொலிவு பெறுகிறது. இந்து சமயம்

அர்த்தமுள்ளது எனப் பலரும் போற்றுகின்றனர். அர்த்தமுள்ளதில் வகுக்கப்பட்டுள்ள வருண பேதங்களும், சடங்குகளும் சம்பிரதாயங்களும் ஏழை எளிய மக்களை வாட்டி வதைக்கும் சாபக்கேடாக இருக்கின்றன. எத்தனை கங்கையில் மூழ்கினாலும், எத்தனை காவிரியில் மூழ்கினாலும் அந்த அவலம் போகும் வழி தெரியவில்லை. இது நீங்காத பிணியென நிற்கும் ஒரு சாபக்கேடு.

*செய்யினில் களைபோல் சேகத்*
*தேக்கினில் கறையான் போல*
*மெய்யினில் இருமி போல*
*விறலினைக் குறைக்கும் விதிக்*
*களங்கத்தைக் கழுவக் கோடி*
*கங்கையே தேவை. மாநிதர்*
*உளங்களில் படிந்த மாசு*
*ஊழியும் அகல்வதில்லை*

*(மா.யா.பாகம்-3. பாடல்கள்:513,514)*

இனி எப்போது இந்து மதம் உண்மையிலேயே அர்த்தமுள்ள இந்து மதமாக மாறும்? ஆன்மீகத் துறவிகட்குள் அதிசயமனிதன் எனத் தொடங்கி, அயர்ச்சியின் நிழலும் தீண்டா ஆற்றுதல் உருவமானோன்! என முடியும் பாடல்கள் வரை இராமானுசரின் குணச்சித்திரமாகக் கவிஞரால் வார்க்கப்பட்டுள்ளன. கவிநலமும், தொடர்நலமும் துள்ளுகின்றன. கவிதை வடிவில் இராமானுசரின் முற்போக்குச் சிந்தனைகளுக்கு இவ்வளவு கம்பீரமாக யாரும் முடிசூட்டிப் பார்க்கவில்லை. திருக்கோட்டியூர் நம்பியிடம் இராமானுசர் எட்டெழுத்து மந்திர உபதேசம் பெற அணுகினார். அவர் பிறகு வா எனப் பலமுறை கூறி அனுப்பி விட்டார். 18 முறைகள் சென்றாராம். இறுதியாக “ஓம் நமோ நாராயணாய” என்ற எட்டெழுத்து மந்திரத்தை நம்பி உபதேசித்தார். இம்மந்திரம் இரகசியமாய் வைக்கத் தக்கது என்றும் மீறி யாரிடமாவது கூறினால் நரகம் கிடைக்கும் என்றும் கூறி நம்பி விடைகொடுத்தார். இராமானுசரோ நம்பியின் இல்லம் துறந்து நேரே கோவிலுக்குச் சென்று கோபுரத்தின் மீது ஏறி மக்களைக் கூவி அழைத்து, தாம் கற்றதை எடுத்துரைத்து, கருத்தையும் விளக்கிச் சொன்னார். இராமானுசர் ஆன்மீக உலகு கண்ட மாபெரும் புரட்சியாளர் மட்டுமல்லர்; தியாகியுமாவார்.

*உடல் உயிர் இரண்டினோடும்*
*ஒன்றி நின்றியக்கும் சக்தி*
*கடவுள் என்று எத்திராசர்*
*கண்டது விசிட்டாத் வைதம்*

*(மா.யா.பாகம்-3. பாடல்:458)*

என்கிறார் கவிஞர். இராமானுசரின் விசிட்டாத்வைதம் விளக்கமாகச் சொன்னாலும் விளங்காத தத்துவம் என்பார். அத்தத்துவத்தைப் படிப்பவர்

மகிழத்தக்க எளிமையோடு கவிஞர் எளிய கவிதையில் நான்கு வரிகளில் விளக்குவது அவருடைய தெளிவையும் தமிழைக் கையாளும் திறனையும் காட்டுகிறது.

சமணச் சான்றோர்கள் அன்பாலும் அறிவுத்திறனாலும் மேம்பட்டவர்கள். எனினும் அவர்கள் அனைத்தும் கற்றதாகவோ, அறிந்ததாகவோ கர்வம் கொள்வதில்லை. தமது பாதையே சரியென்று முரட்டுத்தனமான பிடிவாதம் உடையவர்களும் அல்லர். சமணர்களைப் பற்றிப் பேசும்போது கவிஞர்,

*முழுவதும் ஆய்ந்தோம், ஒன்றை*
*முற்றிலும் பார்த்தோம், சற்றும்*
*பழுதறக் கற்றோம் என்னும்*
*பார்வையர் சமணர் அல்லர்*

*(மா.யா.பாகம்-3. பாடல்:217)*

என்று சமணத்தின் தெளிந்த சிந்தனை மரபை அறிமுகப்படுத்துகிறார். சமயவாதிகளில் பெரும்பாலோர் தாம் கண்ட பாதைதான் சரியென்னும் அணுகுமுறை உடையவர்கள். சமணர்கள் இதற்கு விதிவிலக்கு. இந்த உண்மை பலரும் அறியாத ஒன்று.

மனித சமுதாயம், தன் இனமே அங்கும் இங்கும் தாங்கொணாக் கொடுமைக்கட்கு ஆளானபொழுது, கொதித்து எழாமல், மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்ததற்கு, சகித்துக் கொண்டதற்கு வரலாற்றில் சான்றுகள் அன்றும் உண்டு; இன்றும் உண்டு. ஈழத் தமிழர்கள்; இன்றைய யூதர்கள். ஒரு நீண்ட சோக வரலாற்றில் உச்சமாக ஐரோப்பாவில் 60இலட்சம் யூதர்கள்-மழலையும் தாயும், மகனும் தந்தையும், இளைஞரும் முதியவரும் கூட்டம் கூட்டமாக நச்சுப் புகையில் மூழ்கடித்துக் கொல்லப்பட்ட கொடுமையை எண்ணிய கவிஞர் இவற்றையெல்லாம் சகித்துக் கொண்டு நின்ற இறைவனைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகிறார்.

*என்னடா இறைவன்! எல்லாம்*
*இயற்றியோன் காப்போன் என்று*
*சொன்னவன் தர்மம் மாண்டு*
*சுருண்டதற் கென்ன சொல்வான்?*

*(மா.யா.பாகம்-3. பாடல்:701)*

என்று தன் நெஞ்சக் குமுறலைக் கொட்டித் தீர்க்கிறார். யூதவியம் எனும் அத்தியாயம் கண்ணீர்க் காவியம் ஆகும். தமிழ் மொழியின் வளம் கவிஞரின் உணர்ச்சி வெளிப்பாட்டுக்கு வயல் மேல் பெய்யும் மழை போல உதவுகிறது.

பறவைகள் ஓரிடத்தில் ஒரு பருவத்தில் கூடுதல் போலவும், உறவினர் மணவிழாவிற்கு வருதல் போலவும், ஏசுவிடம் மக்கள் திரண்டனர். அவ்வாறு சூழ்ந்தவர்களில் மிக நெருக்கமாகப் பழகியவர்களில் 12 பேரைத் தம் சீடர்களாய்த் தேர்ந்தெடுத்தார். அவர்களுள் யூதாசும் ஒருவன். அவன் சீடராவதற்கு உரிய குணநலன்கள் பெறாதவன் என்பதை ஏசுபெருமானாலும் முதலில் உணர முடியவில்லை. ஒரு பணிக்கு ஒருவரைத் தேர்ந்தெடுப்பது எளிய பணி அன்று. எல்லா வகையிலும் ஆராய்ந்து தேர்ந்து எடுக்கப்பட்டவரும், உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று செய்பவராக அமைந்து விடுகிறார். செய்யும் செயலால் வேறுபட்டு விடுகின்றனர். இதனைத் திருவள்ளுவர்,

*எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்*
*வேறாகும் மாந்தர் பலர்* (குறள் 514)

என்று கூறுவார். இப்பணியில் சற்று இடறுவது மனிதர்க்குத்தான் நேரும் என்பதில்லை. இறைவனுக்கும் நேரும் என்கிறார் கவிஞர்.

*ஆழ்ந்தசிந் தனைக்குப் பின்னர்*
*ஆய்ந்தபின் அறிந்த பின்னர்*
*தேர்ந்தனர் பன்னி ரண்டு*
*சீடர்கள்: கர்த்தர் தாமே*
*ஓர்ந்ததில் ஒன்று பாளை*
*உம்பர்க்கும் தவ றியற்கை*
*(மா.யா.பாகம்-3. பாடல்கள்:802,803)*

இது ஒரு துணிச்சலான புதுமையான பார்வை. To err is human அதாவது, தவறுவது மனிதற்கியற்கை என்றனர் முன்னோர்கள். குலோத்துங்கன், உம்பர்க்கும் தவறியற்கை (Even the divine may err) என்ற புதிய மறைமொழியைக் கூறுகிறார். தெளிவும் துணிவும் பாராட்டத்தக்கன. உம்பர்க்கும் தவறியற்கை என்பது இலக்கிய உலகில் பெரிதும் கொண்டாடப்பட வேண்டிய அமுத மொழியாகும். ஆற்றல் பொதிந்த மொழியாகும். இக்கவிஞர் மொழியருள் பெற்றவர் போலும்! சொல் கைதவமாகிறது; பொருள் செய்தவமாகிறது. கொடுமனம் கொண்ட யூதாஸ் ஏசுவை அடையாளம் காட்ட அவரை அணுகி முத்தமிடுகிறான். புன்னகையும் முத்தமும் உடலையும் உயிரையும் புனிதப்படுத்தும் செயல்கள். அதையும் ஒரு கெடுமதியாளன் காட்டிக் கொடுப்பதற்குப் பயன்படுத்துகிறான் என்பதைக் கவிஞர் தன்நடையில் பாடுவது அருமையினும் அருமை.

*முத்தம் ஓர் புனிதம், அன்பு*
*முகிழ்ப்பதன் காட்சி, காதல்*
*பித்தர்தம் கவிதை, பொங்கும்*
*பிரியத்தின் மொழிபெ யர்ப்பு*

*கன்னத்தின் குளிர்ந்த முத்தம்*
*கரந்துள கருமம் ஒன்றின்*
*சின்னமாய், ஏசு விற்குச்*
*சிலுவையாய் முடிந்த தம்மா*
*(மா.யா.பாகம்-3. பாடல்கள்:836,837)*

என்பது எலும்பையும் நெகிழ வைக்கும் முரண். பிரியத்தின் மொழிபெயர்ப்பு துரோகத்தின் முத்திரையானது எத்துணை அவலம்!

பௌத்த சமய இலக்கியங்கள் கடல் போன்றவை. புத்தர் காலம் தாண்டி நீண்ட இடைவெளிக்குப் பின்னர் அவர் வழி நின்றவர்கள் எழுதியவை பௌத்த சமய இலக்கியங்கள். பலநாடுகளில் பல மொழிகளில் எண்ணிறந்த அறிஞர்களின் விளக்கங்கள் கொண்டவை. இவையனைத்தையும் எண்ணிப் பார்த்த கவிஞர். அவற்றைக் குறிப்பிட்டுப் பேசிய கவிஞர், இறுதியாக இரண்டு அடிகளில் தமது முடிவைப் பதிவு செய்கிறார்.

கூட்டியும் கழித்தும் பார்க்கின்
குவலயத் துயரம் தீர்க்கும்
தேட்டமே பௌத்தம், புத்தர்
தேடிய வீடும் அ∴தே (மா.யா.பாகம்-3. பாடல்:288)

சிறிதும் மறுப்பதற்கியலாத பௌத்த சமயத்தின் மறைமொழி. கவிஞரின் நிறைமொழி. மெய்யறிவின் தீபம்.

அறிவு ஒரு சக்தி வாய்ந்த கருவி. Knowledge is power என்பார் பிரான்சிஸ் பேகன். அது ஆக்கவும் பயன்படும்; அழிக்கவும் பயன்படும். அறிவை ஆக்கப் பணிக்கே பயன்படுத்துவதற்கு இன்னொரு கூடுதல் பரிமாணம் தேவை. தலைசிறந்த தத்துவ அறிஞரான பெர்ட்ரன்ட் ரசலின் கருத்து பின்வருமாறு: It follows that unless men increase in wisdom as much as in knowledge, increase of knowledge will be increase of sorrow. மெய்யறிவின் பரிமாணம் பற்றிச் சிந்திப்பது நல்லது. ஒரு கருவியைப் படைக்கவும், அதைப் பயன்படுத்துவதன் நன்மை, தீமையை அறியவும் அறிவு (Knowledge) உதவுகிறது. ஆனால் நல்லதுக்குத்தான் அதைப் பயன்படுத்த வேண்டும். தனிப்பட்ட முறையில் தீய செயலுக்குப் பயன்படுத்துவது நமக்கு அப்பொழுது நன்மை பயப்பதாக இருந்தால்கூட அதைத் தவிர்க்க வேண்டும் என ஆற்றுப்படுத்த அறிவு மட்டும் போதாது. அங்குதான் உணர்வு வருகிறது. அங்குதான் மெய்யறிவு வருகிறது. மனிதனுடைய வாழ்வில் செயலில் அறிவின் ஆட்சி எல்லா மட்டத்திலும் இருக்கிறது.

*சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ*
*நன்றின்பால் உய்ப்பது அறிவு (குறள் 422)*

*அறிவினான் ஆகுவதுண்டோ, பிறிதின் நோய்*
*தந்நோய் போல் போற்றாக் கடை (குறள் 15)*

என்பார் வள்ளுவர். நன்றின்பால் உய்க்கும் பண்பு கொண்ட அறிவை, பிறிதின் நோய் தன் நோய் போலப் போற்ற உதவும் அணுகுமுறையைத் தனி மனிதர் அளவில் மட்டுமின்றிச் சமுதாய அளவிலும் உருவாக்க வேண்டும்; வளர்க்க வேண்டும். சமுதாய நலன் என்னும் விழுமியத்தை, தன்னலத்தைத் துறந்தும் சமுதாய நலன் கருதும் உணர்வைக் குறிப்பிட ஒரு சொல் வேண்டும். அதைத் தனிமனித அளவில் மெய்யறிவு என்கிறோம். அதையே ஒரு சமுதாயத்தின் தத்துவமாக்கும் பொழுது ஆன்மீகம் எனலாம் என்ற கருத்தைக் கவிஞர் மானுட யாத்திரையில் முன் வைத்துள்ளார்.

ஆன்மீகம் என்பது ஆன்மா தொடர்பானது மட்டுமன்று. ஆத்மன் என்ற வடசொல்லிலிருந்து வந்தது ஆன்மா. ஆத்மன் என்பதற்கு முதலில் மூச்சு என்பது பொருள். பின்னர் முக்கியமானது என்ற பொருளில் குறிப்பாக மனிதனுடைய உயிர், ஆத்மா என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டது. எனவே, சமுதாய நலனுக்கு முக்கியமான, உயிர் போன்ற அணுகுமுறையை, தத்துவச் சிந்தனையை ஆன்மீகச் சிந்தனை என்கிறார் ஞானம் தழைத்துப் பொலியும் கவிஞர் குலோத்துங்கன். மானுட யாத்திரை என்னும் அருமையான காவியத்தின் அடிநாதம் தமிழும் தமிழர் நலனும்தான் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல் விளங்கித் தோன்றுகின்றது. சமுதாயம், அரசியல், அறிவியல், ஆன்மீகம் எனத் தலைப்புக் கேற்றவாறு வித்தகம் காட்டிப் பாடியுள்ளார். வித்தகம் தமிழ்ப்பயிர் விளைந்து பயன்கொடுக்க வேண்டுமே என்ற ஆசையை உள்ளடக்கியதாகவே காப்பியத்தின் நெடுகிலும் காணப்படுகிறது. அந்த ஆசையே யாத்திரைக் காப்பியத்தின் மணியாய், மணியின் ஒளியாய், மணி புனைந்த அணியாய்ப் பளிச்சிடுகிறது. நான் தமிழன், எனது நாடு தமிழ்நாடு, எனது மொழி தமிழ்மொழி, தமிழ்மொழி பேசுபவர் அனைவரும் என் உடன்பிறப்புகள், என் உறவினர், என் சமூகம் தமிழ்ச் சமூகம், என் சாதி தமிழ்ச் சாதி, தமிழர் நலமே என் மதம், என் கடமை தமிழ்நாட்டு ஊழியம், என் தெய்வம் தமிழணங்கு, என் மந்திரம் தமிழ், என் தோத்திரம் தமிழ் என்று அல்லும் பகலும் ஒரே சிந்தனையில் உள்ளவர் கவிஞர். தமிழை அலைகடலிலே தோன்றிய அமுதம் போன்று பருகுகிறார்; ஆனந்தவாரியில் ஆழ்கிறார். எங்கும் தமிழர் எதிலும் தமிழர் என்ற முழக்கத்தில், உணர்வில் தன்னைப் பறிகொடுத்தவராகிறார். ஆனந்தமாய் அறிவாய் ஒளிர்கிறார். குலோத்துங்கன் என்ற தமிழ்க் கவிஞரைக் குழந்தைசாமி என்ற உலகம் சுற்றும் பொறியியல் விஞ்ஞானி ஊட்டம் தந்து வளர்க்கிறார். அதன் பயனாகக் கவிஞரின் பார்வை அகலப் பார்வையாக (Broad Vision) மனவீச்சு (Mental Sweep) உலகந்தழுவியதாக வளர்கிறது. அதே கொஞ்சு தமிழ்தான் மரபு பிறழாத கவிதைதான். ஆனால் என்ன வேற்றுமை? தான், தன்மொழி, தன் நாகரிகம், தன் பண்பாடு என்பதில் தொடங்கிய கவிஞரின் பார்வை உலகந்தழுவியதாக மாறுகிறது. தன் நாடும்,

மொழியும், தழைக்க வேண்டும் என்று கனவு கண்ட கவிஞர், காட்சி விரிவடைந்தவுடன் தான் என்று தனியே ஒன்று இல்லை என்பதையும் உலகம் முழுவதும் விரிந்து நிற்பதுதான், தான் என்கிறார்.

*தரையொடும் மலையொடும் தண்புனல் கடலொடும்*
*வரைகடந்து எழும் விரி வானொடும்......... என் உயிர்*
*தனியொரு உடம்பைச் சார்ந்தது அன்று, தான்*
*நனிசிறந்து உயர்ந்து, ஞாலம் முழுமையும்*
*பரவி நிற்பது, பரப்பின் தாக்கமும்*
*பரவி நிற்பது விண்ணின் வெளியின்*
*தாரகைக் கூட்டமும் தண்மதி, பொழுதும் எம்*
*ஊரவர், தூரத்து உறவினர் ஆவர் (கு.க.பக்கம்:71)*

சங்கப் புலவன், யாவரும் கேளிர் என்ற உயர்திணையால் மக்கட் கூட்டத்தை மட்டுமே கருதினான். வளர்ச்சியடைந்த விஞ்ஞானக் கவிஞன் தாரகைக் கூட்டம், தண்மதி, பொழுது என்பவற்றுடனும் உறவு கொள்கிறான். மானுடம் பாடும் இக்கவிஞர், தம் கவிதைத் தொகுதிகள் பலவற்றிலும் மனிதநேயம் பற்றியும் மனிதன் மேன்மேலும் முன்னேற வேண்டும் என்பது பற்றியும் நன்கு பாடுகிறான். அதனைத் தன் மேல் ஏற்றித் தன்னம்பிக்கையுடன் பாடுவதால், படிக்கும் ஒவ்வொருவருக்கும் மன எழுச்சி ஏற்படுகிறது. தற்காலத் தமிழ் இலக்கிய உலகம் இந்தக் கவிஞர் குரலைக் கேட்கத் தவறக்கூடாது. இது தமிழின் எதிர்கால உயர்வுக்கான குரலாகும். கவிதைக் கனவாகும். அந்த வகையில் குலோத்துங்கன் எண்ணிக்கையில் தனி மரமாக ஆனால் சிந்தனையில் ஒரு தோப்பாக நிற்கின்றார் என்றே கூற வேண்டும்.

சென்ற நூற்றாண்டில் சிகாகோவில் நடந்த சர்வமதச் சபையில் சுவாமி விவேகானந்தர் ஒரு பேருண்மையை விளக்கினார். The Future of humanity depends upon the synthesis of science and spirituality" என்று கூறினார். இந்த இணைப்பு, சாத்தியம் என்பதைக் குன்றக்குடி அடிகளார் தம் வாழ்க்கையின் மூலம் எடுத்துக் காட்டியுள்ளார் என்பதை விளக்கும் வகையில்,

"அறிவியலும் ஆன்மீகமும் இணைந்து நிற்கும்
அற்புதத்தின் தந்தை இவன்"

என்று குலோத்துங்கன் அடிகளாரைப் புகழ்ந்துள்ளார். தமிழ் மக்கள் விழிப்புற வேண்டும். அவர்கள் கல்வி யுகத்தில் காலடிவைத்துத் தடம் பதித்து, முன்னேற வேண்டும் என்றும் வேற்றுமை வளர்ப்பவர்களை விலக்கி, ஒற்றுமை கண்டு, உயர்ந்த தலைமை ஏற்று எல்லாத் துறைகளிலும் தேவையான மாற்றங்களை வரவேற்று உயர்வடைய வேண்டும் என்று விழையும் இம் 'மானுட யாத்திரை' ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தும் என்று நம்புகிறோம்.

# 7. ஏகத்தின் இரு செம்பாதிகள்

அறிவும், அறிவியலும் வளர்ந்த கடந்த நூற்றாண்டில்தான் பெண்ணியம் என்ற இயக்கம் தலைதூக்கி வளரத் தொடங்கியது. இது ஆணினத்திற்கு எதிரானதோ, ஆணினத்தை ஒதுக்கியதோ அன்று. அதற்கு மாறாக ஆணும், பெண்ணும் சம உரிமையுடன் இணைந்து வாழும் கோட்பாடாகும். பெண்ணுக்கான உரிமையும் கடமையும் கலந்து இயங்கும் பண்பே பெண்ணியம் எனலாம். பெண் நலன் கருதிய எல்லா முயற்சிகளும் செயற்பாடுகளும் பெண்ணியத்தில் அடங்கும். பெண்மைக்குக் கிடைத்த ஏற்றம் உலகத்தில் பெண்ணிய இயக்கத்தினர் கூட வியக்கத் தகுந்த ஒன்று. ஆணும், பெண்ணும் ஏகத்தின் இரு செம்பாதிகள். இரண்டிற்கும் இயற்கை வேறுவேறாம். இரண்டுமே மூலம். பெண்கள் நகல்கள் அல்லர். இருவரும் இணைந்திடாமல் எதிலுமே முழுமையில்லை. வேறு வேறானாலும் ஏகத்திற்கு இரண்டும் தேவை. ஆண் மேலானவன். பெண் கீழானவள் என்று எண்ணுவது மடமையாகும்.

பெண்களின் அவலநிலைகளை, கீழ்நிலைகளை ஆராய்ந்து அதனை மாற்றுவதற்கு மேற்கொள்ளும் வழிமுறையே பெண்ணியம். இது அறிவுத் துறை சார்ந்த, பெண் நலன் சார்ந்த ஒரு சமூக அறிவியலாகும். பெண்ணியத்திற்குப் பெண்ணிலைவாதம், பெண்ணிலை ஏற்பு, மகளிரியல், பெண் நலக்கொள்கை எனப் பலவாறான சொற்களைக் கூறலாம். இப்பெண்ணியம் வள்ளுவப் பெருந்தகை தேர்ந்து கூறிய 'வாழ்க்கைத் துணை நலம்' என்ற சொற்களில் அடங்கிவிடும். இதுபற்றிப் பெண்ணியலாளர் ச.முத்துச்சிதம்பரம் அவர்கள் ஒரு விளக்கமளிக்கிறார்: பெண்கள் சமூகத்திலும் அலுவலகங்களிலும் வீட்டினுள்ளேயும் நசுக்கப்படுவதைப் பற்றிய விழிப்புணர்ச்சியும் அந்நிலையை மாற்றியமைக்க ஆண்களும் பெண்களும் ஒருவரையொருவர் புரிந்து கொண்டு செய்யும் முயற்சியுமே பெண்ணியமாகும் என்கிறார்.

உலகில் மானிடராய்ப் பிறந்தோர் வாழ்க்கையின் பயனை முழுமையாகத் துய்ப்பதற்குரிய நெறி இல்லறமே ஆகும். ஆணும், பெண்ணும் கணவனும், மனைவியும் என உரிமை பூண்டு நடத்தும் அறவாழ்வே இல்வாழ்க்கை. இல்லறம் நல்லறமாகும். நல்லறம் செழுமையாகவும், சிறப்பாகவும் சீர்பெறக் கணவன் மனைவி இருவருமே

ஒழுக்கம் உள்ளவர்களாகவும், உயர்ந்த பண்புகளின் உறைவிடமாகவும் இருக்க வேண்டும். அவர்கள் 'ஈருடல் ஓர் உயிர்' எனக் கருதி நல்லறம் நடத்த வேண்டும். இல்லறத்தேரின் அச்சாணி மனைவி. அச்சாணி பழுதானால் இல்லறத்தேர் குடைசாய்ந்துவிடும். இல்லறத்தின் உயிரோட்டம், ஒளிவிளக்கு எல்லாமே பெண்தான். நம் நாட்டில் அறியாமை, மூடநம்பிக்கை, தீவிரக் கடவுள் பக்தி போன்றவை பெண்களைச் சுய சிந்தனையற்றவர்களாகச் செய்துவிட்டன. இம்முட்டுக் கட்டைகள் பெண்கள் தங்கள் உரிமைகளை அறிந்து கொள்ளவும் உணர்ந்து கொள்ளவும் சக்தி அற்றவர்களாக்கியுள்ளன. பெண் அன்பு செய்பவள்; பலமற்றவள்; மென்மையானவள்; ஆணின் பாதுகாப்பில் திருப்தி அடைபவள் என்பதற்கெல்லாம் அறிவியல் அடிப்படையில்லை. பெண்மை, ஆண்மை என்பது பண்பாட்டு வழி ஏற்படுத்தப்பட்ட வெறும் புனைவுகளே. எனினும் நடைமுறையில் எல்லா நாட்டிலும் 'பெண்' என்பவள் ஆண் துணையைத் தேடிநிற்கும் ஒரு பலவீனப் படைப்பாகவே கருதப்படுகிறாள். அவள் ஆணின் சொத்து என்றே ஆணுலகம் இன்றுவரை கருதிவருகிறது என்பது வருந்தத்தக்க ஒன்றாகும்.

இன்றைய காலக்கட்டத்தில் பெண்மக்கட்குப் பல உரிமைகள் கிடைத்திருக்கின்றன. இதை ஆணினம் மறுக்க இயலாது. எடுத்துக்காட்டாகக் கல்வி உரிமை, ஆண்களோடு சரிசமமாக நின்று பணிபுரியும் உரிமை, நாடாளும் உரிமை என்ற பல உரிமைகள் கிடைத்துள்ளன. உரிமை பெற்றுத் தலைநிமிர்ந்து வாழும் பெண்மை வாழ்கவென்றும் வெல்க வென்றும் கூத்தாடுவார் பாரதியார். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் பெண்கள் பால் மிகுந்த மதிப்பும் அளவு கடந்த அன்பும் கொண்டவராக,

*மங்கையராய்ப் பிறப்பதற்கே — நல்ல*
*மாதவம் செய்திட வேண்டுமம்மா*

என்று போற்றிப் பாடுவார். பாரதிதாசன் பாரதப் பெண்கள் மீது எல்லையிலா நம்பிக்கை உடையவர். மூடப் பழக்க வழக்கங்களின் முடை நாற்றத்தை மாற்றி, மணம் வீசச் செய்யும் கற்பூரம் பெண் என்பார். அவர் கடவுள் நம்பிக்கையில் கருத்தழியும் பெண் குலத்தைக் கரை சேர்க்க வந்தவர். பகுத்தறிவுப் பெட்டகம். 'எல்லாம் கடவுள் செயல் என்று தொடை நடுங்கும் பொல்லாங்கு தீர்த்துப் புதுமை செய வந்தவளே பெண்' என்பார் பாரதிதாசன். நடைமுறை வாழ்க்கையில் பெண்கள் இந்த அளவு உரிமை பெற்றுள்ளனர் என்றால் அப்பெருமையனைத்தும் பெண்ணியச் சிந்தனையாளர்களையே சாரும். இதனையே குலோத்துங்கன் அவர்களும்,

*.......படைப்பின் மாண்பெலாம்*
*பெண் எனும் உருப்பெற்ற விந்தை*

என்று பெண்ணைப் பெருமைப் படுத்துகிறார்.

தொல்காப்பியர் காலத்திற்குப் பின் சங்க காலத்தில் பெண்கள் முதன்மைப் படுத்தப்பட்டுள்ளனர். ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் உரிமை வாழ்வு பெற்றிருந்தனர். குறுந்தொகையின் 'யாயும் ஞாயும் யாராகியரோ' பாடல்(40) தனக்குரிய கணவனைத்(40) தேர்ந்தெடுப்பதில் பெண்களுக்கு இருந்த உரிமையைக் காட்டுகிறது. களவியல் இலக்கண அமைப்பும், குறிஞ்சித் திணைப்பாடல்களும் தமக்குரிய மணவாழ்வை முடிவு செய்வதில் சங்ககாலப் பெண்களுக்கு இருந்த உரிமையைத் தெளிவுபடுத்துகின்றன. சங்ககாலப் பெண்பாற் புலவர்களான ஔவையார், நச்செள்ளையார், வெள்ளிவீதியார், முடத்தாமக் கண்ணியார் ஆகியோரின் படைப்புகள், பெண்கள் சங்ககாலத்தில் சிறந்த கல்வியறிவும் முதன்மையும் பெற்றிருந்தனர் என்பதைக் காட்டுகின்றன.

தலைமகன், தலைவன், கிழவோன் என்ற சொற்களுக்குச் சமமானவைகளாகத் தலைமகள், தலைவி, கிழத்தி என்று சுட்டப்பட்டிருக்கின்றன. கணவனை முன்னிறுத்தி மனைவியைச் சுட்டிக் காட்டும் பிற்கால மரபிற்கு மாறாக, மனைவியை முன்னிறுத்திக் கணவன் சுட்டப்பட்டமை எண்ணத் தக்கது. புறநானூற்றில் "செயிர்தீர் கற்பின் சேயிழை கணவன்" என்றும் பதிற்றுப்பத்தில் "சேணாறு நறுநுதல் சேயிழை கணவ" என்றும், "புரையோள் கணவ" என்றும் பெண்களை முதன்மைப்படுத்தியுள்ளதைக் காண முடிகிறது. மனித நாகரிகத்தின் வரலாற்றில் அரசுகள் தோன்றுவதற்கு முன் ஆண் பெண் வேறுபாடின்றி மக்கள் குழுக்களாக வாழ்ந்த காலத்தில் பெண்ணே தலைமை பெற்று விளங்கினாள். போர், வேட்டையாடுதல், சேகரித்த உணவைப் பங்கிடுதல், குழந்தைகளைப் பெற்று வளர்த்தல் முதலிய அனைத்துச் சமூகப் பணிகளுக்கும் தாயே தலைமை ஏற்று நடத்தினாள்.

மற்றைய உயிர்களின் வளர்ப்புக்காலத்தை விட மனிதக் குழந்தையின் வளர்ப்புக்காலம் கூடுதல் ஆகும். சில வாரங்களில் பறவைக் குஞ்சு பறக்கக் கற்று விடுகிறது. சில நாட்களில் மீன் குஞ்சு நீந்தக் கற்றுவிடுகிறது. ஆயின் மனிதக் குழந்தை ஓரளவு நினைவு தெரிய 48 மாதங்கள் அதாவது நான்கு ஆண்டுகள் ஆகின்றன. இக்கால இடைவெளியில், குழந்தை தாயைவிட்டுப் பிரிவது இல்லை. சுமப்பதிலோ, ஈன்றெடுப்பதிலோ, வளர்ப்பதிலோ அந்தக் காலத்தில் தந்தைக்குப் பங்கு இல்லை. எனவே தாய்வழியாகவே மக்கள் அடையாளம் காட்டப்பெற்றனர். மனித வாழ்விற்கு ஓர் பிணைப்பினையும், சுவையினையும் தருகின்ற நதியாகப் பெண்ணினம் விளங்குகிறது. பண்டைய புலவர் ஒருவர் 'பெண் கொடியாக நடந்தது உலகு' என்று பாடியுள்ளதும் மனங்கொள்ளத் தக்கதாகும். கவிஞர் குலோத்துங்கனும் வாழ்வின் சுவையெல்லாம் ஏந்திய உருவம் என்று பெருமிதம் கொள்வார். பெண்களைப் பாடாத கவிஞர்கள் மிகச்சிலர். பெண்களைப் பாடாமல் கவியுள்ளம் நிறைவடையாது. பெண், ஆணுக்கு எதிர் பாலினமாக

இருப்பதால் இவ்வாறு பாடப்படும் பேறு பெறுகிறாள். சமுதாயச் சிந்தனைகளை முன்வைத்துள்ள வள்ளுவப் பெருந்தகையும் பெண் அழகைப் பாடுகிறார். திருக்குறளில் இன்பத்துப்பாலில்,

*அணங்குகொல் ஆய்மயில் கொல்லோ கனங்குழை*
*மாதர்கொல் மாலும்என் நெஞ்சு*

என்று தலைவன் ஒருவன் தலைவியின் அழகு நலன் கண்டு மயங்கிப் பாடுவதாக எழுதியுள்ளார். மானுடயினத்தினரைப் பாடிப் பீடுற்ற கவிஞர் குலோத்துங்கன் பெண்களின் அழகினை மட்டும் பாடி மகிழும் பிற கவிஞர்கள் போலன்றி, பெண்மையின் மேன்மையில் பெருமை கண்டவராகத் திகழ்கிறார். அதனால்தான்,

*சிற்பி வடித்ததில்லை*
*சித்திரங்கள் கண்டதில்லை*
*கற்பனையின் எல்லை*
*கடந்த எழில் உருவே* *(கு.க.பக்கம்:424)*

என்று கவிதையால் வியந்துள்ளார். மேலும், உலகனைத்தும் ஒருயிராய்ச் சுருங்கி உனதுருவம் கொண்டு வந்ததுவோ என்றும் கூறுகிறார். பெண்ணானவள் தன்னளவில் அழகுடையவள் மட்டுமன்று, வாழ்வின் சுவை அனைத்தையும், படைப்பின் மாண்பு அனைத்தையும், சுருக்கியும் செறிவுற்றும் உருவானவள் என்று கூறுவதிலிருந்து மற்றவர்களிடமிருந்து கவிஞர் வேறுபடுவதைக் காண முடிகிறது. தொடர்ந்து, பெண்ணை இறைவனுக்கும் மேலானவள் என்று பாராட்டி உரைக்கிறார்.

*ஈண்டுனக் குவமை தேடின்*
*இறைவனும் எளிய னம்மா!* *(கு.க.பக்கம்:பாடல்.431)*

கவிஞர் குலோத்துங்கன் தன் தாயை எண்ணியே இவ்விரண்டடிகளைப் பாடியிருப்பதாகக் கொண்டாலும் தவறில்லை. அவருடைய தாய் இறைவனுக்கும் மேம்பட்டவராகத் திகழ்ந்திருக்கிறார். கவிஞர் விரும்பியதைப் படித்து ஆளாக வேண்டும் என்பதற்காக அவர் தாய் செய்த அரும்பெரும் தியாகங்களை அவர் ஒரு நொடியும் மறப்பதில்லை என்பதை அவர் எழுத்துகளில் காணலாம்.

பெண்களின் இயலாமையைக் கண்டு கண்ணீர் வடிப்பதுண்டு கவிஞர்:

*மானுடத்திற் பாதியினர் முழுமை பெற்று*
*வளர்கின்ற மலர்கின்ற வாய்ப்பே இன்றி*
*ஊனுடலின் தேவைகளின் அளவில், ஆணின்*
*உணர்வுகளின் அடிப்படையில் உயிர் வளர்க்கும்*
*கொடுமையினும் கொடிய நிலை, ஒப்பு நோக்கிக்*
*கூறுமாறு செய்தியில்லை, உயர்க்குலங்கள்*

*படுதுயிர்கள் வரும் போகும் மாறும் மாறாப்*
*பழங்கதை நம் பெண்ணுலகப் பாவ மம்மா! (கு.க.பக்கம்:462)*

என்று பரிதவிக்கின்றார். இந்த இருபத்தோராம் நூற்றாண்டிலும், பெண்கள் சுதந்திரம் பெற்றதாகக் கருதப்படும் பகுதிகளில் கூடச் சமத்துவம் சுதந்திரம் என்ற கோட்பாடுகளின் உண்மையை அறியாது மேலெழுந்த வாரியாக,

*தங்கள் இயல்போடு*
*தரணியை ஆள்வதும்*
*எங்கள் உரிமையெனும்*
*ஏற்றம் விழையாமல்,*
*அறிவுத் துறையனைத்தும்*
*ஆதிக்கம் செய்கின்ற*
*நெறியில் மனத்தை*
*நிறுத்தாமல், சிந்தனையின்*
*நுட்பும், நுழைவுகளும்,*
*நூல்படைக்கும் மேதையெனும்*
*பெட்பும் நிறைந்ததெனும்*
*பெருமைகளை நாடாமல்......*
*.................................*
*சுதந்திரத்தை நெஞ்சத்தில்*
*துய்ப்பதுவே மானிடர்க்கு*
*இதந்தருவ தென்கின்ற*
*ஏற்றம் நினையாமல் (கு.க.பக்கங்கள்:459,460)*

வாழ்வது கண்டு நொந்து போகிறார் கவிஞர் குலோத்துங்கன்.

**ஆசைமனத்தால் அவலம்**

பெண்விடுதலையும் சமத்துவமும் ஆண்களிடம் கேட்டுப் பெறுவன அல்ல. ஆண்கள் இவை கொடுக்கப் பெண்கள் பெறுவதற்கு அவை ஆணுலகின் உடைமைகளும் அல்ல. பெண்கள் காலத்துக்கேற்ற அறிவாற்றலை வளர்த்துக் கொள்வார்களாயின் உரிமையும் சமத்துவமும் தாமே வரும். பெண்களின் பொருளாதார வலிமையே உரிமையைப் பெற்றுத் தரும் தாரக மந்திரம் என்பதை நம் பெண்ணினம் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். அதைவிடுத்துத் தோற்றத்திலும் நடை உடைகளிலும் ஆண்களோடு போட்டியிடும் ஆசைநிலைதான் பெண்ணுரிமை என்ற பெயரில் மேலோங்கி நிற்கிறது. இதனைக் கவிஞர் குலோத்துங்கன்,

*ஆண்களோடு போட்டியிட*
*அரிவையர்கள் பண்பாட்டின்*
*தூண்களென்றும் தம்பெருமை*

*தோற்க மனம் கொண்டுவிட்டார்*
*புகைபிடித்தல் கற்றார்கள்*
*புருடருக்கு நேராகச் சிகைமுடித்துக் கொண்டார்கள்*
*தெருவில் உலவுகையில்*
*மங்கையெனத் தோன்றுவதற்கு*
*மனமலராய், ஆடவர்போல்*
*அங்கிகளும் கால்நுழையும்,*
*ஆடைகளும் பூண்டார்கள்,*
*போதை, மயக்கப் பொருள்களிலே தம் உரிமைப்*
*பாதை இருப்பது போல்*
*பயணம் தொடர்ந்தார்கள் (கு.க.பக்கங்கள்: 460,461)*

என வேதனையுடன் வெளிப்படுத்துகிறார்.

உலகின் முதல் சுரண்டல் என்பது பெண்ணினத்தின் மீது ஆணினம் நடத்தத் தொடங்கியதுதான் என்பார் பிரெடரிக் ஏங்கல்ஸ். தந்தைவழிச் சமூகம் தலையெடுக்கத் தொடங்கிய நிமிடத்திலிருந்து பெண்ணின் மனவலிமையைத் துடைத்தெறிந்து அவளைப் பாலியல் பிண்டமாக்கி, சாத்திரம், கோத்திரம், புராணம், இதிகாசம், வேதங்கள், இலக்கணங்கள் என அனைத்து வழிகளிலும் பெண்ணினத்தைத் தன்னுணர்வின் நினைவெழவிடாமல் மழுங்கடித்துச் சுவைத்துத் துய்த்து வருகிறது ஆணினம். இந்த நிலையை, இந்தக் கசப்பான உண்மையை மாற்றினால்தான் சுதந்திரம் கிடைக்கும். சுதந்திரம், சமத்துவம் என்பன ஒரு மனநிலையின் கூறுகள், அறிவுநிலையின் அடையாளங்கள். அவை உள்ளத்தில் வளர்ந்து உயர்ந்து நிற்றல் வேண்டும் என்பதை எந்நிலையிலும் பெண்ணினம் மறந்துவிடக்கூடாது.

சென்ற நூற்றாண்டில் உலகம் முழுவதும் பெண்களின் நிலைபற்றிய ஆய்வுகளும், விவாதங்களும் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்தன. இனம், இடம், மொழி, சாதி அனைத்தையும் கடந்து உலகெங்கிலும், உள்ள பெண்கள் நலிந்த இனமாகவே இருந்தார்கள். முன்னேறி விட்டோம் என்று பறைசாற்றிக் கொள்ளும் நாடுகளுக்கும் இது பொருந்தும். பிறந்த உயிர் பெண்ணாயின், பல தேயங்களில் பெரு மூச்சே வரவேற்பாய்ப் பெறுவதுண்டு. பறப்பனவும் ஊர்வனவும்கூடத் தம்மைப் பயந்த குலம் தாழ்ந்ததெனப் பார்ப்பதில்லை. படிமைகளாய், நுகர்பொருளாய், ஆண்கள் வாழ்வில் பகடைகளாய் வாழ்ந்ததெலாம் பழமை அன்று; திருமணத்தில் விலை பேசும் சிறுமைகூடத் தீர்ந்ததில்லை. சீதனக்கொடுமையின்கீழ்ப் பொருமுவதும் பொங்குவதும் தீவாய்ப் பட்டுப் பொசுங்குவதும் தொடர்கதை ஆனது. சதி இன்னும் வாழ்கிறது. பெண்ணை வைத்துச் சந்தை பல நடக்கிறது. "விதவை" என்னும் விதி இன்னும் தொடர்கிறது. பெண்கள் வாழ்வில் விடுதலை என்றுரைப்பதெலாம் வேடமன்றோ? என்று குலோத்துங்கன் கேட்ட

கேள்விகள் உலகம் முழுவதும் இன்று கேட்கப்படுகின்றன. இதைப் பற்றிச் சிந்திக்க வேண்டியது அரசியல் நடத்துவோர், அறிஞர் பெருமக்கள், ஆய்வாளர்கள் கடமை - பொறுப்பு.

ஒரு பெண் முதலில் தன்னை நேசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். தன்னைப் போன்ற பிற பெண்களை அன்பால் அரவணைக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். ஆனால் பெண்கள் விடுதலை பெறுவதற்கு இப்போதும் ஆண்களைவிடப் பெண்களே பெரிதும் தடையாக உள்ளனர். அதற்குக் காரணம் இயற்கையிலேயே தமக்குள்ள உடலியல் வேறுபாடு காரணமாகத் தாங்கள் ஆண்களுக்குப் பணிவிடை செய்து வாழவே கடவுளால் படைக்கப்பட்டிருப்பதாகக் கருதுவது. இத்தவறான எண்ணத்தைத் தவிர்த்து மற்றொரு இனமாகிய ஆண் இனத்தையும் போற்றிக் காத்துக்கொள்ளும் போது உலகம் பெண்ணைப் போற்றும். யார் பெரியவர், யார் சிறியவர் என்ற எண்ணங்களின்றி இயற்கையின் முன் இருபாலரும் எளியவர் என்ற எண்ணம் வலிமை பெற்று, அகங்காரம் அடிபடும் போது ஒருவரை ஒருவர் மதிக்கத் தொடங்குவர். ஒவ்வொருவரும் தாமாகவே உயர்வர். பூரணத்தின் சரிபாதியாகப் பெண்கள் அமைவர். அதனாலன்றோ,

*பாவையினைத் தன்னுடலிற் பாதியாக்கும்*
*பகுத்தறிவால் பரமசிவன் வலிமை பெற்றான்*
*(கு.க.பக்கம்:472)*

என்று பாடுகின்றார் கவிஞர் குலோத்துங்கன். அன்று முதல் இன்று வரை குடும்பத்தில் ஆண்களுக்காக விட்டுக் கொடுப்பதில் அவமானம் அடைகிறோம் என்று பெண்கள் நினைப்பதில்லை. இப்பண்பினால் பெண்கள் உயர்ந்து நிற்கிறார்கள். பெண்களிடம் இயல்பாக இருக்கின்ற சிறப்புகளை ஆண்களால் தான் உணர்ந்து போற்ற முடியும். அவ்வாறு உணர்ந்து போற்றுபவனே நல்ல ஆண்மகன் ஆவான். பெண்களுக்கே உரிய கற்புத்திறனை ஆண்களும் பெறவேண்டும். பெற்று ஒழுக வேண்டும்.

*கற்பு நிலையென்று சொல்லவந் தார்இரு*
*கட்சிக்கும் அது பொதுவில் வைப்போம்*

என்பார் பாரதிதாசன். பெண்மையின் அன்புக்கும் ஆற்றலுக்கும் ஏற்றம் கொடுக்கும் நாடு உயரும் என்பதில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர் கவிஞர் பெருமகன் குலோத்துங்கன்.

*பெண்மை எனப்படும் காவியம் - புவி*
*பேணும் வலிமையின் பெட்டகம்*
*இன்பத்தின் ஊற்றெனினும், இம்பர் வாழ்வில் -*
*அன்புமது, ஆற்றலது, உயர்வு தேடும்*
*ஆசையது, அடிப்படைகள் அனைத்தும் பெண்மை*
*(கு.க.பக்கம்:436)*

தமது அன்னையைக் கண்கண்ட தெய்வமாகப் போற்றும் பண்புடைய கவிஞர் வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் பெண்களை வாயார நெஞ்சாரப் போற்றுவதற்கு ஒரு போதும் தயங்கியதில்லை. மேற்கண்ட கவிதை வரிகள் அவ்வுணர்வினைப் புலப்படுத்துகின்றன. போற்றுவதோடமையாது பெண்மையை, பெண்ணினத்தை ஓர் இயக்க சக்தியாக உந்து சக்தியாகக் காண்கிறார் அவர். இப்பெருமையைக் குலோத்துங்கன் ஆணினத்திற்குத் தரவில்லை என்பது கவனிக்கத் தக்கது.

பெண்மையைப் போகப் பொருளாக ஆண்கள் பார்ப்பதும், தம்மை அலங்காரப் பொருளாகப் பெண்கள் நினைப்பதும் மாற வேண்டும். மொழி, கலை, கல்வி, இலக்கியம், பொருளாதாரம், கணினிக்கல்வி, என அறிவுவாயில்கள்-அறிவுச்சாளரங்கள் திறந்து கொண்டேயிருக்கும் வாய்ப்புகளைப் புறந்தள்ளிவிட்டுப் பட்டும் நகையும் போதுமென்று பெண்கள் தம்மைச் சுருக்கிக் கொள்ளக் கூடாது. அவ்வையாரும், ஜான்சிராணியும், அன்னை தெரசாவும், இன்னும் இவர் போன்றோரும் உலகம் போற்ற உயர்ந்தது, தம் சாதனைகளால் மட்டுமே; பட்டாலும் பகட்டாலும் அன்று.

தர்க்க அடிப்படையிலும், அறத்தின் அடிப்படையிலும் அடிமைத் தனத்தை எதிர்க்க முடியாதவன், அடிமையாகவும், ஏழையாகவுந்தான் இருப்பான். தனித்துவமும் சமத்துவமும் ஒன்றையொன்று சார்ந்து இல்லாத இடத்தில் பெண்ணுரிமை மலராது. பெண்கள் தம் காலில் நின்று பொருளாதார வலிமை பெறாமல் சமத்துவமோ சுதந்திரமோ பெறுவது அரிதாகும். பெண்கள் தாம் வேளாண்மை நாகரிகத்தைத் தொடங்கி வைத்தவர்கள். நிலமும், நீரும் வளங்களாக இருந்த சமுதாயத்தில் அவர்கள் வேளாண்மையில் சமபங்கேற்றனர். இன்றும் அவ்வாறே. நிலவுடைமை மட்டும் அவர்களுக்கு இருந்திருந்தால் அவர்களது நிலை வேறாகியிருக்கும். சொத்துரிமை இல்லாது சார்ந்து வாழ்பவர்களாகவும் பயிற்சியின் அடிப்படையில் வேளாண் தொழில் புரிந்து, கல்வியின் ஒளியும், செல்வத்தில் வலியும் இழந்துநின்ற பெண்கள், சார்ந்து வாழ்பவர்களாக இருந்ததில் வியப்பில்லை. தொழில்யுகம் தொடங்கியவுடன் சமுதாயத்தில் மறுமலர்ச்சி ஏற்பட்டு, பொறியியல் துறையில் சில வளர்ச்சிகள் ஏற்பட்டதால் பெண்களும் பொருளாதார வலிமை பெற முடிந்தது. சமுதாயத்தின் முன்னேற்றத்துக்குப் பெண் கல்வி இன்றியமையாதது. ஆனால் குடும்ப அமைப்பு முறை உருவாகும் போதே பெண்களுக்குச் சில சமூகத் தடைகள, உருவாகத் தொடங்குகின்றன. மக்கட் தொகையில் சம எண்ணிக்கையுள்ள பெண்கள் கல்வி பெற்றால் ஒழிய, சமுதாயம் முழுவளர்ச்சி அடைய இயலாது என்பதை உணரத் தவறிவிட்டோம். தவற்றை உணர்ந்து சரி செய்ய வேண்டும்.

## கல்வியே கடைத்தேற்றம்

ஒரு பெண் திறன் பெற்றுத் திகழ வேண்டுமெனில் அவளுக்கு இளமையிலேயே நல்ல கல்வி அவசியமாகிறது. பெண்களின் உயர்வில்தான் நாட்டின் உயர்வு உள்ளது என்றுணர்ந்து பாடுபட்ட டாக்டர் முத்துலட்சுமியைத் தமிழகத்தின் "பெண் பொறியாளர்" என்று பாராட்டலாம். இந்தியாவின் முதல் பெண் மருத்துவர், தமிழகச் சட்ட மேலவையின் முதல் பெண் உறுப்பினர், புற்று நோய் சிகிச்சைக்கென முதல் சிறப்பு மருத்துவமனையை நிறுவியவர். திக்கற்ற பெண்களுக்கு அவ்வை இல்லம் நடத்தியவர். இவ்வளவு பெருமைக்கும் அவர் கற்ற கல்வியே காரணமாக இருந்தது. அவர் யாரிடமும் சமத்துவமோ சுதந்திரமோ வேண்டி நிற்க வில்லை. கல்வி வல்லமையால் அனைத்தும் பெற்றார். பாரதிதாசனுக்கு முன்பே பெண்கல்வி பற்றிச் சிந்தித்த வேதநாயகம்பிள்ளை பெண்கல்வியை வலியுறுத்தி, கல்வி கற்காத பெண்ணை மணம் செய்யக் கூடாது என்கிறார். கல்வி பெறாத பெண்களை,

*எழுத்தறிவில்லாதவள் மட்டி*
*ஏதுமறியாதவள் சுரண்டுவாள் சட்டி*
*கழுத்திலே அவளுக்குத் தாலியைக் கட்டி*
*காரியமில்லையது காசுக்கு நட்டி*

என்று மிகவும் கடுமையாகச் சாடுகின்றார். கல்லாத பெண்கள் உரிமையற்றவர்கள். கல்வியைப் பெறும் போதுதான் பெண் தனக்குரிய உரிமைகளை உணர்ந்து ஆணுக்கு நிகராக விளங்க முடியும். பாரதிதாசன்,

*கல்வியில்லை, உரிமையில்லை, பெண்ணுக்குக்*
*கடைத்தேற வழியின்றி விழிக்கின்றார்கள்*

என்று வேதனைப்படுகிறார். ஒரு காந்தத்தின் வட-தென்துருவங்கள் ஒத்த வலிமை கொண்டதாக இருப்பினும் வெவ்வேறானவை. ஒரு தராசின் இரண்டு தட்டுகளும் ஒத்தவை என்றாலும் வெவ்வேறானவை. அவ்வாறே ஆணும் பெண்ணும் எதிரெதிர் தளங்களில் சமநிலையானவர்கள். எனவே, பெண்கள் இயற்கையோடியைந்து நின்று, தங்களுடைய தனித்தன்மையைக் காத்துச் சமுதாயத்தில் சமவாய்ப்பினைப் பெறல் வேண்டும் என்பது குலோத்துங்கனின் விரிந்த பார்வையில் வித்தியாசமான நோக்கினைத் தருகிறது. அதனால்தான் பெண்களின் மென்மையே அவர்களது வலிமை என்று கூறுகிறார் குலோத்துங்கன்.

*'வன்மை' அன்று நம் வலிமையின் உரைகல்;*
*மலரின், தளிரின் வளரும் குருத்தின்,*

*மென்மையின் மென்மையவர் விறலினர் என்போம்;*
*'மென்மையின்' வலியது வேறெதுவுமில்லை*
*(கு.க.பக்கம்:172)*

சமீப காலத்தில் விண்வெளிப் பயணத்தில் சாதனை நிகழ்த்தியவர் கல்பனா சாவ்லா. இவர் போன்றோர் பெண்குலத்தின் வல்லாண்மை மிகுந்த மனவலிமையைப் பெற்றவர்கள் என்பதை இன்றைய பெண்கள் மனங்கொள்ள வேண்டும். பொருளாதார வாழ்வில், பெண்களுக்குரிய மென்மைத் தன்மைக் கேற்ப, பணிகளைக் கொடுப்பதிலோ, அதனை அவர்கள் ஏற்றுக் கொள்வதிலோ, ஏற்றத்தாழ்வுகளுக்கு இடமில்லை. அண்மைக் காலங்களில் ஏற்பட்ட மாற்றங்கள் பெண்கள் பொருளாதார விடுதலை பெற உகந்ததாக அமைந்துள்ளன. கணிப்பொறி, தொலைத்தொடர்பு, உயிரியல் தொழில்நுட்பம், அறிவியல் தொழில்நுட்ப ஆய்வு ஆகியவற்றில் பெண்கள் ஆடவரினும், அதிக அளவில் பங்கு பெற்று வருகின்றனர். இது மகிழ்ச்சிக்குரிய வளர்ச்சியாகும். இன்றைக்கு அனைத்து நாடுகளிலும் முதன்மைப் பிரிவு (Primary sector) சார்ப்பிரிவு (Secondary Sector) என்பதோடு பெரிய அளவில் சேவைப்பிரிவு (Service Sector) ஆகியவற்றிலும் தங்கள் திறனைக் காட்டும் வாய்ப்பினைப் பெற்று வருகின்றனர்.

தாய்மையும், மென்மையும், எழிலும் பெண்களுக்கு இயற்கையின் நன்கொடை. அவற்றைப் பெற்ற பெண்கள் பெருமிதம் கொள்ள வேண்டும். "கிரிட்டிகல் மாஸ்" (Critical mass)என்ற எடை வரம்பைத் தாண்டிய அணுசக்தி அழிவு சக்தியாகிறது. அந்த வரம்பிற்குட்பட்ட அணுசக்தி எதையும் சாதிக்கவல்ல சக்தியாகிறது. அத்தகைய ஆக்க சக்தியின் மொத்த உருவமாகத் தங்கள் பெண்தன்மையை இழக்காது, பெண்களெனும் பெருமிதத்துடன், சமவாழ்வு பெறவேண்டும். இதுவே அவர்களுக்கும் மனித குலத்திற்கும் ஏற்றதொன்றாகும். மேல்நாட்டு மோகம் மோதுவதால் உடை, உணவு, உணர்வு மாற்றங்களால் பெண்மை புனிதத்தை இழந்துவிட்டதாகவும், அவளுடைய பளிங்கு போன்ற தெளிவனைத்தும் பழங்கதை என்றும், கலங்கிய சேறுதான் இன்றைய நிலை என்றும், பெண்மையின் இலக்கணத்தை மாற்றி எழுதிடத் தரங்கெட்ட சிலவகை ஊடகங்களும் இலக்கியங்களும் வரிந்து கட்டிக் கொண்டு நிற்கின்றன. இலக்கியம் சமூகத்தைக் குற்றம் கூறச் சமூகம் இலக்கியத்தைக் குறை கூற ஒரு நச்சு வட்டம் தற்போது உருவாகி விட்டது. கலை, ஓவியம் என்ற பெயரில் மனவிகாரங்களைத் தூண்டும் வக்கிர உணர்வுகளை வெளிப்படுத்தும் நிலை, தடை செய்யப்படவேண்டும்.

கலைகளின் முக்கிய நோக்கம் மனித குலத்தின் முன்னேற்றமாக இருக்க வேண்டும். கலைகளால் மனித நாகரிகம்

மேம்பாடடைய வேண்டும். கலையும் நாகரிகமும் மனித குலத்தின் எல்லா வகையான நன்மைகளுக்கும் ஆதாரமாக இருக்கவில்லையென்றால் நம்முடைய அறிவியல் முன்னேற்றம் பொருளற்றதாகிவிடும். நமது அறிவுத்திறனை வெளிநாடுகளுக்கு விற்றுவிட்டு நமக்கு வேண்டாத பழக்கவழக்கங்களை வாங்கி வருகிற போக்கு நல்லதன்று. சரிவை நோக்கி ஓடும் இச்சறுக்கலைத் தடுப்பதில் பெண்மைக்கு மிகப்பெரிய பங்குண்டு. பெண்ணினம் விழித்தெழ வேண்டும். ஆக்கவழியிலான சிந்தனைகளைச் செயல்படுத்தித் தம் ஆற்றலை மெய்ப்பித்திட வேண்டும். பெண்ணினம் வீறு கொண்டெழுந்து வேண்டாதவற்றை அவை எங்கிருந்து வந்தாலும் வேரோடு வெட்டி வீழ்த்த வேண்டும். முளைத்த இடத்தைத் தீய்த்துவிட வேண்டும். பெண்ணினம் கடந்து வந்த பாதையைப் பற்றி இனி வருந்த வேண்டியதில்லை; கவலைப்பட வேண்டியதில்லை.

*நேற்றினும் இன்று நன்று*
*நிகழ்வதின் நாளை நன்று*

*(மா.யா; பாகம்-3. பாடல்:1088)*

என்ற குலோத்துங்கனின் வரிகளை மனதில் கொண்டு சென்று சேர வேண்டிய இலக்கினை எண்ணிப் பயணம் செய்ய வேண்டும்.

## 8. வா.செ.குழந்தைசாமி அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

கரூர் மாவட்டம் வாங்கலாம் பாளையம் என்ற சிற்றூரில் 14.07.1929இல் பிறந்தவர். இந்தியா, ஜெர்மனி, அமெரிக்கா ஆகிய நாடுகளில் கல்வி பயின்றவர். நீர்வளத் துறையில் டாக்டர் பட்டம் பெற்றவர்.

நீர்வளத் துறைப் பேராசிரியர்; தமிழகத் தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்; UNESCO ஆலோசகர்; மதுரை காமராசர் பல்கலைக்கழகம்; அண்ணா பல்கலைக்கழகம், இந்திரா காந்தி தேசியத் திறந்த நிலைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் துணைவேந்தர் போன்ற பொறுப்புகளை வகித்தவர்.

நீர்வளத் துறையில் இவரது பங்களிப்பு Kulandaiswamy Model என்ற பெயரில் அத்துறை இலக்கியத்தில் இடம் பெற்றுள்ளது. உலக அளவில் நீர்வளத் துறை அறிஞர்களால் மதிக்கப்படுபவர்.

பல்கலைக்கழக மானியக் குழுமம் (U.G.C.), அனைத்திந்தியத் தொழில் நுட்பக் கல்விக் கழகம் (AICTE), அனைத்திந்தியத் தொழில் பயிற்சிக் கல்விக் குழு, தமிழகத் திட்டக் குழுமம் போன்ற பல நிறுவனங்களில் உறுப்பினராக இருந்தவர். சர்வ தேசியத் தொலை நிலைக் கல்விக் கழகத்தில் ஆசியாவின் துணைத் தலைவராகவும் (Asian Vice-President; International Association for Distance Education), காமன் வெல்த் நாடுகளின் பல்கலைக்கழகக் கழகத்தில் (Association of Common Wealth Universities, London) தலைவராகவும், இந்தியப் பல்கலைக் கழகங்கள் கழகத்தின் (Association of Indian Universities) தலைவராகவும் இந்தியத் தொழில் நுட்பக் கல்விச் சங்கத்தின் (Indian Society for Technical Education) தலைவராகவும் பணியாற்றியவர்.

ஆர்வம் காட்டும் மற்ற துறைகள்: தமிழ் வளர்ச்சி, தமிழ் இலக்கியம், தமிழ் எழுத்துச் சீரமைப்பு. 'பொன்னி' இதழ் 1948இல்

பாரதிதாசன் பரம்பரையில் அறிமுகப்படுத்தியது. 'குலோத்துங்கன்' என்ற புனை பெயரில் இவருடைய கவிதைகள் ஏழு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இவருடைய உரைநடை நூல்கள் பல்கலைக்கழகங்களில் பாட நூல்களாக இடம்பெற்றன. தமிழ் வரிவடிவச் சீரமைப்பு இவர் மிகுந்த ஈடுபாடுகாட்டும் மேம்பாட்டுப் பணி ஆகும். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் *1980*இல் D.Litt., பட்டம் கொடுத்துச் சிறப்பித்தது. கௌரவ டாக்டர் பட்டம் வழங்கியுள்ள மற்ற பல்கலைக்கழகங்கள்: அழகப்பா பல்கலைக்கழகம், D.Sc., *(1997)*; பாண்டிச்சேரி பல்கலைக்கழகம், D.Litt., *(1997)*; ஜவகர்லால் நேரு தொழில் நுட்பப் பல்கலைக்கழகம், Ph.D., *(1999)*; இந்திராகாந்தி தேசியத் திறந்த நிலைப் பல்கலைக்கழகம் D.Litt, *(2000)*; கர்நாடகா திறந்த நிலைப் பல்கலைக்கழகம், மைசூர், D.Litt., *(2002)*; Dr. B.R. அம்பேத்கர் திறந்த நிலைப் பல்கலைக்கழகம், ஹைதராபாத், D.Litt., *(2002)*.

இவர் பெற்றுள்ள விருதுகள் பல. அவற்றுள் குறிப்பாகச் சில: 'வாழும் வள்ளுவம்' என்ற நூலுக்குச் 'சாகித்ய அகாதெமி' விருது *(1988)*; இந்திராகாந்தி தேசிய ஒருமைப்பாடு விருது *(1988)*; கல்விக்காக U.G.C. விருது *(1990)*; மைய வேளாண்மை வாரியத்தின் வைர விழாச் சிறப்பு விருது *(1991)*; தமிழக அரசின் திருவள்ளுவர் விருது *(1999)*; ராஜா சர்அண்ணாமலை செட்டியார் விருது *(2005)*; டாக்டர் ராஜா சர் முத்தையா செட்டியார் விருது *(2008)*; முரசொலி கலைஞர் விருது *(2008)*; தமிழ்நாடு அறக்கட்டளை, U.S.A. சாதனையாளர் விருது *(2008)*; அண்ணா நூற்றாண்டின் பாவேந்தர் பாரதிதாசன் விருது *(2009)*; போன்றவற்றைப் பெற்றிருக்கிறார்.

இந்தியப் பொறியியலாளர் நிறுவனம், இந்தியாவின் சிறந்த பொறியியல் வல்லுநர்களில் ஒருவராக அறிவித்தது *(1991)*. வான்கூவர் (கனடா) காமன்வெல்த் கல்வி நிறுவனம் (COL) அதன் கௌரவ உறுப்பினராக (Honorary Fellow) ஆக்கிப் பெருமைப் படுத்தியது *(1999)*.

குடியரசுத் தலைவர், கல்வி-அறிவியல் துறையில் இவர் செய்த பணிகளுக்காக 1992இல் 'பத்மஸ்ரீ' விருதையும், அறிவியல்-தொழில் நுட்பத் துறையில் இவர் செய்த சேவை, படைத்த சாதனைகளுக்காக 2002இல் 'பத்ம பூஷண்' விருதையும் வழங்கிக் கௌரவித்தார்.

இந்தியாவில் உள்ள தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் தலையாயதான I.I.T. Kharagpur, அதன் 50ஆவது ஆண்டு நிறைவு விழாவினையொட்டி அந்நிறுவனத்திலிருந்து அதுவரை பட்டம் பெற்ற 35000த்திற்கு மேற்பட்ட பழைய மாணவர்களில் தலைசிறந்த இருவரில் ஒருவராக இவரை 2003இல் தேர்ந்தெடுத்தது.

தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் (I.I.T.S.) துணைத் தலைவர், தமிழ் இணையக் கல்விக்கழகத்தின் (Tamil Virtual Academy) நிறுவனத் தலைவர், டாக்டர் உ.வே.சா. நூல் நிலையத்தின் தலைவர், மைய அரசு நிறுவியுள்ள செம்மொழித் தமிழ் மத்திய ஆய்வு நிறுவனத்தின் Apex Committee துணைத் தலைவர் போன்ற பல பொறுப்புகளை வகித்து வருகிறார்.

# துணை நூல்கள்


1. குலோத்துங்கன், வா.செ., மானுட யாத்திரை-பாகங்கள்,1,2,3, பாரதி பதிப்பகம், சென்னை-17.
2. குலோத்துங்கன் கவிதைகள், பாரதி பதிப்பகம், சென்னை-17.
3. குலோத்துங்கன், வா.செ., வாழும் வள்ளுவம், பாரதி பதிப்பகம், சென்னை-17.
4. குலோத்துங்கன், வா.செ., சமுதாயச் சிந்தனைகள், பாரதி பதிப்பகம், சென்னை-17.
5. குலோத்துங்கன், வா.செ., பாரதியின் அறிவியல் பார்வை, பாரதி பதிப்பகம், சென்னை-17.
6. குலோத்துங்கன், வா.செ., செவ்வியல் மொழி முதல் சேதுசமுத்திரம் வரை, பாரதி பதிப்பகம், சென்னை-17.
7. குலோத்துங்கன். வா.செ., அறிவியல் தமிழ், பாரதி பதிப்பகம், சென்னை-17.
8. பாவை சந்திரன், ஈழத்தமிழரின் போராட்ட வரலாறுகள் (பகுதி-1&2), கண்மணி கிரியேட்டிவ் வேவ்ஸ் வெளியீடு, சென்னை-17.
9. தொல்காப்பியம், சாகித்ய அகாதமி, புதுடில்லி-1.
10. பன்னீர்செல்வம், சு.கு., குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம், உலகத் தமிழ்ராய்ச்சி நிறுவனம், சென்னை-113.
11. இராசமாணிக்கனார், மா. தமிழ் நாகரிகமும் பண்பாடும், பாரிநிலையம், சென்னை-1.
12. சிவத்தம்பி, கா. தமிழ் இலக்கியத்தில் மதமும், மானுடமும், அஞ்சுகம்அச்சகம், சென்னை, மு.ப.1983.
13. நெடுமாறன், பழ., தலையாய தொண்டு, முன்னுரை, ஈழத்தமிழரின் போராட்ட வரலாறு.
14. கலாநிதி முருகர் குணசிங்கம், இலங்கைத் தமிழர், எம்.வி.வெளியீடு, தென் ஆசியவியல் மையம், சிட்னி பதிப்பு, 2008.
15. தங்கதுரை, நாம் வன்முறை மீது காதல் கொண்ட மனநோயாளிகள் அல்லர் (நீதிமன்ற பேச்சு), டெலோ வெளியீடு.
16. அறவாணன், க.ப., தமிழர்மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள், தமிழ்க்கோட்டம், புதுச்சேரி-5, 1994.
17. சுத்தானந்தபாரதி, தமிழ் உணர்ச்சி, புதுக்கோட்டை, மு.ப.1974.

18. சுப்புரெட்டியார், நா., புதுக்கவிதை போக்கும் நோக்கும், நாவல் ஆர்ட்பிரிண்டர்ஸ், சென்னை.

19. தேவநேயன், ஞா., ஒலியியல் மொழிநூல், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1, 1965.

20. பாரதியார், பாரதியார் கவிதைகள், பூம்புகார் பிரசுரம், சென்னை, 1976.

21. பாரதிதாசன், பாரதிதாசன் கவிதைகள், அருள்சுடர் பதிப்பகம், சென்னை-87.

22. Dr.V.C. Kulandaisamy, The Immortal Kural, Sahitya Akademy, New Delhi-110 001.

23. Prema Nandakumar, Kulothungan: A Poet of Today and Tomorrow, Viva Books Private Limited, New Delhi-110 002.

24. குலோத்துங்கன, வா.செ., பாரதியின் அறிவியல் பார்வை, பாரதி பதிப்பகம், உஸ்மான் சாலை, தி.நகர், சென்னை-17.

25. யோகீஸ்வரன், பி., வா.செ.குழந்தைசாமி தமிழ்க்கவிதையில் சமுதாயச் சிக்கல்கள், நீலா பதிப்பகம், சென்னை-17.

26. சாலை இளந்திரையன், புரட்சி முழக்கம், பூம்புகார் பதிப்பகம், சென்னை-17, 1978.

27. மித்ரா, பாவேந்தரின் புதியதோர் உலகம் செய்வோம், மணிமேகலைப் பிரசுரம், தி.நகர், சென்னை-17, மு.ப., 1999.

28. குழந்தைசாமி, வா.செ., இது கல்வியுகம், பாரதி பதிப்பகம், தி.நகர், சென்னை-17, மு.ப., 2001.

29. நன்னன், பெரியாரியல் கணினி தொகுதி-II, பூம்புகார் பதிப்பகம், 63-பிரகாசம் சாலை, சென்னை-108, முதற்பதிப்பு, 1996.

30. பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம், பெரியாரின் சுயமரியாதைப் பிரச்சார நிறுவனம், 50, ஈ.வெ.கி. சம்பத் சாலை, சென்னை-7, நான்காம் பதிப்பு, 1978.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

## சென்னை - 600 113

## அண்மை வெளியீடுகள்

| | ரூ. பை. |
|---|---|
| அரங்கேற்றுக்காதை ஆராய்ச்சி | 140.00 |
| பழந்தமிழ் அமைப்பியல் மற்றும் குறியியல் ஆய்வுகள் | 45.00 |
| **Essays and Tributes on Tirukkural (1886-1986)** | 100.00 |
| இந்தியச் சூழலில் மொழி இழப்பு ஒரு சமுதாய மொழியியல் பார்வை | 60.00 |
| பழந்தமிழில் அறிவியல் | 45.00 |
| நீறணி பவளக் குன்றம் | 35.00 |
| உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார் | 35.00 |
| கலீலியோ முதல் கலாம் வரை | 35.00 |
| குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம் | 60.00 |
| தமிழறிஞர் அடிகளாசிரியரின் சிறுவர் இலக்கியப் பாடல்கள் | 30.00 |
| நாமக்கல் கவிஞரின் தமிழ்ப்பணி | 30.00 |
| ஈழத்தில் கண்ணகி கலாச்சாரம் | 30.00 |
| சிறுபஞ்சமூலம் – ஒரு சமூகவியல் பார்வை | 30.00 |
| மீளும் வரலாறு – அறியப்படாத நந்தனிக் கதை | 40.00 |
| சங்கத் தமிழ் பகுதி 1 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 2 | 100.00 |
| சங்கத் தமிழ் பகுதி 3 | 115.00 |
| சங்கத் தமிழ் பகுதி 4 | 130.00 |
| சங்கத் தமிழ் பகுதி 5 | 110.00 |
| ம.பொ.சி.யின் வாழ்க்கை வரலாறு இலக்கியங்கள் | 60.00 |
| தொல்காப்பியம், சங்க இலக்கியம் பதிப்பும் பதிப்பாளரும் | 160.00 |
| இந்தி நாடகப்பனுவல் (ஆடிமாதத்தில் ஒரு நாள்) | 50.00 |
| திராவிட இயக்கத்தில் அன்னை மணியம்மையின் பங்கு | 40.00 |
| பண்பாட்டுப் பார்வையில் திருமந்திரம் | 70.00 |
| காரைக்கால் அம்மையார் பாடல்கள் ஓர் ஆய்வு | 40.00 |
| **Freudism in the Novels of James Joyce and T.Jankirman - a Comparative study** | 125.00 |
| இலக்கணத்தொகை யாப்பு பாட்டியல் | 290.00 |
| தென்கிழக்கு ஆசியா நாடுகளில் தமிழ்ப்பண்பா | 310.00 |
| பதிற்றுப்பத்து மூலமும் ஆராய்ச்சிப்புத்துரையும் | 170.00 |
| தமிழ் மொழிபெயர்ப்பு முன்னோடிகள் | 185.00 |
| மனிதப் புனிதர் கக்கன் | 110.00 |
| மொழிபெயர்ப்பு – ஒரு கவின்கலை | 75.00 |
| மூவர்தமிழ் மூன்று பார்வைகள் | 50.00 |
| காமன்வெல்த் நாடுகளின் கவிதைகள் | 100.00 |
| அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா | 145.00 |
| அறிஞர் அண்ணா–மொபசான் சிறுகதைகள் – ஒப்பாய்வு | 160.00 |
| இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள் | 55.00 |
| கடலடியில் தமிழர் நாகரீகம் | 55.00 |
| கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்) | 150.00 |
| சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள் | 55.00 |

**687** கவிஞர் குலோத்துங்கனின் மானுட யாத்திரை
காவிய வானில் புதிய தாரகை **50.00**